

றோலர் பிரச்சினையால் மூன்று கிலோமீற்றருக்குள் முடங்கிக்கிடக்கும் கடற்றொழில்

- பிரான்சிஸ் (கடற்றொழிலாளர் சமாசத்தலைவர்)

வறுமையை எல்லோரும் இணைந்தால் ஒழிக்கலாம்

- க. பரந்தாமன் (நெடுங்கேணி பிரதேச செயலர்)




# புதிய வன்னி

PUTHIYA WANNI

மாத இதழ்


ஏப்ரல்-2015 | இதழ்-06 | விலை-50/-




## காணாமற்போகடிக்கப்பட்டோரைக் கண்டறிவது எப்படி?

## மாற்றம் - அரசியல் பண்பாட்டின் வழியாகவே நிகழவேண்டும்

## முறிகண்டியில் நடப்பது என்ன?




தொடர்புகளுக்கு
0776903689

இல:04 D10 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.





**கட்டுரை**

ஒரு ரக்ரர் லோட் மணலில் வீடு அமைக்க முடியுமா? -03
– குமுதன்

வன்னியில் தொழில் வாய்ப்பின்மையும் சவாலான எதிர்காலமும்? -06-
–மு.தமிழ்ச்செல்வன்

நெடுங்கேணி வைத்தியசாலை - 23
–அப்பு

காணாமல் போகடிக்கப்பட்டோரை கண்டறிவது எப்படி? -37
முத்தையா சசிக்குமார்

வடக்கின் ஆசிரியர் வளம் எப்போது சீர்செய்யப்படும்? -41
சிவபெருமான்

சம்பத்த நுவர -43
சி. கதிராசிப்பிள்ளை

முறிகண்டியில் நடப்பது என்ன? -44
சோகிதா தேவராஜா

வன்னியின் வளச் சுரண்டல்கள் -48
சின்னராசு

**நேர்காணல்**

எல்லோரும் இணைந்து செயற்பட்டால் வறுமையை ஒழிக்க முடியும்? -10
– க.பரந்தாமன்

றோலர் பிரச்சினை -16
– யோ.பிரான்சிஸ்

**பத்தி**

கே.பாலச்சந்தர் - அவர் ஒரு தொடர்கதை -27
– எஸ்.கிருஸ்ணமூர்த்தி

சொல்லியே தீரணும் -18
– தமிழ்க்கவி

இலங்கையில் மாற்றம் அரசியல் பண்பாட்டின் வழியாகவே நிகழ வேண்டும்-24
– கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

**பொது**

நடக்கும் ஆனால் நடக்காது -20
பெருமாள் விநாயகன்

சின்னச்செய்தி பெரிய சங்கதி -21

**சிறுவர் பகுதி**

பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம். -29
இயல்வாணன்

**கவிதை**

காலப்பிழை -31
வெளிவாசல் பாலன்

கடலும் கரையும் -47

**கல்வி**


நினைவின் காயம் -35
சஞ்சயன் செல்வமாணிக்கம்

# புதிய வன்னி

PUTHIYA WANNI

மாத இதழ்

இதழ் 06 மார்ச் – ஏப்ரல் 2015


ஆசிரியர்
கருணாகரன்

ஆசிரியர் குழு
மு.தமிழ்ச்செல்வன்
சோதிதா தேவராஜா
ந.சதீஸ்

வடிவமைப்பு
தீபன்

விளம்பரம்
சிவா

அச்சுப்பதிப்பு
மதி பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.



முகவரி
புதிய வன்னி,
இல- 24,
06 ஆம் ஒழுங்கை,
குமரபுரம், பரந்தன்,
கிளிநொச்சி.

இணையத்தளம் :
www.newwanni.com
மின்னஞ்சல் :
puthiyawanni@gmail.com


## மாற்றம் என்பதற்கான முயற்சி நம்பிக்கை மாற்றத்திலேயே ஏற்பட வேண்டும்.

'மாற்றம் வேண்டும்', 'மாற்றத்துக்காக' என நடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து நடந்திருப்பது என்ன வகையான மாற்றம்?

உண்மையான ஆட்சி மாற்றமா? அல்லது அதிகார மாற்றமா? இந்தக் கேள்விகள் இன்று பல தரப்பிலும் எழுந்திருக்கிறது.

உண்மையில் நடந்திருப்பது ஆட்சி மாற்றம் என்றால், அந்த மாற்றம் எத்தகைய பண்புநிலை மாற்றமாக அமைந்திருக்கிறது? அந்த மாற்றங்களின் மூலமாக மக்களுக்கு கிட்டியிருக்கும் நன்மைகள் என்ன? அதிலும் தமிழ் பேசும் மக்களுக்கு 'சிறுபான்மைச் சமூகத்தினருக்கு' விளைந்த பலன்கள் எவை

இலங்கை அரசியல் மிகச் சிக்கலும் பல முரண்களும் கொண்டது. இன நிலைப்பட்ட அரசியல் சிந்தனையே இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த அரசியலில் ஒவ்வொரு சமூகங்களும் தத்தம் நிலை நின்றே சிந்திக்கின்றன. அதன்வழியாகவே நிலைப்பாடுகளை எடுக்கின்றன.

அப்படியென்றால், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் எதிர்பார்ப்புக்கும் அவைகளின் தேவைகளுக்குமான மாற்றத்தையும் தீர்வையும் தற்போதைய புதிய ஆட்சி ஏற்படுத்தியிருக்கிறதா? என்றால், இல்லையென்றே சொல்லப்படுகிறது.

புதிய ஆட்சியிலிருக்கும் பிரதமருக்கும் வடக்கின் முதலமைச்சருக்கும் இடையில் இருக்கும் முரண்கள் தொடக்கம், கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை அமைப்பதில் நடந்த இழுபறிகள் மற்றும் தேர்தல்கால வாக்குறுதிகளுக்கு மாறாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பிடிவாதமான நிகழ்ச்சிகள் வரையில் சுமூகமான நிலை இல்லை என்பது வெளிப்படையானது.

இப்படியான நிலையில் எப்படி மாற்றம் நிகழ முடியும்?

ஆகவே மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளனரா?


தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களும் எதிர்பார்த்த போர்க்குற்ற விசாரணை, அதற்கான ஐ.நாவின் பிரேரணை தொடக்கம் வடக்குக் கிழக்கிலிருந்து படைவிலக்கல், நிலமீட்பு போன்ற விடயங்களும் நிறைவேறாத நிகழ்ச்சிகளாகவே உள்ளன.

குறைந்தபட்சம் பொது நிகழ்ச்சிகளில் கூட ஒன்றிணைந்து செயற்படவும் தீர்மானங்களை எடுக்கவும் கூடிய பக்குவ நிலையும் ஒன்றிப்பும் ஏற்படாத ஆட்சி மாற்றம் என்ன நன்மைகளைத் தந்து விடப்போகிறது? என்ற கேள்வியும் நம்பிக்கையீனமுமே மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு யார் பொறுப்பு?

நம்பிக்கைகளே எப்பொழுதும் சிறுபான்மைச் சமூகங்களைக் கைவிடுகின்றனவா? அல்லது தவறான நம்பிக்கைகளைச் சிறுபான்மைச் சமூகங்கள் கைக்கொள்கின்றனவா? என்றால், தவறான நம்பிக்கைகளின் பின்னே அவர்கள் செல்வதால்தான் இந்தப் பின்னடைவும் தோல்வியுமாகும்.

**ஆகவே, மாற்றம் என்பதற்கான முயற்சி என்பது சிந்தனை மாற்றத்திலேயே நம்பிக்கை மாற்றத்திலேயே ஏற்பட வேண்டும்.**



குமுதன்

"ஒரு ரக்ரர் லோட் மணலை வீட்டுக்கு கொண்டு வந்து சேர்க்கிறதுக்கு மூன்று நாள் எடுக்குது. ஒரு லோட் மணலில் வீட்டக் கட்டி முடிக்கச் சொல்லுற புதின-மும் இங்கதான் நடக்குது. இப்படிப்போனால் எப்பதான் வீட்டக் கட்டி முடிக்கிறது? என்று கிராம சேவையா-ளர் அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த ஒரு நபர் பேசிக்கொண்டிருப்பதை அவதானித்தேன்.



# ஒரு ரக்ரர்லோட் மணலில் வீடு அமைக்க முடியுமா?

'ஒரு ரக்ரர்லோட் மணலில் வீடு கட்ட முடியுமா? அந்தத் தொழி-ல் நுட்பத்தை யார் சொல்லித் தருகினம்?" எண்டு இன்னொருவர் நகைச் சுவையாக கதை கொடுத்தார்.

அதற்கு முன்னர் பேசிய நபர், 'எங்கட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் தான்" என்றார்.

கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அதுபற்றி அறிய ஆவலாக இருந்தது. அந்த நபரிடம் போய் விளக்கம் கேட்டன்.

'ஓம் தம்பி. வீட்டுத் திட்டத்தை தந்து போட்டு, மணலை எடுக்க முடியாமல் செய்து போட்டாங்கள். ஒரு வீட்டுத் திட்டத்திற்கு ஒரு லோட்டுக்குத்தான் மணல் போமிற் தாராங்கள். அதுவும் கிழமை-யில் ஒரு நாள் தான் எடுக்கலாம். மாதத்தில ஒரு லோட்டுக்குத்தான் அனுமதி கிடைக்கும். இப்படிப் போ-னா ஒரு வீட்டைக்கட்டி முடிக்க மூன்று வருசமெடுக்கும் போல கிடக்குது" என்றார்.

இந்நிலையில் இதுபற்றி அறிய வேண்டும் என்ற ஆவலில் தேடலை மேற்கொண்ட போது இது தொடர்பாக மேலும் சில விடயங்களை அறியமுடிந்தது.

அதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தப் பாதிப்புகளை அதிகமாக எதிர்கொண்டது புதுக் குடியிருப்பு பிரதேசமே என்பது உலகறிந்த உண்மை. அத்தோடு மிகத்தாமதமாக மீள் குடியேற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட பகுதி அது. இதனால் அங்கு பொதுவான கட்டுமான அபிவிருத்திகள் ஓரளவு நிறைவாக இருக்கின்ற போதும், மக்களுக்கான வீடமைப்புப் பணிகள் இன்னமும் நிறைவடையவில்லை.

பல கிராமங்களில் இப்போது தான் வீட்டுத்திட்டங்கள் வழங்கப் பட்டுள்ள நிலையில், மக்கள் ஆர்வத்துடன் கட்டுமானப் பணிக-ளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீட்டுத்திட்டத்தைப் பொறுப் பேற்று நடைமுறைப்படுத்தும் நிறு வனத்தின் தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள் வேலைகளை விரைவாக முடிக்க வேண்டுமென மக்களிடம் கோரி வருகின்றனர். ஆனால், மக்கள் கட்டுமானப் பணிகளை மேற்

கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஏனெனில், இப்பகுதிகளில் கட்டுமாணத்திற்குத் தேவையான மணலைப் பெ-றமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

மீள்குடியேற்றத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் 2015 இன் ஆரம்ப காலம் வரை இப்பகுதிகளில் காணப்பட்ட மணல்வளம் முற்றாக சூறையாடப்பட்டு விட்டது. தென்பகுதியில் இருந்து வந்த சில வியாபாரிகளுக்கு இப்பிரதேசத்தில் உள்ள மணல் வளம் அதி-கமாக காணப்பட்ட பகுதிக-ளில் மணலை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி மணலை அகழ்ந்து விற்பனை செய்து விட்டு அதிக



வருமானத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டனர்.

இதைப்பற்றிய புகார்களை இந்தப் பிரதேச மக்கள் நிர்வாக ரீதியாக சிவில் அதிகா-ரிகளிடமும் பொலிஸாரிடமும் கனிய வளங்கள் பாதுகாப்புத் திணைக்களத்தினரிடமும் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால், உரிய நடவடிக்கைகளை எந்தத் தரப்பும் எடுக்கவில்லை. இதனால், கட்டற்ற முறையில் வெளியாட்கள் தாங்கள் கைவரி சையைக் காட்டினார்கள். விளைவு பிரதேசத்தின் மணல் வளம் கொள்ளையடிக்கப்பட்டது. இதற்கு மறைமுகமாக அரச ஆதரவு இருந் தது என்பதே மக்களின் நம்பிக்கை. அதில் உண்மையும் உண்டு.

இதனால், தமது வீடுகளுக்கு அருகில் இருக்கின்ற மணலையே மக்கள் தென்பகுதி வியாபாரிக-ளிடம்
அதிக விலைகொடுத்து வாங்கி வீட மைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அதிக விலை கொடுத்தாலும் தமது தேவைக்கு மணல் கிடைக்கின்றதே என்ற நிலையில் மக்கள் இந்த விட யத்தைப் பற்றி அலட்டிக்கொள்ள வில்லை. இதை விவகாரமாக்கினால் தாங்களுக்கு கூடிய விலைக்கே மணல் இல்லாமற் போய் விடக்கூடும் என்ற ஒரு வகையான எண்ணம், அச்சம் மக்களிடம் இருந்ததே இதற்குக் காரணம்.

எனவே, நாளுக்குநாள் வியா-பாரம் சூடுபிடித்தது. ஏற்றுமதிகள் அதிகரித்தன. மணல் காணப்பட்ட எல்லாப் பகுதிகளும் அகழப்பட்டன. இப்போது மணல் வளம் அரிதாகி விட்டது. அதனால் அவர்கள் வியாபாரத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டனர். அவர்களுக்கான அனுமதிகள் ரத்து செய்யப்பட்ட தாகவும் கூறப்படுகின்றது. இன்று உள்ளூர்வாசிகள் வீட்டுத் திட்டங்களுக்குரிய வேலைகளை முன்னெடுப்பதற்குகூட மணலைப் பெறமுடியாதுள்ளனர்.

"ஒரே தடவையில் குறித்த சில ரக்ரர் லோட் மணலை அகழ்வதற்கான அனுமதியை பிரதேச செயலகம் வழங்கினால் என்ன? என்று கேட்கப்பட்டபோது இயற்கை வளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காகவே அனு-மதி ஆகக்குறைந்த அளவு மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறாயின்.

கடந்த காலங்களில் மக்களின் காலடியில் பெருகிக்கிடந்த வளத்தை சூறையாடுவதற்கு சட்டரீதியாக அனுமதி வழங்கும் போது இயற்கை வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எந்த அதிகாரிகளின் மனங்களிலும் தோற்றாமல் போனது ஏன்?"

இறுதி மாரிகாலத்தில் பெய்த மழையினால் ஒதுக்கப் பட்ட மணல் ஆங்காங்கே காணப் படுகின்றன. அவற்றை எடுத்து வீட்டுத்திட்ட கட்டுமாண வேலை களை மேற்கொள்வதற்கு மக்கள் முயற்சிக்கின்றனர். அதற்கான அனுமதியை பெறுவதற்காக அவர்கள் பிரதேச செயலகங்களை நாடிச் செல்கின்றனர். கனியவளத் திணைக்களமே மணலை அகழ் வதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்ற நடைமுறை இருந்த போதும், வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆகக்குறைந்த அளவு மணலை அகழ்வதற்கான அனுமதியை பிரதே-தச செயலகங்கள் வழங்க முடியும் என்ற விசேட நடைமுறைக்கமைவாக பிரதேச செயலகங்கள் வரை யறைக்குட்பட்டு அனுமதிகளை வழங்கி வருகின்றது. அதற்கமை வாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் ஒரு பயனாளிக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ரக்ரர் லோட் மணல் என்ற அடிப்படையில் அனு-மதி வழங் கப்படுகின்றது.

ஆனாலும், மக்கள் மணலை எடுப்பதில் நடைமுறை ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு இரண்டு விடயங்களை முதன்மைக் காரணங்களாகக் குறிப்பிடலாம். ஒன்று மண்வளம் ஏற்கனவே சூறையாடப்பட்டுவிட்டதால் மணலைப் பெறமுடியாதுள்ளது.

அடுத்து மக்கள் மணலை எடுப்பதற்கான அனுமதியைப் பெறுவதில் எதிர்கொள்ளப்படும் நடைமுறைப்பிரச்சினைகள்.

மக்களின் வீடுகளுக்கு அண்மையாக காணப்பட்ட. ஆறுகளுக்குக் கிட்டவாக இருந்த மணல் வளம் ஏற்கனவே ஆறையாடப்பட்டுவிட்டதால் பல கிலோமீற்றர்களுக்கு அப்பால் மணல் காணப்படும் பகுதிகளைத் தேடிச் சென்று மக்கள் மணலைப் பெறவேண்டிய நிலையில் உள்ளனர்.

அவ்வாறு பெறத் தயாராக இருக்கும்போதும் பிரதேச செயலகத்தில் அனுமதியைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வாரத்திற்கு ஒரு தடவைமட்டுமே அதற்கான அனுமதி
வழங்கப்படுகின்றது. அதுவும் ஒரு ரக்ரர் லோட் மணலுக்கு மட்டுமே ஒருதடவை அனுமதி வழங்கப்படுகின்றது. கனிம வளங்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு என்று இதற்குக் காரணம் சொல்லப்படுகிறது. அப்படியானால், இதுவரையும் வெளியார் வந்து கணக்கு வழக்கில்லாமல் மணல் அகழும்பொழுது கனிம வளம் பாதிக்கப்பட்டதைப் பற்றியோ, இயற்கை வளம் சிரழிக்கப்பட்டதைப் பற்றியோ ஏன் கவலைப்படவில்லை என்று கேட்கிறார்கள் மக்கள்.

இப்பொழுது ஒருநாள் முழுவதையும் செலவு செய்து மணலுக்கான அனுமதியை மக்கள் பெற்ற போதும் மணல் இருக்கும் பகுதிகளுக்கு மக்களால் நிம்மதியாக சென்று மணலை அகழமுடிகின்றதா என்பதும் கேள்விக்குறியே. ஏனெனில், இப்பகுதிகளில் ஆயுதங்களுடன் சிறு சிறு குழுக்களாக மிதி வண்டிகளில் நடமாடித்திரியும் படையினர்
தமது பொறுப்பதிகாரியின் அனுமதியில்லாமல் மணலை எடுக்க முடியாதென கூறுகின்றனர்.

இவை அனைத்தையும் கடந்து இரண்டு மூன்று நாட்களைச் செலவு செய்து, பல ஆயிரக்கணக்கான ருபாக்களையும் செலவு செய்து மக்கள் ஒரு ரக்ரர் லோட் மணலை மட்டுமே பெறமுடிகின்றது. இந்த ஒருலோட் மண்ணில் வீட்டுக் கட்டுமாணப் பணியை முடிக்க இயலுமா?

இந்திய வீட்டுத்திட்ட தொழில் நுட்ப ஆலோசனைக்கமைவாக இந்த ஒருலோட்டில் சுமார் 280 வரையான சிமெந்து கற்களை மட்டுமே அறுக்க முடியும். இந்த 280 கற்களில் வீடமைக்க முடியுமா?

அப்படியானால் அடுத்த ஒருலோட் மணலைப் பெறுவதற்கு எத்தனை நாட்கள் கால எல்லை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலும் மூன்று நாட்கள் செலவிடவேண்டுமே.

அப்படியானால் எப்போதுதான் வீட்டை அமைத்து முடிப்பது? என்ற திண்டாட்டத்தில் மக்கள் உள்ளனர்.

ஒரே தடவையில் குறித்த சில ரக்ரர் லோட் மணலை அகழ்வதற்கான அனுமதியை பிரதேச செயலகம் வழங்கினால் என்ன? என்று கேட்கப்பட்டபோது இயற்கை
வளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காகவே அனுமதி ஆகக் குறைந்தளவு மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறாயின்.

கடந்த காலங்களில் மக்களின் காலடியில் பெருகிக்கிடந்த வளத்தை ஆறையாடுவதற்கு சட்டரீதியாக அனுமதி வழங்கும் போது இயற்கை வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எந்த அதிகாரிகளின் மனங்களிலும் தோற்றாமல் போனது ஏன்?

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்ற நோக்கில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமக்கான இருப்பிடங்களை அமைக்கத் துடிக்கும் சாதாரண ஏழை மக்கள் மத்தியில் மட்டும் இவ்வாறான நடைமுறைகளை இறுக்கமாக கையாள்வது ஏன் என்ற கேள்வி மக்களின் மனங்களிலே உருவாகியிருக்கின்றது. அண்மைக் காலமாக மணலை முற்றாகப் பெறமுடியாத சூழல் உருவாகியுள்ளதால் பலர் வீட்டுத் திட்ட கட்டுமாணப் பணிகளையே இடைநிறுத்தியுள்ளனர். எனவே, இதற்கு தீர்வுகாணப்பட வேண்டிய கட்டாய சூழலில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் தள்ளப்பட்டுள்ளது.

## தேன் கூடு



# புதூர் ராகங்கள்

வெளியீடு: வவுனியா வடக்கு பிரதேச செயலகம்

வன்னியின் கிராமிய தெய்வ வழிபாட்டு மையங்களில் ஒன்று புதூர் நாகதம்பிரான். வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் புதூர் என்ற இடத்தில் உள்ள இந்தக் கோயில், வன்னி மக்களின் நம்பிக்கையோடும் கொண்டாட்டத்தோடும் இணைந்தது. வயலும் காடும் நிறைந்த வன்னியில் பாம்புகள் எங்கும் உண்டு. பாம்புகளின் அச்சத்தையும் அபாயத்தையும் போக்குவதற்காக வன்னி மக்கள் நாகதம்பிரானை வழிபட்டனர். இதனால், நாகதம் பிரான் கோயில்கள் வன்னியில் அதிகமாக உண்டு. புளியம்பொக்கணை நாகதம்பிரானும், புதூர் நாகதம்பிரானும் இதில் முக்கியமானவை. ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் புதூர் நாகதம்பிரான் பொங்கல் நடக்கும். அப்பொழுது வன்னி முழுவதும் புதூரில் கூடும்.

இந்தப் புதூர் நாகதம்பிரானுக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஒரு இறுவெட்டினை வெளியிட்டிருக்கிறது. பாடல்களைப் பளையூர் பரா எழுதியிருக்கிறார். த. ரமேஸ் இசையமைத்திருக்கிறார். ராஜேந்திரம், ச. தவபாலன், வே.கோமதி, க. கண்ணன், ந. சுகந்தன், ம. பாலமுரளி ஆகியோர் பாடியிருக்கின்றன. ஐந்து பாடல்களும் பக்திப்பரவசமூட்டுகின்றன.



# வன்னியில் தொழில் வாய்ப்பின்மையும், சவாலான எதிர்காலமும்!!

● மு. தமிழ்ச்செல்வன் ●

அருண்குமார். வயது 24. க.பொ.த.உயர்தரம் படித்து விட்டு மாங்குளத்தில் இருக்கும் அருண்குமாருக்குத் தொடர்ந்து படிக்க வாய்ப்புகள் அவர் வாழும் சூழலில் இல்லை. அருணுடன் படித்தவர்களில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர்கள் மேற்படிப்புக்குச் சென்று விட்டனர். ஏனையவர்கள் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் பொழுதைப் போக்க முடியாமல், தவித்துக் கொண்டிருக்கின்றனர். அருணும் நண்பர்களும் தொழில் சார்ந்த கல்வியைத் தொடரலாம் என்று விரும்பினார்கள். ஆனால், அதற்கு பல பிரச்சினைகள். தொழில்நுட்பத்துறையில் படிக்க வேண்டும் என்றால்... அதற்காகக் கிளிநொச்சிக்குப் போக வேண்டும். அப்படித்தான் அருணுடைய இரண்டு நண்பர்கள் கிளிநொச்சிக்குப் போய்ப்படிக்கிறார்கள். அருண் சில மாதங்கள் மேசன் வேலைக்கு உதவியாளாகப் போனார். வயறிங் பழகினார். அந்த வேலையில் சில மாதங்கள் ஓடின. இப்பொழுதும் அந்த வேலையைப் பார்த்தாலும் தொடர்ச்சியாக வேலை கிடைப்பதில்லை. இதனால் பெரும்பாலான பொழுதுகள் கைத்தொலைபேசியில் கழிவதாகவே உள்ளது. வீட்டில் பெரிய பொருளாதாரத் தேவைகள் இருந்தாலும் அருண்குமாரினால் அதை ஈடு செய்ய முடியவில்லை.

அருண்குமாரைப் போலதான் வன்னியில் ஒவ்வொரு ஊர்களிலும் ஏராளமான இளைஞர்களும், இளம்பெண்களும் இருக்கிறார்கள். வேலைவாய்ப்புகளுக்காகக் காத்துக் கொண்டு. உயர்கல்வியையோ தொழில் முறைக் கல்வியையோ கற்கக் கூடிய வாய்ப்புகளும் வன்னியில் குறைவு. நகரப் புறங்களில் உள்ள வசதி வாய்ப்புகள் பொதுவாகவே கிராமப்பகுதிகளில் கிடைப்பதில்லை. இதனால் இளைய தலைமுறையைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் கூலிக்குப் போக வேண்டியுள்ளது. அல்லது பெற்றோர் செய்து வரும் பாரம்பரியத் தொழில்களை அப்படியே செய்ய வேண்டியுள்ளது.

இதைப்போலதான் துணுக்காயில் இருக்கும் சுதர்சினியும், பாண்டியன் குளத்தில் இருக்கும் சதீசும், மாந்தையில் உள்ள வசிகரனும் குடும்பத்தின் தொழில்களான கால்நடை வளர்ப்பையும், விவசாயத்தையும் செய்கிறார்கள். சந்தைப்படுத்தலில் வசதிக்குறைவும் உற்பத்திச் செலவும் அதிகமாக இருப்பதால் இந்தத் தொழில்களின் சிரமத்திற்கு ஏற்றமாதிரி வருவாய் இல்லை என்ற கவலை இவர்களைச் சலிப்படைய வைக்கிறது. ஆனாலும் தொழில் இல்லாமல் இருக்க முடியுமா? மாற்றுத் தொழில்களுக்கான வாய்ப்புகள், அதற்கான கற்கைக்கான சந்தர்ப்பங்கள் இருக்குமாக இருந்தால் தம்மால் அந்தத் துறைகளில் படிக்க முடியும் என்கிறார்கள்.

முல்லைத்தீவில் இருக்கும் 23 வயதுடைய ஸ்ரனிஸ்லாஸ் யூட் தந்தை செய்த கடற்றொழிலைத்தான் செய்கிறார். தந்தையைப்போல அவரும் சிரமங்களின் மத்தியிலேயே தொழில் செய்ய வேண்டியுள்ளது. நவீன மீன்பிடி முறை இன்னும் சாத்தியப்படவில்லை. பாரம்பரியத் தொழிலை நவீனப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பெரும்பாலானவர்களுக்கு பாரம்பரியத் தொழில்களான மீன்பிடி, விவசாயம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆர்வக்குறைவாக உள்ளது.

இந்த மாதிரியான பிரச்சினைகளால் வேலையில்லா பிரச்சினை என்பது இன்று உலக-ளவில் காணப்படுகின்ற மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது. தற்போது உலகில் பெரியளவில் மாநாடுகளும்,

கருத்தரங்குகளும், ஆய்வுகளும் வேலையில்லாப் பிரச்சினையை குறைப்பது சம்மந்தமாக இடம்பெற்று வருகின்றன. சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் வேலையில்லாப் பிரச்சினையைக் குறைப்பதற்குக் கொடுக்கும் முக்கியத்துவமும், மாற்று வழியை தேடுவதில் காட்டும் தீவிரமும் வேலையில்லாப் பிரச்சினையால் ஏற்படும் விளைவுகளின் அச்சத்தினால் ஏற்பட்ட விளைவே.

சமூகத்தில் ஏற்படுகின்ற எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும் அடிப்படை மூலகாரணமாக இருப்பது வேலையின்மையே. வேலையின்மையினால் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினையும் உளவியற் சிக்கலுமே. இதனால், உலகளவில் வேலையில்லாப் பிரச்சினை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பான I.L.O குறிப்பிடுகின்றது. இதேவேளை பல நாடுகள் பொருளாதார சிக்கன நடவடிக்கைகளிலும் இறங்கியிருப்பதால் வேலையை இழக்கும் வீதம் மேலும் அதிகரித்தே காணப்படும் எனவும் அவ்வமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதுமட்டுமன்றி நாடுகளின் பொருளாதார நெருக்கடி, வேலை ஒன்றைப் பெற முடியாத இயலாமை போன்ற காரணங்களால் உலகளவில் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அவ்வமைப்பு தெரிவிக்கிறது.

சர்வதேச மட்டத்தில் வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் என எல்லா மட்டத்திலும் வேலையில்லாப் பிரச்சினை தலையிடியாக மாறியுள்ளது. இந்த நிலையில் இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையின் வேலையில்லா பிரச்சினை என்பது ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசுக்கும் நெருக்கடியை தோற்றுவிக்கின்ற ஒரு பிரச்சினையாகவே காணப்படுகிறது. அதாவது, தீராப்பிரச்சினையாக உள்ளது. இதனால் வேலையில்லாப்

> இலங்கையைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சினையை வெற்றிகரமாக கையாள்வதில் எந்த அரசாங்கமும் வெற்றிபெறவில்லை. நாளாந்தம் நாட்டின் ஏதோ ஒரு பாகத்தில் வேலையில்லாதவர்களினால் ஏற்படுகின்ற, ஏற்படுத்தப்படுகின்ற பிரச்சினைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. கவனயீர்ப்புப் போராட்டங்கள், பணிப்பகிஸ்கரிப்புகள், கதவடைப்புகள், ஊர்வலங்கள், களவு, கொள்ளை,கொலை, தற்கொலை, அடிதடி என சம்பவங்கள் தொடர்கின்றன. இது ஆரோக்கியமான சூழலுக்கு உகந்ததல்ல.




பிரச்சினை என்பது தலைமுறைகளின் பிரச்சினையாக மாறியுள்ளது. இதில் வன்னிப்பகுதி இன்னும் மோசமான பின்னடைவு நிலையில் காணப்படுகிறது. ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் சமனான வளப்பகிர்வு வாய்ப்புகளுக்கான சமநிலை போன்றவற்றைச் செய்யாததால் இந்த நிலையைச் சற்று மாற்றியமைக்க முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சினையை வெற்றிகரமாக கையாள்வதில் எந்த அரசாங்கமும் வெற்றிபெறவில்லை. நாளாந்தம் நாட்டின் ஏதோ ஒரு பாகத்தில் வேலையில்லாதவர்களினால் ஏற்படுகின்ற, ஏற்படுத்தப்படுகின்ற பிரச்சினைகள் நடந்து கொண் டேயிருக்கிறது. கவனயீர்ப்புப் போராட்டங்கள், பணிப்பகிஸ்கரிப்புகள், கதவடைப்புகள், ஊர்வலங்கள், களவு, கொள்ளை,கொலை, தற்கொலை,

சமூகத்தில் ஏற்படுகின்ற எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும் அடிப்படை மூலகாரணமாக இருப்பது வேலையின்மையே. வேலையின்மையினால் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினையும், உளவியற் சிக்கலுமே. உலகளவில் வேலையில்லாப் பிரச்சினை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பான I.L.O குறிப்பிடுகின்றது. இதேவேளை, பல நாடுகள் பொருளாதார சிக்கன நடவடிக்கைகளிலும் இறங்கியிருப்பதால் வேலையை இழக்கும் வீதம் மேலும் அதிகரித்தே காணப்படும் எனவும் அவ்வமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதுமட்டுமன்றி, நாடுகளின் பொருளாதார நெருக்கடி, வேலை ஒன்றைப் பெற முடியாத இயலாமை போன்ற காரணங்களால் உலகளவில் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அவ்வமைப்பு தெரிவிக்கிறது.

அடிதடி என சம்பவங்கள் தொடர்கிறது. இது ஆரோக்கியமான சூழலுக்கு உகந்ததல்ல. கடந்த ஆண்டு இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் வேலையில்லாப் பிரச்சினை வருடம் தோறும் அதிகரித்துச் செல்வதாக குறிப்பிட்டிருக்கிறது. இதைச் சீர்செய்யும் திட்டங்கள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. திட்டங்களைத் தீட்டும் மனங்களில் சமூக மாற்றங்களைக் குறித்த அக்கறையும் அறிவும் போதாமலிருப்பதே இதற்குப் பெருங்காரணம். பின்தங்கிய பிரதேசங்களிலும் தொழிற்கல்வி மற்றும் பாரம்பரியத் தொழில்துறையை நவீனப்படுத்துதல் என்றவாறாக திட்டங்கள் அமைந்திருக்குமானால் பல நெருக்கடிகள் தணிந்திருக்கும்.


இலங்கையைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சினை என்பது வெறுமனே எந்தவொரு தொழிலும் இன்றி இருப்பவர்களை மட்டுமல்ல, மாறாக கல்வித் தராதரத்திற்கு ஏற்ற வேலையின்மை, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமை போன்ற வகையில் காணப்படுகின்றன. இதில் எந்த தொழிலும் இன்றி இருப்பவர்களின் பிரச்சினையே நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

க.பொ.த சாதாரண தரம், உயர் தரம் மற்றும் அதற்கு மேல் என கல்வித்தரங்களை கொண்டவர்கள் வேலையில்லாமல் இருப்பது பாரதூரமான விடயம் எனவும் சுட்டிக்காட்டும் மத்திய வங்கியின் அறிக்கை, நாட்டின் தொழிற் சந்தைக்கு ஏற்ற வகையில் உயர் கல்வித்துறையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் பாடசாலைக் கல்வியையடுத்து பல்கலைக்கழகக் கல்விக்கான அனுமதி கிடைத்தவர்கள் போக ஏனையவர்கள் தங்களின் கல்விக்கு ஏற்ற அரச தொழில் துறையை எதிர்பார்த்து காத்திருக்கின்றார்களே தவிர, வேறு தொழில்சார் கல்வியைக் கற்றும் பெற்றும் மாற்றுத் தொழிலை நோக்கி செல்லும் நிலைமை மிக மிகக் குறைவாகவே உள்ளது. குறிப்பாகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை குப்பை எடுக்கிற வேலையாக இருந்தாலும் அது, அரச வேலையாக இருக்க வேண்டும் என்ற மனநிலையும் ஏனைய தொழில் துறைகளை நோக்கி செல்லும் அல்லது தொழில் கல்வியை நோக்கி செல்லும் விகிதத்தை குறைக்கிறது.

அதுமட்டுமன்றி, பெரும்பாலான இளைஞர்களிடம் காணப்படும் வெளிநாட்டு மோகம் அவர்களின் உழைக்கும் மனோநிலையைத் தடுத்து விடுகிறது. இது உழைக்கும் பருவத்தில் பெரும்பகுதியை விழுங்கி விடுகிறது. இதில் சிலர் வெளி நாடுகளுக்கு சென்றுவிட பலர் காலம் கடந்து உள்ளூரில் வேலைவாய்ப்பைத் தேடுபவர்களாக மாறுகின்றனர். இந்தச் சந்தர்ப்பங்களில் அவர்களுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்புகள் கிடைக்காமல் போக ஏற்படுகின்ற விரக்தி, அவர்களைப் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுமாறு தள்ளிவிடுகிறது.

வன்னியைப் பொறுத்தவரை வேலையின்மை ஒரு சவால் மிக்க பிரச்சினையாக காணப்படுகிறது. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு



மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் வன்னியில் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக, வீதிகளின் அபிவிருத்தி, பாடசாலை முதல் திணைக்களங்களுக்கான கட்டடங்களின் கட்டுமாணம், கண்ணிவெடி அகற்றல் என்பன நிரந்தரமற்ற கூலித்தொழிலுக்கான வேலை வாய்ப்புகளை வழங்கியது. மீள்குடியேறிய மக்களைப் பொறுத்தவரை குறிப்பாக பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களைப் பொறுத்தவரை பெரும் ஆறுதலாக காணப்பட்டது.

ஆனால், இவையனைத்தும் தற்போது குறைந்து செல்கின்றன. அபிவிருத்திப் பணிகள் மீள்குடியேற்றத்தின் ஆரம்ப காலம் போன்று இப்பொழுது இல்லை. பாரியளவிலான வீதிகள் புனரமைப்புப் பணிகள் நிறைவுக்கு வந்துவிட்டன. கட்டடங்கள் அமைக்கும் பணியும் முன்னரை போன்று இல்லை. கண்ணிவெடி அகற்றும் பணிகளும் நிறைவுக் கட்டத்தை எட்டிக்கொண்டிருப்பதால் கடந்த சில மாதங்களுக்கு முன் பெருமளவு ஆட்குறைப்புச் செய்யப்பட்டு விட்டது. இந்த மையங்களில் வேலை செய்தவர்கள் வேலைகளை இழக்கும் நிலை ஏற்படும்போது, ஏற்கனவே வேலை தேடிக்கொண்டிருப்போருடன் இணைந்து அதிகளவானவர்கள் வேலைக்காகக் காத்திருக்கும் நிலை ஏற்படவுள்ளது.

இதேவேளை, சிவில் பாதுகாப்புப் பிரிவில் தொடர்ச்சியாக நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் பணியாற்றுகின்றனர். அத்தோடு சிவில் பாதுகாப்பு பிரிவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சம்பளத்தை வழங்குகிறது. ஆனால், இந்த இடங்களில் பணியாற்றுவோரின் தொழில் முறை மற்றும் எதிர்காலம், இவர்களுடைய தொழில்சார் அடிப்படை உரிமைகள் போன்றன தொடர்பாக விமர்சனங்களும் உண்டு. அத்தோடு, கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டமையும் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதைப்போன்ற இன்னொரு ஆடை உற்பத்தித் தொழிற்சாலை விசுவமடுப்பகுதியில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிகிறது.

யுத்தத்திற்குப் பின்னரான வன்னியில் அதிலும் அரச துறையில் சமுர்த்தி, தொண்டர் ஆசிரியர்கள், புகையிரத திணைக்கள பணியாளர்கள் உள்ளிட்ட பல அரச திணைக்களங்களில் நிலவிய வெற்றிடங்களை நிரப்பியதன் மூலம் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இதனால், இரண்டாயிரம் வரையானவர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

ஆனாலும், வன்னியின் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்றவகையில் தொழில் வாய்ப்பு விகிதம் குறைவானதே. மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தற்காலிக தொழிலாளிகளின் தேவைகள் நிறைவுற்ற நிலையில் பெரும் பாலானவர்கள் வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத நிலையில் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளனர். ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஓட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை உட்பட விவசாயப் பண்ணைகளும் கடல்சார் தொழில் முறைகளும் விரிவாக்கம் பெறுமாக இருந்தால் வேலை வாய்ப்புப் பிரச்சினை தீர்வதுடன் வன்னியின் பொருளாதாரமும் சிறக்கும். இல்லையென்றால் சில ஆடைத் தொழிற்சாலை உள்ளிட்ட ஒரு சில நிறுவனங்களினால் வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

வன்னியைப் பொறுத்தவரை புனர்வாழ்வளிக்கப்பட்ட ஏராளமான போராளிகள் தொழில் வாய்ப்பின்றி காணப்படுகின்றனர். இது அவர்களை சமூகத்துடன் இணைந்து பயணிப்பதற்கான பொருளாதார சமூக வலுவைக் குறைக்கிறது. இதனையிட்டு கவலைகளை அவர்கள் பல பொது இடங்களில்பலரிடம் முறையிட்டுமுள்ளனர். இருந்தும் என்ன பயன்? அவர்களின் நிரந்தர தொழில் வாய்ப்புக்கு ஒரு நிரந்தர தீர்வில்லை.

இது ஒரு புறமிருக்க, வன்னி இளைஞர்களைப் பொறுத்தவரை தற்போது அவுஸ்ரேலிய மோகம் பெருமளவில் குறைந்து விட்ட போதும்
அவர்கள் தொழில் சந்தையை நோக்கிய கல்வித்துறைக்குள் செல்வதில் ஆர்வம் காட்டுவதாக இல்லை. பாடசாலைக் கல்வி, பல் கலைக்கழகம் கிடைத்தால் பட்டப்படிப்பு , இதனையடுத்து அரச துறையில் வேலையை எதிர்பார்த்து காத்திருப்பது, இதுவே எங்கள் சமூகத்தின் நிலைப்பாடாக மாறிவிட்டது. மாறாக தொழில் சந்தையை நோக்கிய கல்வித்துறைக்குள் செல்லும் அல்லது ஏதோவொரு தொழில் கல்வியை பயின்று தொழில்
வாய்ப்பை பெற்றுக்கொள்வது அல்லது சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவது அல்லது தனியார் துறைகளில் வேலைவாய்ப்பை நோக்கி செல்லுதல் என்பன மிகமிக அரிதான ஒன்றாக உள்ளது. இதற்கான மனநிலையும் காணப்படவில்லை. எனவே, இதனா லும் தொழில்வாய்ப்பில்லாத ஒரு நிலை தொடர்ந்தும் பேணப்பட்டு வருகிறது.

இதற்கப்பால் போரினால் பாதிக் கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் இங்கே விசேடமாகப் புதிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் தொழில்துறைகளை ஆரம்பிக்க வேண்டும். இல்லையென்றால், தற்போதைய நிலையில் சமூகத்தில் பல்வேறு வகையான எதிர் மறை விளைவுகள் ஏற்படும்.

எனவே, தொழில் வாய்ப்பை வழங்க கூடிய தொழில் துறைகளை நோக்கி வன்னி நகர வேண்டும். அதற்கு வன்னியில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டுமான அபிவிருத்தியோடு மிக முக்கியமாக முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய ஸ்திரமான சூழல் காணப்பட வேண்டும்.

நேர்காணல் | கருணாகரன்

# எல்லோரும் இணைந்து செயற்பட்டால்

# வறுமையை ஒழிக்க முடியும்



**கதிரமலைநாதன் பரந்தாமன்**
வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பிரதேச செயலாளர்

கதிரமலைநாதன் பரந்தாமன் வவுனியா வடக்கின் பிரதேச செயலராக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பிரதேசத்தில் பணியாற்றி வருகிறார். இவருடைய இந்தப் பத்தாண்டுகளும் மிகச் சவாலான காலப்பகுதியாகும். முதல் ஐந்து ஆண்டுகளும் போர்க்காலம். பின்னரான ஐந்து ஆண்டுகளும் போருக்குப் பிந்திய காலம் - மீள்குடியேற்றக் காலம். இந்த இரண்டு காலங்களுமே இயல்புச் சூழல் முற்றாகவே இல்லாத காலங்கள். அதைவிட. போர்க்காலத்தில் எல்லைப் பிரதேசமாகவும் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதி - இருந்ததால். இடப்பெயர்வுகளும் போர் நெருக்கடிகளும் இங்கே அதிகமாக இருந்தன. ஒரு கட்டத்தில் பரந்தாமன் பயணம் செய்த அலுவலக வாகனம் 12.06.2006 இல் தாக்குதலுக்குள்ளாகியது. அதில் சாரதி உயிரிழந்தார். மயிரிழையில் உயிர் தப்பினார் பரந்தாமன். ஆனாலும் சோர்வின்றித் தளர்வின்றிப் பயமின்றித் தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து செய்து. வவுனியா வடக்குப் பிரதேச மக்களின் மனங்களில் மதிப்பாக உயர்ந்திருக்கிறார்.

போருக்குப் பிந்திய மீள்குடியேற்ற காலப் பணிகள் இன்னொரு வகையானவை. இதிலும் பல நெருக்கடிகளும் சவால்களும். ஆன-ாலும் அவற்றையெல்லாம் தன்னுடைய சேவை மனப்பாங்கினாலும் கடினமான உழைப்பினாலும் தனக்குக் கிடைத்த நிர்வாக அதிகாரத்தின் மூலமாகவும் வெற்றி கொண்டுவருகிறார் பரந்தாமன். இப்பொழுது நெடுங்கேணியை மையமாகக் கொண்ட வவுனியா வடக்குப் பிரதேசம் இயல்பு நிலையை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது. விவசாயச் செய்கைக்குப் பெயர்பெற்ற இந்தப் பிரதேசத்தை மீள் நிலைக்குக் கொண்டு வருவதற்காக தன்னுடைய பணி அணியோடு கடுமையாகப் போராடி வருகிறார்.

எனினும். யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து வெளியிடங்களுக்குச் சென்ற மக்களில் ஒரு தொகையினர் இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்பிவரவில்லை. என்னதான் உட்கட்டுமான வசதிகளைச் செய்தாலும் எவ்வளவுதான் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் சொந்த இடத்தின் மீதான பற்றும் பாசமும் இருந்தாலும் நகர்ப்புற வசதிக்கும் வாழ்க்கைக்கும் பழக்கப்பட்ட மத்தியதர வர்க்கத்தினரை மீளக் கொண்டுவருவது சவாலானதே என்று சொல்கிறார் இந்தப் பிரதேச செயலர்.

பரந்தாமனின் இன்னொரு சிறப்பு. படைப்பாளியாகவும் கலை-ஞராகவும் கலைகளின் மீதான ஆர்வமுடையவராக இருப்பது. இதன்காரணமாக தன்னுடைய பிரதேசத்தின் கலை வளர்ச்சிக்கும் மக்களின் மகிழ்வான வாழ்க்கைக்கும் புதிய களங்களைத் திறந்து வருகிறார். அண்மையில் இரண்டு பாடல் இறுவெட்டுகளையும் வெளியிட்டிருக்கிறார். நெடுங்கேணியில் உள்ள பணிமனையில் ஒரு வேலை நாளில் பரந்தாமனைச் சந்தித்தோம்.





வவுனியா வடக்கு அல்லது நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்போது காணப்படும் வறுமை நிலை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் நிலை, பிரதேசத்தின் உட்கட்டுமான அபிவிருத்திகள் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் நெடுங்கேணி பிரதேசத்தில் காணப்படுகின்ற கலை, கலாசாரங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக பிரதேச செயலாளர் க.பரந்தாமனிடம் கேட்டிருந்தோம். அந்தக் கேள்விகள் அனைத்திற்கும் அவர் அளித்த பதில்கள் இங்கே விரிவாக தரப்படுகின்றன.

**கேள்வி - நெடுங்கேணி பிரதேசம் விவசாய செய்கைக்கு, முன்னர் பேர் பெற்ற இடமாகக் காணப்பட்டது. எனினும், தற்போது அதனுடைய வளர்ச்சியை காணமுடியாதிருக்கிறது. இதற்கான காரணம் என்ன?**

**பதில்** - பல விவசாயிகளின் பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் சென்று பணங்களை அனுப்புவதால் அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான போக்கு குறைவடைந்து காணப்படுகிறது. அத்துடன், வவுனியா சந்தையை தம்புள்ளை சந்தை ஆக்கிரமித்துள்ள நிலைமை காணப்படுகிறது. எனி னும், தற்போது அந்த நிலை படிப்படியாக குறைவடைந்து வருகிறது. ஆனால், தற்போது எமது பிரதேச மரக்கறிகளை "சுப்ப மார்க்கட்"இல் இருந்து வருகை தந்து கொள்வனவு செய்கிறார்கள். எனவே, இனிவரும் காலங்களில் பழைய நிலைமைக்கு வரும் என நான் நம்புகின்றேன்.

**கேள்வி - பப்பாசி பயிர்ச் செய்கை தொடர்பாக கூறுங்கள்?**

**பதில்** - விவசாயிகளை பாரம்பரிய பயிர்ச் செய்கையில் இருந்து இலாப நோக்கத்தை கருதி மாற்று பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தும் முகமாக நாம் பப்பாசி பயிர்ச் செய்கையை ஊக்குவித்துள்ளோம். சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் ஊடாக நாம் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். அந்த திட்டத்தின் மூலம் எமது பிரதேச விவசாயிகளுக்கு பப்பா மரக் கன்றுகளை வழங்கி, தற்போது கிலோ 30 ரூபாவுக்கு பழச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக 200 பயனாளிகளையும் ஒருங்கிணைத்து அதனை சீ.ஆர் ஒக்ஸ்போ நிறுவனத்தின் ஊடாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்த திட்டத்தின் ஊடாக



எமது 200 பயனாளிகளும் தமது வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை மேம்படுத்தியுள்ளனர். இதன்போது பப்பா செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் இந்த செய்கையின் மூலம் தான் ஒரு வருடத்தில் 20 இலட்சம் ரூபா வினை சம்பாதித்துள்ளதாக கூறினார். அரசாங்க உத்தியோகத்தர்களும் தமது பகுதி நேர வேலையாக பப்பாசி செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமல்ல, இஞ்சி மற்றும் மஞ்சல் செய்கை என்பனவற்றையும் தற்போது எமது பிரதேசத்தில் அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இவ்வாறான பயிர்ச் செய்கையின் ஊடாகவே எமது பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம் படுத்திக் கொள்ளலாம் என நாம் நினைக்கின்றோம்.

**கேள்வி - நெடுங்கேணி பிரதேசம் கால்நடை வளர்ப்பில் முக்கியமான ஒரு இடமாக காணப்படுகிறது. தற்போது இதன் தன்மை எவ்வாறு இருக்கிறது. அதுபோல பால் உற்பத்தியின் முன்னேற்றம் என்ன?**

**பதில்** - பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் "வாழ்வின் எழுச்சி" உட்பட்ட பல்வேறு திட்டங்களுக்கூடாக நல்லின மாடுகளை வழங்கும் திட்டத்தினை நாம் மேற்கொண்டிருக்கின்றோம். கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தின்ஊடாகவும் நாம் அதனை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம்.



ஆனால், இவர்கள் பாரம்பரிய பயிர்ச் செய்கைபோல எமது நாட்டினுடைய மாடுகளை வளர்க்கின்ற நிலைமை, அவர்கள் கால்நடைகளை

சரியான பராமரிப்பு இல்லாமல் வீதிகளில் கட்டாக்காலிகளாக விடுவதனால் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்றது. ஆகவே, இவற்றின் ஊடாக இவர்களுக்கு அதிக இலாபத்தை ஈட்ட முடியாமல் இருக்கிறது. எனினும், இறைச்சிக்காக இந்தப் பிரதேசத்தில் இருந்து அதிக மான மாடுகள் கொண்டு செல்லப் படுகின்றன.

எனவே, இறைச்சிக்கான ஒரு உற்பத்தி இடமாக இந்த நெடுங் கேணி பிரதேசம் காணப்படுகிறது. அதுமட்டுமல்ல, பால் உற்பத்தியில் வளர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கியிருக்கிறோம். அதனூடாக நெடுங்கேணி, கனக ராயன்குளத்திலும் பால் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு, கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. காலப் போக்கில் இந்த பிரதேசம் பால் உற்பத்தியிலும் பெரும் வளர்ச்சி ஏற்படும்.

**கேள்வி - நெடுங்கேணி அல்லது வவுனியா வடக்கு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்றும்கூட மக்களின் வருகை குறைவாகக் காணப் படுகிறது. இதற்கான காரணம் என்ன?**

**பதில்** - இதற்கு நாம் பல்வேறு காரணங்களைக் கூறலாம். இவற்றில் முக்கியமானது வெளிநாட்டு வருமானம். முன்னொரு காலத்தில் தாம் உழைத்தால்தான் வருமானம் என்கின்ற நிலை காணப்பட்டது. ஆனால், தற்போது அந்த நிலை இல்லை. இதற்கு காரணம் அவர்கள் அந்த உழைப்பில் இருந்து படிப்ப டியாக விலகியமையே. அடுத்து இயந்திரங்களின் பாவனை. முன்னர் அறுவடை செய்தால் மனித வலு பயன்படுத்தப்பட்டது. தற்போது இயந்திரங்கள் மூல மாக அந்த நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுவதாலும் இந்த பிரச்சினைகள் காணப்படுகின்றன.

**கேள்வி - இளம் தலை முறையினர் இங்கு வருகை தராததன் காரணம் என்ன?**


**பதில்** -இளம் தலைமுறை யினர் மத்தியில் ஒரு சிந்தனை காணப்படுகிறது. அதாவது, வவு னியா நகர பாடசாலைகளில் நல்ல கல்வி என்கின்ற சிந்தனையின் அடிப்படையில், அவர்கள் யுத் தத்தின்போது இடம்பெயர்ந்து அவ்வாறான சிலருடன் ஏற்பட்ட மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏனையவர்களையும் நகர பாட- சாலையை அண்டிய பகுதிகளுக்குள் வாழக்கூடிய ஒரு சூழலுக்குள் தள்ளியுள்ளது.


**கேள்வி - இந்த பகுதி, கல் விக்கு போதிய ஆசிரியர் வளம் இல்லை என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

**பதில்** - எமது பிரதேசத்தில் உள்ள அதிபர்கள் கூறும் முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தப் பகு திகளில் உள்ள பாடசாலைகளில் ஆங் கிலம், விஞ்ஞானம் மற்றும் கணி தம் போன்ற பாடங்களுக்கு ஆசிரி யர் பற்றாக்குறை காணப்படுவதாக கூறுகின்றனர். அதுமட்டுமல்ல, இந்த பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள் இல்லாமல் காணப்படுகின்றன. நெடுங்கேணி மகாவித்தியாலயத்திற்கு மட்டும் ஆசிரியர் தங்குமிட விடுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதுவும் போதுமானதாகவில்லை. ஆசிரியர்கள் வகுப்பறைகளை தங்கு மிடமாக பாவித்து தங்குகின்ற நிலை காணப்படுகிறது. இதன் மூலம் பெண் ஆசிரியர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். கல்வியில் நாம் முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்றால் ஆசிரியர்களுக்கான வச திகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண் டும். அவ்வாறு ஏற்படுத்துவதன் மூலம் தான் நகரப் பகுதிகளில் உள்ள ஆசிரியர்களை கிராமப்புற பாடசாலை களுக்கு வரவழைக்க முடியும்.

பிரதேச செயலகத்தினால் உரு வாக்கப்பட்ட கல்வி, கலாசார அபி விருத்தி நிதியம் பாரிய பங்களிப்பை வழங்கியிருக்கிறது. இதன் மூலம் நாம் கடந்த வருடம் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான தொடர் பயிற்சி வகுப்புகள், உயர்தர மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள், சாதாரணதர மாணவர் களுக்கான பயிற்சி வகுப்புகள் என்பனவற்றை நடாத்தியிருக் கின்றோம். இதன் மூலம் பெறு பேறுகளில் நாம் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கின்றோம்.





இந்த வருடமும் நாம் அதனை முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளோம். எமது பிரதேசத்தில் இருந்து வெளி நாடு சென்றவர்கள் எமது நிதியத்தின் ஊடாக தொடர்புகொள்கின்ற பட்சத்தில் நாம் அவர்களுக்கு ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க தயாராகவிருக்கின்றோம். அதே போல எமது பிரிவில் இருந்து மருத்துவ பீடத்திற்கு தெரிவான மாணவன் ஒருவருக்கு நாம் மாதம் 5 ஆயிரம் ரூபாவினை எமது நிதியத்தின் ஊடாக வழங்கியிருக்கின்றோம். ஏனைய பல்கலைக்கழக மாணவர் களுக்கும் உதவிகளை வழங்கு வதற்கான திட்டங்களையும் நாம் முன்னெடுத்திருக்கின்றோம். மிக விரைவில் அந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

**கேள்வி - நெடுங்கேணி அல்லது வவுனியா வடக்கு பிரதேசத்தில் வறுமை ஒரு முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது. மீள்குடியேற் றத்தின் பின்னர் பல வாழ்வா தார உதவிகள் வழங்கப்பட்ட பின்னரும் இந்த நிலை தொடர் கிறது. இந்த நிலைமைக்கான காரணம் என்ன?**

**பதில்** - வறுமை ஒழிப்பு என்பது சாத்தியமானதாக காணமுடியவில்லை. வறுமையில் இருந்து மக்கள் மீண்டிருக்கின்றார்களா என்றால் அதற்கு சரியான பதிலை யாரும் கூற முடியாத நிலை காணப்படுகிறது. அதற்கு காரணம் வறுமை ஒழிப்பை நாம் எந்த விதத்தில் அணுகுகின்றோம். அதன்தரவுகளை நாம் பேணுகின்றோமா, அல்லது வறுமை நலிவடைந்தோர் என்பவர்களை நாம் எப்போதுமே முன்னிலைப்படுத்துகின்றோமா?

அத்துடன், அவர்களுக்கு வழங்குகின்ற திட்டங்களை அவர்கள் சரியான முறையில் செயற்படுத்துகின்றார்களா என்பது பற்றி எந்தவிதமான ஆய்வுகளும் செய்யப்படவில்லை. இதனால் வறுமையில் சிக்கித்தவித்துக் கொண்டிருப்பவர்கள் சரியான வழிகாட்டல்கள் அல்லது கண்காணிப் புகள் இல்லாமல் அவர்கள் திட்டங்களுக்கு வழங்கிய களை வேறு திட்டங்களுக்கு பயன் படுத்தியிருக்கிறார்கள். முப்பது வருட யுத்தத்தில் தங்கி வாழ்பவர்களாக மாறியிருக்கிறார்கள்.

இந்த மனப்பாங்கு மாறுவதற்கு நீண்டகாலம் எடுக்கும். வறுமையை சொல்லி அதன் மூலம் கிடைக்கும் வாழ்வாதார உதவிகளை விற்று அந்த ஒரு நாளுக்கான பிரச்சினையை மட்டும் தீர்த்து விடுவதனால், நீண்டகாலம் தொடர்பாக யாரும் சிந்திப்பதில்லை. இதனால், தொடர்ந்தும் வறுமை நிலை காணப்படுகிறது.

**கேள்வி - வறுமையில் இருந்து நாம் எப்படி மீளலாம்?**

**பதில்** - அர்ப்பணிப்பு என்பது சகல மட்டங்களிலும் காணப்பட வேண்டும். நாம் வழங்கும் உதவி களை சமூகம் அர்ப்பணிப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே போல் அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சில அரசசார்பற்ற நிறுவனங்கள் அதிகமாக வறுமை ஒழிப்புக்காக பெற்றுக்கொள்கின்ற நிதிகளில்

இருந்து முக்கால் பங்கை அவர்க ளுடைய நிர்வாக ரீதியான விட யங்களுக்காக அல்லது பயிற்சி வகுப்புகளை வழங்குவதற்கான திட்டங்களாக முன்னெடுப்பதனால், கால்வாசிப் பகுதியே வறுமை ஒழிப்பிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

அதுவும் அந்த மக்கள் ஒழுங் கில்லாமல் போனால் அதுவும் பயனற் றதாக காணப்படுகிறது. இவைதான் முக்கியமான பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றன. உதாரண- மாக பயிற்சி வகுப்புகள் தொடர்பாக தோட்டங்களைச் செய்துகொண்டு பயிற்சிகளை வழங்க வேண்டும். தேவையில்லாத பயிற்சிகளை வழங்குவதால் பயனாளிக்கும் பயன் கிடையாது. நிறுவனத்திற்கும் எந்தவிதமான நன்மைகளும் கிடையாது. திட்டங்களின் ஊடான பயிற்சி ஒன்றுதான் சாத்தியமான விடயம் என கருதுகிறேன்.



வறுமை ஒழிப்பு என்பது சாத்தியமானதாக காணமுடியவில்லை. வறுமையில் இருந்து மக்கள் மீண்டிருக்கின்றார்களா என்றால் அதற்கு சரியான பதிலை யாரும் கூறமுடியாத நிலை காணப்படுகிறது. அதற்கு காரணம் வறுமை ஒழிப்பை நாம் எந்த விதத்தில் அணுகுகின்றோம். அதன் தரவுகளை நாம் பேணுகின்றோமா, அல்லது வறுமையில் நலிவடைந் தோர் என்பவர்களை நாம் எப்போதாவது முன்னிலைப்படுத்துகின் றோமா?

அத்துடன், அவர்களுக்கு வழங்குகின்ற திட்டங்களை அவர்கள் சரியான முறையில் செயற்படுத்துகின்றார்களா என்பது பற்றி எந்தவிதமான ஆய்வுகளும் செய்யப்படவில்லை. இதனால்வறுமையில் சிக்கித்தவித்துக் கொண்டிருப்பவர்கள் சரியான வழிகாட்டல்கள் அல்லது கண்காணிப்புகள் இல்லாமல் அவர்களுக்கு வழங்கிய திட்டங்களை வேறு திட்டங் களுக்கு பயன்படுத்தியிருக் கிறார்கள். முப்பது வருட யுத்தத்தில் தங்கி வாழ்பவர்களாக



**கேள்வி - உங்கள் பிரதேசத்தில் உள்ள பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பெண்களுக்கான பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்** - பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் என்கின்ற அடிப்படையில் நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 550 பேர் உள்ளனர். அவர்களுக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அமைப்புகளுக்கு ஊடாக அவர்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். எனினும், அவர்களுடைய விழிப்புணர்வும் பங்குபற்றுதலும் நாங்கள் எதிர்பார்க்கின்றளவிற்கு இல்லை என்பதே இங்கே கவலையான விடயம்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்கள் அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தைப் போல இரண்டு வடிவங்களில் உள்ளார்கள். அதாவது, ஆணாகவும், பெண்ணாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் பல்வேறு மட்டங்களில் இருந்து அழுத்தங்களை எதிர்நோக்குபவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறானவர்கள் பிள்ளைகளின் கல்வி, அவர்களின் எதிர்காலம், பொருளாதாரம் உள்ளிட்ட சவால்களை சமாளித்து போராடி வாழ்கின்ற மனோநிலையை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

**கேள்வி - யுத்தத்திற்குப் பின்னர் நெடுங்கேணிப் பிரதேசத்தின் கலை, கலாசாரங்களின் முன்னேற்றம் எவ்வாறுள்ளது?**

**பதில்** - நெடுங்கேணிப் பிரதேசத்தில் கலை, கலாசாரங்களைப் பொறுத்தவரையில் அழிவடைந்த நிலை மற்றும் விருப்பம் இல்லாத நிலை காணப்பட்டது. நாம் பிரதேச செயலகம் ஊடாக கலை, கலாசார நிதியத்தை உருவாக்கி அதனூடாக கலைகளை வளர்க்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றோம். இதற்காக நாம் பல்வேறு கலைஞர்களை இங்கே வரவழைத்திருக்கின்றோம்.

உதாரணமாக கலாபூசனம் கரியநாதனை வரவழைத்து ஐந்திற்கும் மேற்பட்ட புராணங்களை வழங்கியிருக்கின்றோம். "சத்தியவான் சாவித்திரி" புராணத்தை நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவிகளுக்கு பழக்கி அதனை மேடையேற்றியிருந்தோம். அதேபோல "சிறிவல்லி" என்கின்ற நாடகத்தை ஆசிரியர்களை பங்குபெறச் செய்து அதனையும் மேடையேற்றியிருந்தோம்.

அத்துடன், "சகுந்தலை" என்கின்ற நாடகத்தையும் நாம் மேடையேற்றியிருக்கின்றோம். கனகராயன் மகாவித்தியாலயத்தில் அரை மணித்தியால நாடகமாக "அரிச்சந்திரமயானம்" என்கின்ற நாடகத்தை அரங்கேற்றினோம். கடந்த வருடம் ஒரு புதிய திருப்புமுனையாக "சம்பூர்ண அரிச்சந்திரா" என்கின்ற மூன்று மணித்தியால நாடகத்தினை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் ஈடுபடுத்தி அதனையும் நாம் மேடையேற்றினோம். இது அனைவரதும் பாராட்டையும் பெற்றது. அதேநேரம், இன்னுமொரு துறையையும் நாம் வளர்த்திருக்கின்றோம். கடந்த காலங்களில் பாடகர்களாக இருந்தவர்கள், எனது பிரதேசத்தில் வசிப்பவர்கள் தமது திறமைகளை மறைத்துவிட்டு, கூலி வேலைகளுக்குச் சென்றார்கள். இந்த விடயம் எனக்கு கவலையை ஏற்படுத்தியது.

அவர்களுக்கு களம் அமைக்க வேண்டும் என விரும்பி உடனடியாக என்னுடன் பழகிய நண்பர்கள் மூலம் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட நிதியில் இசைக் கருவிகளை பெற்றுக்கொடுத்து 'கதிர்' என்கின்ற இசைக்குழுவினை உருவாக்கியுள்ளோம். தற்போது

அவர்கள் 12 இற்கும் மேற்பட்ட மேடைகளில் இசைக் குழுவினை நடாத்தியுள்ளார்கள்.


அவர்கள் அனைவரும் திறமையான கலைஞர்கள். தற்போது அவர்களுடைய பங்களிப்புடன் நான்கு இசைத் தட்டுக்களை வெளியிட்டிருக்கின்றோம். புதூர் நாகராகங்கள் என்கின்ற இசைத் தட்டு, புதுக்குளம் விநாயகர் பாமாலை என்கின்ற இசைத்தட்டு, பட்டிக் குடியிருப்பு ஆலயம் தொடர்பான இசைத்தட்டு, நெடுங்கேணி ஆலயங்கள் தொடர்பான இசைத்தட்டு என நான்கு இசைத்தட்டுகளை உருவாக்கி மொத்தமாக 22 பாடல்களை வெளியிட்டிருக்கின்றோம்.

**கேள்வி - உங்கள் பிரதேசத்தில் உட்கட்டுமான செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றன?**

**பதில் -** உட்கட்டுமானங்கள் என்கின்ற அடிப்படையில், புளியங்குளம் - நெடுங்கேணி வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டு மிகவும் அழகாக காணப்படுகிறது. அனைத்து இடங்களுக்கும் மிக விரைவாக சென்றுவரக்கூடிய நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. எனினும், உள்ளூராட்சி சபைகள் இயங்கிக்கொண்டிருந்தாலும் அவைகள் இன்னும் பலமடைய வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்களைப் பொறுத்தவரை இந்த பிரதேச நிதிப் பங்களிப்புடன் அபிவிருத்திகளை செய்வது என்பது சாத்தியமாகாது. ஏனெனில், சோலை வரி, ஆதன வரி போன்றன அறவிடப்படுவதில்லை. மக்களிடம் அந்த வரிகளை அறவிடக்கூடிய சூழலும் தற்போது இல்லை. எனினும், இவர்கள் எமது மக்களினால் தெரிவுசெய்யப்பட்டாலும் நிதி இல்லாத காரணத்தினால் எதுவித செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியாத நிலை காணப்படுகிறது. எனவே, உள்ளூராட்சி சபை வீதிகள் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாத வீதிகளாக காணப்படுகின்றன.

எனவே, இவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்றால் மாகாண சபை விசேட நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டும். ஆரம்ப காலங்களில் அவ்வாறான நிதி ஏற்பாடுகள் இருந்தன. அவ்வாறான நிதி ஏற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்படுத்தி, அவற்றின் வீதிகளையும் ஒரு தரமான வீதிகளாக மாற்றும் பட்சத்தில் இந்த பிரதேசத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

> **பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் என்கின்ற அடிப்படையில் நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 550 பேர் உள்ளனர். அவர்களுக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அமைப்புகளுக்கு ஊடாக அவர்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். எனினும், அவர்களுடைய விழிப்புணர்வும் பங்குபற்றுதலும் நாங்கள் எதிர்பார்க்கின்றளவிற்கு இல்லை என்பதே இங்கே கவலையான விடயம்.**



**கேள்வி - நெடுங்கேணி அல்லது வவுனியா வடக்கை அனைத்து தளங்களையும் குறிப்பாக கல்வி உள்ளிட்டவற்றை எவ்வாறு ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தலாம்?**

**பதில் -** இந்த தளங்களை நாம் கொண்டுவர வேண்டுமானால் மத்திய, மாகாண அரசுகள் சங்கிலித் தொடரான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமொன்றை நாம் இங்கே கொண்டுவர வேண்டும். அனைத்து நிறுவனங்களும் ஒரு மேடையில் அமர்ந்து திட்டங்களை நாம் செய்வதன் மூலம் இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம் என்பது தொடர்பான ஒரு விரிவான அறிக்கை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். குளங்களைப் பொறுத்தவரையில் முன்னர் அரசர் காலங்களில் அமைக்கப்பட்ட குளங்களாகத்தான் தற்போதும் காணப்படுகின்றன.

அவற்றை நாம் மீள புனரமைக்கின்ற வேலைகளைத்தான் செய்கின்றோமே தவிர, பாரிய இயந்திரங்கள் தற்போது பாவனையில் உள்ள போதும் அந்த இயந்திரங்கள் மூலம் இன்னும் கூடுதலான நீரை தேக்கி வைத்து கூடுதலான நிலப்பரப்பிற்கு நீரைப் பாய்ச்சுகின்ற திட்டம் கொண்டுவரப்பட வேண்டும். இதன் மூலம் விவசாயிகள் உட்பட அனைவரும் நன்மையடைவர். ●

அன்ரன் அன்பழகன்



# றோலர் பிரச்சினையால்

## 30 Km வரை தொழில் செய்யக்கூடிய நாம் 03 Km வரையே செல்கின்றோம்

**யோசப் பிரான்ஸிஸ்**

இந்திய மீனவர்களின் அத்துமீறலும் றோலர் மீன்பிடியும் நமது மீனவர்களின் வாழ்க்கையையும் நமது மீனவர்களின் கடல் வளத்தையும் பாழடித்து வருகின்றன. இந்த அத்துமீறல்களையும் தொழில்முறை மீறல்களையும் தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றனர் நமது மீனவர்கள். ஆனாலும், இந்த அத்துமீறல்களை இந்திய மீனவர்களும் கைவிடவில்லை. இலங்கையின் செல்வாக்குள்ள மீனவர்களும் கைவிடவில்லை. இதனால் இவர்கள் இரட்டை நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றனர். நமது கடற்றொழிலாளர்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக மனந்திறந்து தங்கள் கவலைகளைச் சொல்கிறார் கிளிநொச்சி மாவட்ட கிராமிய மீனவர் சம்மேளனத் தலைவர் திரு. யோசப் பிரான்ஸிஸ்.

திரு யோசப் பிரான்சிஸ் பள்ளிக்குடா கிராமத்தில் வாழுகின்றவர். பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவராகவும், கிளிநொச்சி மாவட்ட கிராமிய மீனவர் சம்மேளனத் தலைவராகவும் சேவையாற்றி வருபவர். சொந்த இலாபங்களுக்கு அப்பால் சமூகப் பிரச்சினைகளுடன் செயற்படும் இவர், நமது மீனவர்களின் எதிர்காலம் பற்றிய பிரக்ஞையுடன் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் கிளிநொச்சி மீனவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவராகவும் திகழ்கின்றார். அண்மையிலும் இந்தியாவுக்குச் சென்று பேச்சுகளில் பங்கேற்றவர்.

புதிய வன்னி இதழுக்காக யோசப் பிரான்ஸிஸ் வழங்கிய செவ்வியிது.

**இந்திய மீனவரின் அத்துமீறலும், யாழ்ப்பாண மீனவர்களின் றோலர்களும் உங்களுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றி பேசி வருகிறீர்கள். இதன் உண்மையான நிலை என்ன?**

தினம், தினம் இயற்கையோடு போராடி வாழுகின்ற எங்கள் வாழ்வு, வாழ்வதற்கான போராட்டமாகவே இன்று மாறி விட்டது. எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையோடுதான் மீள்குடியேறினோம். யுத்த காலத்தில் கடலில் இறங்குவதற்கு மட்டுமே எங்கள் வாழ்க்கையை பணயம் வைத்தோம். ஆனாலும் மரணத்திற்குள்ளும் வாழ்ந்தோம். ஆனால், இப்போது வாழவே முடியாத நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளோம்.

ஒரு புறம் இந்திய றோலர்கள். மறுபுறம் உள்ளூர் றோலர்கள் எங்களுடைய வலைகளை அழிக்கின்றன. தினம் தினம் பெறுமதியான எமது தொழில் உபகரணங்கள் அழிக்கப்படும் போது எப்படி எங்களால் தொழில் செய்ய முடியும்? எப்படி மகிழ்ச்சியாக வாழமுடியும்?

இந்த உபகரணங்களை எல்லாத் தொழிலாளர்களும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பல்வேறு தொண்டு நிறுவனங்கள் குறிப்பாக, ஐடுமுஇ ருனேஇ ஹுமுயுஇ ருசே-ர்ஊகுஇ ளுர்யு போன்றவையூடாகவும், கடற்றொழில் திணைக்களத்தினூடாகவும் நாம் பெற்றுக்கொள்ள பல்வேறு அரசியல் தலைமைகள் எமக்கு உதவின.

இந்திய றோலர்கள் மட்டுமல்ல, உள்ளூர் றோலர்களும் கடல்வளத்தை மட்டுமல்ல, எமது வலைகளையும் அறுத்து எம்மைத் தொழில் செய்ய முடியாதவர்கள் ஆக்குகின்றன. சிறிய உபகரணங்களுடன் நாளாந்த வாழ்வை ஓட்டும் எம்மைப் போன்ற சிறுதொழில் மீனவர்தான் எண்ணிக்கையில் அதிகமானவர்கள்.

ஆனாலும், எம்மைப்பற்றி அக்கறைப்படுபவர்கள் மிகச்சிலர் மட்டுமே. இதனைவிட டைன்மற் பயன்படுத்துபவர்கள் எமது மாவட்டத்திற்கு வெளியே இருந்து வருகிறார்கள். ஆனால், எமது மாவட்ட மீனவர்களின் வளங்களே அவர்களின் இலக்காகிறது. இதன் மூலம் ஏற்படுத்தப்படும் அழிவு எதிர் காலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இதனைவிட நாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளும் உண்டு. இரவு வேளைகளில் வெளிச்சம் பாய்ச்சி கடல் அட்டை பிடிப்பதால் மீன்கள் தூர விலகிப் போகின்றன. றோலர்களின்

பிரச்சினையால், கரையில் இருந்து 30 கிலோ மீற்றர் வரை சென்று தொழில் செய்யக்கூடிய நாம், மூன்று கிலோமீற்றர் வரையே இப்போது தொழிலுக்காகச் செல் லுகின்றோம். அதுமட்டுமல்ல, கணவாய் பிடிப்பதற்காக, கடலில் வைக்கப்படும் குழைகளும் எமது வலைகளைச் சேதமாக்குகின்றன.

**பூநகரிப் பிரதேசத்தில் மீன்பிடியில் எதிர்கொள் ளும் சவால்கள், நெருக்கடிகள் எப்படியானவை?**

பூநகரிப் பகுதியில் இப்போது, ஆழ்கடலில் இரும்புக் கம்பங்களை இணைத்து, பவளப் பாறைகளை பிளந்து உயரமாக பைப் (லிந)ப் பாடுகளை பாய்ந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த இரும்புக் கம்பங்களில் சிக்குப்படும் மீன்பிடிப் படகுகள் உடைந்து மீனவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம். அதுமட்டுமல்ல, இயற்கையாக மீன்களின் நகர்வுகளும் பாதிக்கப்படுகின்றன.

இந்த நாட்களில் (மார்ச் மாதக் காலப்பகுதியில்) எமது பகுதிகளில் மிக அதிகளவான கும்பிளா, ஊழை, சூடை என்பன கிடைக்கும். ஆனால், ஆழ்கடல் இரும்புப்பாடுகளால் அந்த அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பலர் பகிர்ந்து கொள்ளவேண்டியவற்றை ஒரு சிலர் மட்டுமே அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

"கடலட்டைப் பண்ணை" எனும் போர்வையில் போலி யான ஆவணங்களைத் தயாரித்து சட்டவிரோத முறையில் பெரிய அளவிலான கடலையும் கரைகளையும் ஒரு சிலர் ஆக்கிர மித்துள்ளனர். அவ்வாறான இடங்களில் தொழிலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு உள்ளூர் ஆட்கள் ஒரு சிலர் கோடரிக்காம்புகளாகத் தொழிற்படுகின்றனர்.

இதேபோன்று இரணைதீவில் குடியிருக்கவும், தங்கி தொழில் செய்யவும் இரணைதீவு மீனவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. இது அவர்களுடைய அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

**பொதுவாக கிளிநொச்சி மாவட்ட மீனவர்கள் - கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் என்ன?**

கிளிநொச்சியில் 72 மீனவக் கிராமங்கள் பெரும்பாலான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. பெரும்பாலான கிராமங்களுக்கு மின் வசதி கிட்டியுள்ளது. ஆனால், மீனவக் கிராமங்களில் இருந்து பிரதான நெடுஞ்சாலையை அடையும் வீதிகள் மிக மோசமாகவே உள்ளன. இதனால், சந்தைப்படுத்தல் வாய்ப்பு மற்றும் அவசர தேவைகளுக்கான பயணம் என்பன நெருக்கடியாகவுள்ளன.

பஸ் சேவைகளும் சரியாகக் கிடைப்பதில்லை. பாட சாலை மாணவர்கள், நோயாளிகள், வயோதிபர்கள் எனப்பலரும் பிரயாணத்துக்காகத் தினமும் சிரமப்படுகின்றனர். மீனவருக்கான வீட்டுத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படுத்தப்படவில்லை. வாசிப்பு மற்றும் விளையாட்டு என்பவற்றிற்கான சனசமூக நிலையங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**கிளிநொச்சி மாவட்டத்தின் மீன்பிடித் தொழில் தொடர்பாக...?**

கிளிநொச்சியைப் பொறுத்தவரை மேற்குகடல் யாழ்ப் பாண நீரேரி, ஆனையிறவு கடலேரி என்பவற்றிலேயே பிர தானமாக கடற்றொழில் இடம்பெறுகிறது. இதனால், ஒரு பருவகாலத்துக்கு மட்டுமே தொழில் வாய்ப்பு உள்ளது. கிழக்கு ஆழ்கடலில் பேய்ப்பாரைப்பிட்டியில் மட்டுமே சிறு தொகையினர் தொழில் செய்ய முடிகிறது. வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் முதல் பேய்ப்பாரைப்பிட்டிவரை கடல் நிலப்பரப்புகள் கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டால் கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய இருதரப்பு மக்களுமே நன்மை பெற்றிருப்பர்.

தொண்டமனாறு சிறு கடலேரியால் மட்டுமே இந்த நிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் இந்தப் பிரதேசம் பச்சிலைப்பள்ளியுடன் இணைந்திருந்தது. இதன் மூலம் வடக்கில் அதிகளவான மீன் உற்பத்தி செய்யப்படும் மாவட்டமாக கிளிநொச்சி சிறப்புப் பெற்றிருக்க முடியும். இதையே வடமராட்சி கிழக்கு மீனவர்களும் அங்குள்ள மக்களும் விரும்புகிறார்கள். மாவட்ட எல்லை மீள் நிர்ணயங்களில் இதனை எதிர்காலத்தில் எல்லோரும் கருத்தில் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

கிளிநொச்சி மாவட்ட மீனவர்களில் ஒரு சிலருக்கு மண்ணெண்ணை மானியத்துக்குப் பதிலான உபகரணங்கள் வழங்கப்படவில்லை. அத்துடன் அல்லிப்பளை, நல்லூர், நாகதேவன்துறை, கௌதாரிமுனை, நாச்சிக்குடா, அன்புபுரம் ஆகிய இடங்களுக்கு இறங்குதுறை அமைக்கப்படவில்லை. இடிதாங்கி, கலங்கரை விளக்கு, அனர்த்த எச்சரிக்கைக் கோபுரங்களும் அமைக்கப்படவில்லை. இறங்குதுறைகளில் கரைவரை வள்ளங்களைக் கொண்டுவரும் கால்வாய்கள் வெட்டப்பட்டு கரைகள் கட்டப்பட வேண்டும்.

இவற்றைச் செயற்படுத்துவதனூடாக, அதிகளவான வருவாயைப் பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். மீன்கள் பழுதடையாமல் பாதுகாக்கப்படக்கூடிய ஐஸ் தொழிற்சாலை ஒன்று பூநகரிப் பிரதேசத்துக்கு அவசியம ாகிறது. இன்று இந்த வசதியின்மையால் மீன்பிடிக்கும் நேரங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்களின் வருமானமும் குறைந்துள்ளது.

**மீன்பிடி முறைகள் மற்றும் கடற்றொழிலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் எப்படி உள்ளன?**


கடலின் வளம் அருகிவரும் சூழ்நிலையில் மாற்று முறைகளையும் நாட வேண்டியுள்ளது. கடற்பாசி, பாலை, கொடுவாய், இறால், நண்டு வளர்ப்பு முறைகளையும் அதிக ளவில் மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்குப் புதிய தொழில்நுட்ப முறைகள், மூலதனத்துக்கான கடனுதவிகள் என்பனவும் அவசியமாகிறது. இவற்றுக்கான மீன் குஞ்சுகள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்படுவதால் செலவு அதி கமாகிறது. இவற்றை எமது பிரதேசங்களில் மேற்கொள்ளக் கூடிய வழிகளை, ஏற்பாடுகளை உரிய நிறுவனங்கள் ஊடாக மேற்கொண்டால், மலிவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், இப்பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, தொழில்நுட்ப அறிவு என்பனவும் கிடைக்கும்.

இவற்றின் மூலம் மகளிர் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் வருமானம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். இங்குள்ள ஆற்றுக் கழிமுகங்கள், பரவைக்கடல்கள் இதற்கான அரிய புறச்சூழலைக் கொண்டுள்ளன. அத்தோடு, எமது மீனவ அமைப்புகளுக்கான கட்டிடம், அலுவலக உபகரணங்கள் போன்ற வலுவூட்டல் முறைகளும் அவசியம ாகிறது. பரந்துபட்ட மீனவ சமூகத்தின் வாழ்க்கைத்தர மேம்பாடே மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தியின் அடித் தளமாகும். இதன் மூலமே தேசத்தின் சுபீட்சமும் உருவாக்கப்படும்.



தமிழ்க்கவி

# சொல்லியே தீராதும்...



# தெய்வம் வரம் கொடுக்கும் பூசாரி?

வருசாவருசம் கொட்டுற மழையில மண் வீடுகள் கொட்டுப்படுறதும் அதுக்கு நட்டஈடுபதியிறதும் வழக்கமான நடவடிக்கைதான். அப்பப்ப குடுக்கிறதையும் அரிசி சாமானாக் குடுத்து சனம் அடுத்த வருசமும் மழைக்குள்ள அல்லாட விடுறதுதான் வழக்கம். ஏதோ இந்த வரியம் கொஞ்சம் மாறுதலா நிரந்தரக் கூரைபோட்டு நிலத்துக்கு சீமெந்தும் போட உதவி செய்யிறதெண்டு வெளிக்கிட்டதில எங்களுக்கும் சந்தோசம்தான்.

வரிஞ்சு கட்டிக்கொண்டு மண் வீடுகளத் தேடப்போனா இன்னமும் தரப்பால் கூரைக்குள்ள இருக்கிற குடும்பங்களும் தட்டுப்பட்டிச்சுது. சரி அம்பதாயிரம் ரூவாவாம் ஒரு கூரையெண்டாலும் போட்டடன் எண்டு பதிஞ்சாச்சு. அதுகும் எங்கயுங்கோ கல்வீடுள்ளவை. மோனுக்கு குடுத்திட்டன் மோளுக்கு குடுத்திட்டன். எங்களுக்கு உந்த ஒத்தாப்புத்தான். எனக்கும் போடுங்கோ உனக்கும் போடுங்கோ எண்டு ஊருப்பட்ட புறணியள். மருதங்குளத்தில மீன்கார ராசப்பாவ தெரியுந்தானே. ஙா சேத்து மோட்டை வழிய கிடந்து கிடந்து மீனுக்கு திரிஞ்சதில மேலெல்லாம் கறணைபத்திப்போச்சு. அவள் மனிசிக்காறிதான் பாவம் எல்லாத்துக்கும் ஓடுப்பட்டுத்திரியிறது. பின்ன காசு வந்திடும். முதல் வீட்டை படம் எடுத்து கொண்டாங்கோ எண்டு சொன்னவையாம் பின்ன அவளும் ஒரு போட்டோக்கடைக்காறனை வீட்ட கூட்டிக்கொண்டு போய் எடுத்தவளாம். அது என்னவோ டி.எஸ் ஒவீ சில கேட்ட போஸில வரயில்லயாம் . திரும்ப மூண்டு கிலோமீட்டர் நடையா நடந்துபோய் அவனைக் கேக்க அவன் போங்கோ வாறன் எண்டானாம். அவள்பாவி அங்கின கூலிக்குப் போறதையும் விட்டிட்டு வீட்டில நிண்டா அவன் திடுகூறா ஆரோ பிறந்தநாளுக்கு கூப்பிட்டாங்களெண்டு போட்டானாம் மற்றநாள் வந்து எடுத்து உடன படம் தாறண்டா ஐநூறு ரூவா எண்டான் "ம் முதல்

# சொல்லியே தீரணும்...

ஐநூறு இப்ப ஐநூறு ஆயிரம் ரூவாத்தாள் படத்தோட பறந்தார்." எண்டழுதாள். பிறகும் ஆசறுதியா ஒரு நாலைஞ்சு மாசங் கழிச்சு பணம் வந்திட்டுது. எண்டு பாஞ்சு விழுந்து போச்சுது சனம்.

"புத்தியா வங்கியால காசை எடுத்தவுடன கூரைச்சீற்றையும். மரத்தையும் வாங்கிப்போட்டா அதுதானேயக்கா பெரிய சிலவு பிறகு ஆரயென் அண்ணை தம்பியெண்டு கேட்டு கூரைய ஏத்திப் போடலாம்" ராசன் பெண்டிலும் மற்றவையும் பேசிக்கொண்டது இதைத்தான். இதைத்தான் எங்கட சுந்தரியும் சொன்னாள்.

"எத்தின நாளைக்கக்கா குழந்தைப்பிள்ளையள வைச்சுக்கொண்டு அல்லாடுறது . வீட்டுத்திட்டமும் தராங்களாம்." மெய்யே, ரெண்டுசயிற்றும் ஆறாறு பன்னெண்டு சீற்வேணும். மரமும் பன்னெண்டடியில பன்னெண்டு இனி றீப்பை. ஆணிகாசு பத்துமோ மாமி?.... இல்லாட்டி கொஞ்சங்கொஞ்சமா எடுப்பமே?" எண்டு என்னட்டக் கேட்டாள்.

"பத்தாட்டி லாம்பெண்ணைய ஊத்தி பத்தவையன் விசரி உங்க ரவுணுக்கயிருந்து அஞ்சு கிலோமீட்டர் வரும் வீட்டடி ஏத்துக்கூலி என்னடி? ஒரு ரெண்டாயிரங் கேக்கமாட்டானேயடி ஙு ஆச்சல் ஆச்சலா வாகனம் பிடிக்க வச்சிருக்கிறியே? ஒருமிக்கத்தான் எடுக்கோணும்"

எல்லாங் கணக்குப்பாத்தா சரி ஐம்பதாயிரத்துக்கு மனதிலயே கூரையேத்தி மகிழ்ந்த மக்களுக்கு கட்டம் கட்டமாத்தான் காசெண்ட உடன இடி விழுந்தது போலாச்சு. முதல்கட்டம் இருவதாம் சரி நாலுபைக்கேற்று சீமெந்த வாங்கி மணலும் மேசன்கூலியும் போட்டு காணாம சின்ன அடைவையும் வச்சு வேலைய முடிச்சிட்டு மற்றகாசுக்குப் போனா அடப்பாவியளா திரும்பவும் படம் எடுக்கவாம் சரியா ஐநூறு ரூவா வாய்க்கட்டையில போட்டாச்சு.

படமெடுத்து கொண்டுபோக கிராம அதிகாரி சொல்லுறார் 'எனக்கு உது டவுட்டாக்கிடக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர ஒருக்கா நேரில போய் பாருங்க' எண்டு. அந்தப்பிள்ளையும் நேர வந்து பாத்திட்டு ஓம்சேர் கட்டியிருக்கினம் எண்டு கையெழுத்தப்போட்டா விதானையும் கையெழுத்தப் போட்டார் . அதை சம்பந்தப்பட்ட அதிகாரியிட்ட கொண்டுபோனா அவர் சொன்ன பதில்,

'என்ன உது கட்டினமாரியே கிடக்கு. என்ரஒவிசர் வந்து பாக்கோணும். அந்த மேசையில குடுங்கோ" எதுவும் பேசாமல் கோப்புகளைக் குறித்த மேசையில் குடுத்துவிட்டு வெளியே வந்தவள் என்னைக்கேட்டாள்.

"அப்ப கிராமசேவையாளரும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஆற்ற ஆக்கள். அவையள்ள நம்பிக்கை இல்லையெண்டா ஏன் அவை அங்க இருக்கினம்?" ஒரு பெறுமதியான கேள்விதான். உதுக்கு நான் எப்பிடி பதில் சொல்லுறது. உதில்ல கதை முதல் குடுத்தது இருவது ஆயிரம் இனி குடுக்கப்போறது பதினைஞ்சு பதினைஞ்சா ரெண்டுதரம். பதினையாயிரத்தை வச்சு அரசி பருப்பு உப்புப் புளிதான் வாங்கலாமெண்டது உந்தக்காசை உப்பாப் புளியாக் கரைச்சுக் குடுக்கிறவைக்குதெரியாதே? தாங்கள்உதவிட அதிகமான தொகைய ஒவ்வொரு மாதமும் சம்பளமா வாங்குகினம். அப்பிடியும் காணாதெண்டு சொல்லுகினம். பாவப்பட்ட சனம்மட்டும் காசை மொத்தமா பாக்கக் கூடாதெண்டதில அக்கறையாத்தான் இருக்கினம். இதுதான் சட்டம் இப்பிடித்தான் முறையெண்டு சொல்ல வராதையுங்கோ ஆளுமாளுமா இருக்கிற குடும்பங்களுக்கு முழுசா ஐம்பதும் குடுத்திட்டினம். பிள்ளைகுட்டியள வச்சுக்கொண்டு பக்கத்து வீடுகள்ள போய் படுக்கிற நிலையில உள்ள குடும்பங்களுக்குத்தான் இந்த நிலைமை,

இண்டைக்கும் மூண்டாவது தடவையா பிரதேச செயலகத்துக்கு வந்த சுந்தரி அலுப்போட சொன்னாள்,

"அவருக்கு நேரமில்லையாம்' இனி வெள்ளிக்கிழமை வாறாராம். பாருங்கோ இண்டைக்கும் வேலையில்ல அலைஞ்சது இனி வெள்ளிக்கிழமையும் வீட்டில தொண்ணாந்துகொண்டு நிக்கோணும்."

தனக்குக் கீழ உள்ள சக ஊழியர்களையும் இவை அவமதிக்கினம் எண்டது தெரியாமயே கிடக்கும் தாங்கள் கடமையில இறுக்கமா இருக்கினமாம் எண்டு காட்டுறது சரி ஏழைப்பட்ட சனங்கள்ள கொஞ்சம் இரக்கமாயும் இருங்கோ எண்டுதான் சொல்லுறம்.

***

- பெருமாள் விநாயகன்



# நடக்கும் ஆனால் நடக்காது

எதிர்வரும் ஜுலையில் பாராளுமன்றத் தேர்தல் -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

மகிந்த அரசியலுக்கு மீண்டும்வருவது-
**நடக்கும் ஆனால், நடக்காது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியில் பங்கேற்பது -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

சீனாவை இலங்கையிலிருந்து முற்றாக வெளியேற்றுவது -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

புதிய ஆட்சியில் அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்குமான ஏற்பாடுகள் -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

வடக்கையும் கிழக்கையும்இணைப்பது -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

ஜனாதிபதித் தேர்தலின்போது சொன்னதெல்லாம் ஆட்சி மாற்றத்தில் -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

இந்திய மீனவர்களின் அத்து மீறலுக்கு ஒரு தீர்வு எட்டப்படுவது -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

விவசாயிகளுக்கான உத்தரவாதமும் தொழில் மேம்பாடும் -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

காணாமல் போனோரைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகள் -
**நடக்கும் ஆனால், நடக்காது.**

போரிலே உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்-
**நடக்கும் ஆனால், நடக்காது.**





வ

வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்குப் பதிலாக வடக்கையும் கிழக்கையும் ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கும் காரியங்கள் நடக்கின்றன. இதற்காகத்தான் ரணிலும், மைத்திரியும் முயற்சிக்கிறார்கள்.

கி

நெடுங்கேணியில் பெரிய அளவில் பப்பாசிச் செய்கை நடக்கிறது. ஆண்டொன்றுக்கு மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் உழைத்த உற்பத்தியாளர்கள் உள்ளனர். அங்கிருந்து மாதம் ஒன்றுக்கு 125,000 கிலோ பப்பாசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால், இந்தப் பப்பாசிச் செய்கை பலருக்கும் புதிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. அரச உத்தியோகத்தர்களே, பகுதி நேரமாக பப்பாசிச் செய்கையில் ஈடுபடுகிறார்கள்.





வன்னியில் இப்பொழுது பால் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவிக்கிறது. 2009 இல் யுத்தம் முடிந்தபின் மீள் குடியேற வந்த பொழுது எவரிடமும் கால்நடைகளும் இருக்கவில்லை. பால் எடுப்பு நடக்கவும் இல்லை.

ஐந்து ஆண்டுகளுக்குள் இது ஒரு பெரிய மாற்றம்தான். அப்படியென்றால், அடுத்து வரும் ஆண்டுகளில் வன்னியிலேயே பால் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலை வரும்போலுள்ளது.



மாந்தையிலிருந்து பனங்காமம். நட்டாங்கண்டல் வரை பழைய இராசதானிகள் இருந்ததற்கான சுவடுகளும் எச்சங்களும் இருந்தன அல்லவா. இப்பொழுது அங்கே எதையும் காணமுடியவில்லை. யுத்தத்தின் போதும் அந்தச் சுவடுகள் இருந்தன என்று சொல்கிறார்கள் அந்தப் பிரதேசவாசிகள்.

**அப்படியானால், அங்கே என்ன நடந்தது?**

பூநகரியில் மண்ணித்தலை என்று ஒரு இடம் உண்டு. மணல் மேடுகள் நிறைந்த இடம். இயற்கை அழகு கொஞ்சும் பகுதி. மணல்தான் அங்கே வளம். அது தான் அங்கே அடையாளம். அது தான் அங்கே சிறப்பு. ஆனால், அந்த மணல் மேடுகளை அந்த ஊர்வாசிகளே அழித்து, விற்று வருகிறார்கள்.

அந்த ஊர்வாசிகள் இப்பொழுது அங்கே இருப்பதில்லை. அவர்கள் வேறு ஊர்களுக்குப் பெயர்ந்து போய்விட்டார்கள். ஆகவே, ஊரைப்பற்றிய கவலைகள் எதுவும் இல்லாமல் மணலை விற்கிறார்கள். தங்கள் காணிகளில் இருக்கும் மணலை விற்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, மண்ணித்தலை என்ற ஊரையே விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கவலைப் படுகிறார்கள், மண்ணித் தலையிலேயே இன்னும் குடியிருக்கின்ற ஊரவர்கள். இப்பொழுது அங்கே இருப்பது 40 குடும்பங்கள்மட்டுமே.



அரசாங்கத் திணைக்களங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட காணிகளை பொது மக்கள் அபகரிப்பது குற்றமா இல்லையா? அல்லது அவற்றைப் பயன்படுத்துவது நியாயமா, இல்லையா? என்ற விவாதங்களுக்கு அப்பால், அந்தக் காணிகளைப் பாதுகாக்க வேண்டியது அனைவருடையதும் பொறுப்பாகும்.

ஏனென்றால், பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கும் பொதுச் சேவைக்காகவே திணைக்களங்கள் உள்ளன. அதற்காகவே திணைக்களங்களுக்கான காணிகளும் கட்டிடங்களும் ஒதுக்கப்பட்டன. ஆனால், இதையெல்லாம் புறக்கணித்து விட்டு, அந்தக் காணிகளை அத்துமீறிப் பிடித்துக் கொண்டு உரிமை கொண்டாடுவது நியாயமே இல்லை. அது அந்த மக்களுக்கான நட்டம் மட்டுமல்ல, அனைவருக்குமான நட்டமாகும்.

இந்தக் காணி அபகரிப்புகளால் பல பாடசாலைகள் தங்கள் காணிகளை இழந்திருக்கின்றன. நீர்ப்பாசனத் திணைக்களம், கல்வித் திணைக்களம், நீதிமன்றம், விளையாட்டு மைதானங்கள் போன்ற பொது அமைப்புகள் இப்பொழுது மிஞ்சியிருக்கும் காணிகளில் தங்களைச் சுருக்கி வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை உண்டாக்கும். எதிர்காலத்தில் சனத்தொகைப் பிரச்சினைக்கு ஏற்ற மாதிரி தேவையான சேவைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படும்.




அப்பொழுது என்ன செய்ய முடியும்? எதுவுமே செய்ய முடியாது. செய்யக் கூடியது ஊரை விட்டு வெளியேறிப் போக வேண்டியதுதான்.

# நெடுங்கேணி வைத்தியசாலை

ஒரேயொரு மருத்துவருடன் இயங்கிச் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது நெடுங்கேணிப் பிரதேச வைத்தியசாலை.

ஆனால் இந்த வைத்தியசாலைக்கு ஆறு மருத்துவர்கள் தேவை. இப்பொழுது உள்ள மருத்துவரும் சிங்களவர். தமிழும் சரியாகத் தெரியாது. இந்த நிலையில் நாங்கள் என்ன செய்கிறது? என்று கேட்கின்றனர் பிரதேசவாசிகள்.

இந்த வைத்தியசாலைக்கு நோயாளிகள் சென்றால் அவர்களில் பெரும்பாலானவர்களையும் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கிறது மருத்துவமனை நிர்வாகம். அதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார்கள் வைத்தியசாலை ஊழியர்கள். சாதாரண நோய்களுக்கான சிகிச்சைக்கே வவுனியாவுக்குத்தான் அனுப்பப்படுகிறார்கள் நோயாளிகள். இதனால் அம்புலன்ஸ் சேவை சீராகச் சிறப்பாக நடக்கிறது.

ஆனால் வைத்தியசாலை சிறப்பாக இயங்க வேண்டும் என்பதற்காக தங்களுடைய மைதானத்தையே அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறது நெடுங்கேணி விளையாட்டுக்கழகம். விளையாட்டு மைதானத்தை அன்பளிப்பாகக் கொடுத்தது நல்ல முறையில் மருத்துவமனை இயங்க வேண்டும் என்பதற்காகவே தவிர இப்படி நோயாளிகளை அலைப்பதற்கல்ல என்று வருத்தப்படுகிறார்கள் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள்.

மருத்துவமனைக்காக விளையாட்டு மைதானத்தை இழந்தோம். இப்பொழுது மருத்துவமனையும் இல்லை. விளையாட்டு மைதானமும் இல்லை என்ற வருத்தத்தோடு அவர்கள் மேலும் சொன்னவை,


நெடுங்கேணியிலும் அதன் சுற்றுப்புறத்திலுமாக 3000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கிருக்கும் ஒரே மருத்துவமனை நெடுங்கேணிப் பிரதேச மருத்துவமனைதான். இந்த மருத்துவமனையை நம்பித்தான் இவ்வளவு குடும்பங்களும் இங்கே நெடுங்கேணிப் பிரதேசத்துக்கு மீள்குடியேற வந்திருக்கு. வைத்தியசாலையும் பாடசாலையும் சீராக இயங்கினால் இன்னும் நிறையப்பேர் சொந்த ஊருக்கு நெடுங்கேணிப் பிரதேசத்துக்கே வருவார்கள். ஆஸ்பத்திரி சீரில்லை என்றால் யார்தான் ஊருக்கு வருவார்கள்?...

நெடுங்கேணியில் உள்ள பொதுச் சுகாதார அதிகாரி (எம்.ஓ.எச்) யின்பணிமனை விடுதி ஆகியவற்றைக் கூட முழுமையாக இயங்க வைக்கும் முயற்சிகள் சரியாக நடக்கவில்லை.

பொதுச் சுகாதார அதிகாரி (எம்.ஓ.எச்) யின் பணிமனை விடுதியில் ஒரு பகுதி இன்னமும் படையினர் கன்ரீன் நடத்திக்கொண்டிருக்கின்றனர். இதை மீட்பதற்கான முயற்சிகளை யாரும் எடுக்கவில்லை.



# இலங்கையில் மாற்றம்





# அரசியற் பண்பாட்டின் வழியாகவே நிகழவேண்டும்

கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

ஆதிக்க அரசியலின் அபாயம் இலங்கையர்கள் அனைவருக்கும் பொது வானது. அதில் தமிழர், சிங்களவர், முஸ் ஸீம்கள், மலையகத்தவர்கள் என்ற வேறுபாடு எல்லாம் கிடையாது. எல்லோரையும் அது பாதிக்கும், பாதித்துக் கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் இதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தி லும் இதை உணரப்போகிறோம். இலங் கையர்களின் தவறுகளை பிராந்திய சக்தி யான இந்தியாவும், மேற்குலகும், சீனா வும் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசியல் என்பது வெளிப்படையாகவே பிராந்திய, சர்வ தேச அரசியலின் களமேடையாகியுள்ளது. இதனால், இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய மூன்று பெரும் வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டிக்குள் சிக்கியுள்ளது இலங்கை. இலங்கையில் நடக்கின்ற, நடக்கப்போகின்ற அனைத்து விடயங்களும் இந்த நாடுகளின் தீர்மானத்தின் அடிப்படையிலும் போட்டிகளின் விளைவாகவுமே நடந்து வருகின்றன. இனியும் அப்படித்தான் நடக்கப்போகின்றன. இனப்பிரச்சி னைக்கான தீர்வாக இருக்கலாம், பொருளாதாரத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளாக இருக்கலாம், கல்விக் கொள்கைகளாக இருக்கலாம், அண்மைக்காலங்களில் பேசப்பட்டு வரும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை விவகாரங்கள் போன்ற அனைத்துமே இந்த வல்லர சுப்போட்டிக்குள்தான் - இந்த ஆதிக்க நாடுகளுடைய நலன்களின் அடிப்படை யில்தான் நடக்கின்றன நடக்கப் போகின்றன. இது அனைவரும் இலகு வாகப் புரிந்து கொள்ளக் கூடிய வெ- ளிப் படையான எளிய உண்மை.


ஆனால், இதைப் புரிந்து கொள் ளாமல் அல்லது புரிந்து கொண்டும் புரியாமல் இருப்பதைப்போலவேபெரும் பாலானவர்கள் செயற்படுகின்றனர்.

**இது ஏன்?**

அரசியலை முன்னெடுக்கும் சக்திகள் எப்பொழுதும் இரண்டு வகை யானவை. ஒன்று தாம் முன்னெடுக்கும் அரசியலின் மூலமாக மக்களுக்கான நன்மைகளை அளிப்பன. அதாவது, மக்களின் நலனை முதன்மையாகக் கொண்டவை. இவையே வரலாற்றை முன்னகர்த்துகின்றன. தாம் பிரதிநிதித் துவப்படுத்தும் மக்களையும் அவர்களு டைய வாழ்க்கையையும் அந்த மக்க ளுடைய இருப்பையும் அடையா ளத்தையும் பாதுகாத்து மேம்படுத்து பவை இவைதான்.

ஆகவே, அதற்கான கோட்பாடு, கொள்கை, வழிமுறை, அணுகுமுறை- றகள், நடவடிக்கைகள் போன்றவற்றை இவை வகுத்துக் கொள்கின்றன.

அடுத்தது, மக்களை வைத்துத் தமது அரசியல் நலன்களைப் பெற்றுக்கொள்பவை. இவை மக்க ளின் நலனை விடக் கட்சியின் நலன், அமைப்பின் நலன், அமைப் பிலுள்ள அல்லது கட்சியில் உள் ளவர்களின் நலன்களைப்பற்றியே முதன்மைப்படுத்திச் சிந்திக்கின்றன. இதனால் இந்தச் சக்திகள் மக்களைக் கருவிகளாகப் பயன்படுத்துகின்றன. இவை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணாமல், அவற்றைத் தொடர்ந்து வைத்துக் கொண்டு,



அதையே அரசியல் முதலீடாக்கித் தமது அரசியலைத் தொடருகின்றன. இவற்றினால் மக்களுக்கும் நாட்டுக்கும் எப்பொழுதும் பின்னடைவும் நெருக்கடிகளும் அழிவுமே ஏற்படும்.

தமது அரசியல் நலன்களுக்காகவும் அதன் இலக்கிற்காகவும் மக்களிடம் இலகுவில் எடுபடக்கூடிய சாதி, மத, இன, பிரதேச உணர்வலைகளை இவை தூண்டுகின்றன. இது முரண்பாட்டு அரசியலுக்கான நரம்போட்டங்கள். ஆகவே, இந்த முரண்பாட்டைத் தமது அரசியலின் அடித்தளமாகப் பயன்படுத்தி, எப்பொழுதும் எரியும் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன. பிறகு இந்த எரியும் பிரச்சினைகளைக் காண்பித்துக் காலத்தை ஓட்டுவதே இந்தச் சக்திகளின் பிரதானமான பண்பாகும்.

வரலாற்றின் எதிர்நிலைச் சக்திகள் இவைதான். ஆனால், இந்தச் சக்திகள் கையாளும் உபாயங்களினால் இவை எப்பொழுதும் முன்னிலை வகிக்கும்.

இலங்கை அரசியலில் இந்த எதிர்நிலைச்சக்திகளின் இயக்கத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும். இத்தகைய சக்திகள் உள்நாட்டில் அசமத்துவமான நிலைமைகளை எதிர்நிலைகளை - எப்பொழுதும் உண்டாக்கிக்கொண்டும் அசமத்துவ நிலையைப் பேணிக்கொண்டும் இருக்கும். இந்த அசமத்துவ நிலைதான் வெளிச்சக்திகளுக்கு எப்பொழுதும் வாய்ப்புகளை அளிக்கின்றன. ஆதிக்கச் சக்திகள் இந்த வாய்ப்பை எதிர்பார்த்தே காத்திருக்கின்றன. இலங்கையில் ஆதிக்க சக்திகள் நேரடியாக இன்று தலையிடுவதற்கு இந்த முரண்பாட்டு அரசியலை மிக நுட்பமாகவும் மிக எளிதாகவும் கையாண்டு வருகின்றன. யுத்தத்தை உண்டாக்கியதும் அதை நடத்தியதும் அதை முடித்து வைத்ததும் யுத்தத்திற்குப் பின்னரான சூழலை நிர்வகிப்பதும் இந்தச் சக்திகள்தான்.

ஆனால், ஆதிக்க அரசியலின் அபாயம் இலங்கையர்கள் அனைவருக்கும் பொதுவானது. அதில் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், மலையகத்தவர்கள் என்ற வேறுபாடு எல்லாம் கிடையாது. எல்லோரையும் அது பாதிக்கும் பாதித்துக் கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் இதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலும் இதை உணரப்போகிறோம். இலங்கையர்களின் தவறுகளை பிராந்திய சக்தியான இந்தியாவும், மேற்குலகும், சீனாவும் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இதை யாரும் சரியாக விளங்கிக்கொள்கிறார்களில்லை. விளங்கிக் கொண்டவர்களும் மாற்றாக எதையும் செய்யத் துணிவதில்லை. பதிலாக மேலும் மேலும் தமக்குள் முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டு எதிராளிகளுக்கு வாய்ப்புகளை அளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளை இந்த வல்லாதிக்கச் சக்திகளுடன் இணைந்து நின்று தமக்கான நலன்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதனால் தொடர்ச்சியான பாதிப்பைச் சந்திப்பது மக்களே. இது இரட்டை அணுகுமுறையின் பார்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டியது. ஒன்று இன, மத முரண்பாடுகளை முதன்மைப்படுத்தி இடைவெளிகளை உண்டாக்குவதும் அதைப் பேணுவதுமாகும். அடுத்தது, பிராந்திய சர்வதேச சக்திகளுடன் இணைந்து செயற்படுவது. இதைத் திட்டமிட்டே அரசியல் அமைப்புகளும் கட்சிகளும் செயற்படுத்துகின்றன. இதற்குத் தலைமை தாங்குகின்றனர் பெரும்பாலான தலைவர்கள். இந்தத் தலைவர்களைத்தான் மக்களும் தங்களுடைய வழிகாட்டிகளாவும் மீட்பர்களாகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால்தான் இலங்கையின் எந்தப் பிரச்சினையும் தீர்வு காண முடியாத பிரச்சினைகளாக நீண்டு செல்கின்றன. மக்களின் ஆதரவைப்பெருவாரியாகப் பெற்ற எந்தத் தலைவர்களாலும் எந்த அரசியற் சக்திகளாலும் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாதிருக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொண்டால், அது ஏன் என்ற கேள்வி நமக்குள் எழும். அது இனப்பிரச்சினையாக இருக்கலாம், பொருளாதாரப் பிரச்சினைகளாக இருக்கலாம், ஜனநாயக நெருக்கடிகளாக இருக்கலாம் எதுவாயினும். அவ்வப்போது வருகின்ற தேர்தல்கள் பெரிய எதிர்பார்ப்புகளை உண்டு பண்ணினாலும் தேர்தலின் பின்னரான நிலைமைகளில் எந்தப் பெரிய மாற்றங்களையும் யாரும் உணர முடிவதில்லை. இதேவேளை ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் வெளிச்சக்திகள் மட்டும் தாராளமாக தங்களுடைய நலன்களைப் பெற்றுக் கொள்கின்றன. தமது உறுதிப் பாட்டையும் உறுதி செய்து கொள் கின்றன.

இதைப் புரிந்து கொண்டவர்கள் இந்த அபாய நிலையை எப்படி முறியடிப்பது? இதை எப்படிக் கடந்து செல்வது? என்று சிந்திக்க வேண்டும். உள்நாட்டில் முரண்பாடுகளைக் களைந்து, அதிகாரத்தைப் பகிர்ந்து, இசைந்து வாழ முடியாதவர்கள்

**உள்நாட்டில் முரண்பாடுகளைக் களைந்து, அதிகாரத்தைப் பகிர்ந்து, இசைந்து வாழ முடியாதவர்கள் வெளிச்சக்திகளுக்கு அடங்கிவாழ வேண்டியிருக்கிறது என்ற அபத்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதை உணர்ந்தும் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதுதான் வேடிக்கையானதும் வேதனையானதுமாகும்.**


வெளிச்சக்திகளுக்கு அடங்கிவாழ வேண்டியிருக்கிறது என்ற அபத்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதை உணர்ந்தும் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதுதான் வேடிக்கையானதும் வேதனையானதுமாகும்.

உண்மையையும் யதார்த்தத்தையும் உணர்ந்து கொண்டு செயற்பட்டால் வெளிச்சக்திகளின் காய் நகர்த்தல்களுக்குள்ளும் கால்களுக்குள்ளும் கிடந்து நசிபட வேண்டியதில்லை. இதை அதிகாரத்தரப்பும் புரிந்து கொள்ள மறுக்கிறது. ஒடுக்கப்பட்ட தரப்பும் உணர்ந்து கொள்ளத் தயங்குகிறது.

பதிலாக சிங்கள அரசியல் சமூகத்தினர் பிற சமூகங்களை நசிக்கவும் ஒடுக்கவும் முற்படுகின்றனர். அதிகாரத்தைப் பகிர்வதில் தயக்கம் காட்டுகின்றனர். இதேவேளை இந்தியாவிடமும் சீனாவிடமும் அமெரிக்காவிடமும் மண்டியிடுகின்றனர்.

இதைப்போல தமிழ் அரசியற் சமூகத்தினர் சிங்களவர்களுடன் பேசுவதற்கும் அவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் பதிலாக இந்தியாவிடமும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்திடமும் யாசிக்கின்றனர்.

நிச்சயமாக இந்த நிலை ஒரு போதும் இலங்கைக்கு நன்மையையும் இலங்கையர்களுக்கு நிம்மதியையும் தரப்போவதில்லை. பிராந்திய சர்வதேச சக்திகளின் ஆடற்களமாக இலங்கையை விட்டுக்கொடுத்தால் எதிர்காலத்தில் இது இரத்தக் களமாக மாறக்கூடிய நிலைக்கே செல்லும்.



சீனாவின் செல்வாக்கையிட்டு இந்தியாவும் மேற்குலகமும் அடைந்த பதற்றங்களை இப்பொழுதே பார்த்துக் கொண்டிருக்கிறோம். சீனாவைப் புறந்தள்ள முற்படும் மேற்குலகத்தின் அவசரமும் மேற்கின் இந்தப் பதற்றம் உண்டாக்கியிருக்கும் சீனாவுக்கான நெருக்கடியும் ஒரு மென்னிலையிலான கொதிநிலையை உண்டாக்கியிருப்பதையும் காண்கிறோம். இத்தகைய போக்கு எதிர்காலத்தில் நேரடியான விளைவுகளை வன்நிலை விளைவுகளை உண்டாக்கும்.

அத்தகைய வன்நிலையின் விளைவுகள் இலங்கையை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளேயே கொண்டு செல்லும். அது மட்டுமல்ல, இன்று பராமரிக்கப்படுகின்ற இனமுரண்பாடுகள் மேலும் மேலும் கூர்மைப்படுமாக இருந்தால் உள்ளரங்கிலும் கொதிநிலை ஏற்படும். பிளவுண்ட சமூகங்களைக் கொண்ட ஒரு சிறிய நாடான இலங்கை தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முடியாமல் திணறும். அத்தகைய ஒரு நிலை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது என்பதை யாரும் மறந்து விட முடியாது. ஏன், இப்பொழுதுகூட அத்தகைய நிலையிலிருந்து இலங்கை முழுதாக மீண்டுவிடவில்லை. புதிய ஆட்சிமாற்றத்தினால் இலங்கைக்கு சிறிய அளவில் அழுத்தக் குறைவும் நெருக்கடிகளின் தணிவும் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதே தவிர, அடிப்படையான பிரச்சினைகளும் அவற்றின் தீவிரத்தன்மைகளும் நீங்கிவிடவில்லை.

அண்மையில் நடந்த ஆட்சி மாற்றம் ஒரு காட்சி மாற்றம் போல நிகழ்ந்திருப்பது தலைகளின் மாற்றமே தவிர பண்பு மாற்றமோ குணாம்ச மாற்றமோ இல்லை என்பது தற்போது தெளிவாகி வரும் உண்மையாகும். இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இத்தகைய நிலைதான் எதிர்காலத்திலும் நிகழும்.

அடிப்படையான மாற்றங்களை உண்மையான மாற்றங்களை - ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் அதற்கு மக்களைக் குறித்த சிந்தனையும் பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான தந்திரோபாயங்களும் முக்கியம். இதுதான் புத்திசாலித்தனமும் அர்ப்பணிப்பும் கூடிய அரசியலாகும். இதுதான் இலங்கைக்கும் இலங்கைச் சமூகங்களுக்கும் பாதுகாப்பானது. இதுதான் தேவையானதும் கூட.

இந்த அரசியலைக் குறித்து சிந்திப்பதற்கான தருணம் இதுதான். ஒரு தொடர் யுத்தத்தைச் சந்தித்த மக்கள் அதன் கசப்பான அனுபவங்களைத் தங்களின் அகத்தில் கொண்டிருக்கின்றனர். பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் நலன்கள் எப்படி இலங்கையர்களையும் இலங்கையையும் பலவீனப்படுத்திச் சிதைவுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் அனைவரும் அறிந்திருக்கின்றனர். தீராத பிரச்சினைகளின் மத்தியில் தான் ஒவ்வொருவரும் குடியிருக்க வேண்டியிருக்கிறது. வாழவேண்டியுள்ளது என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மெய்யான மாற்றத்தைக் குறித்தும் புதிய பாதைகளைக் குறித்தும் சிந்திக்க முடியும்.

கசப்பிலிருந்தும் வலிகளிலிருந்தும் விடுபடுவதும் மீள்வதும் மனிதரின் அறிவுசார் நடத்தையாகும். அறிவுசார் நடத்தையைப் புறக்கணிக்கும் தோறும் மனிதர்கள் வீழ்ந்து படுவதே விதியாகும்.

**இலங்கையின் இன முரண்பாட்டினால் பிளவுண்டு போயிருக்கின்றன சமூகங்கள். இதனால் உறுதியற்ற தன்மை நாட்டிலும் சமூகங்களுக்கிடையிலும் ஏற்பட்டுள்ளது. யுத்தம் முடிந்தாலும் அமைதியற்ற, நம்பிக்கையற்ற சூழல்தான் தொடர்ந்துமுள்ளது. அரசியல் கொந்தளிப்பும், சமூகக் கொந்தளிப்பும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நாட்டைப் பொருளாதார நிலையிலும் அறிவுசார் நடத்தையிலும் முன்னகர்த்த முடியாது. இதுதான் இலங்கையில் தொடரும் அவலமாக உள்ளது.**



இவர் மேடை ஏற்றிய சுந்தரம் என்ற நாடகம், 1964ஆம் ஆண்டு ஏ.வி.எம் நிறுவனத்தால் திரைப்படமாக்கப்பட்டது. ஆனால் இந்தப்படத்தை கே.பாலச்சந்தர் இயக்கவில்லை. படத்தை இயக்கியவர் கிருஷ்ணன்பஞ்சு. கதைதான் கே.பாலச்சந்தருடையது. ஆனால் நாடக வடிவத்தின் பெரும் பகுதி திரை வடிவமாகி யதால் இந்தப் படத்தையும் பாலச்சந்தர் பட வரிசயில் இணைக்கலாம்.இசை விஸ்வநாதன் ராம மூர்த்தி என்ற இரட்டையர்கள். பாடல்கள் கண்ணதாசன், சீதாராமன், வாலி ஆகியோர் எழுதினார்கள். நாகேஷ், முத்துராமன், கே.ஆர் விஜயா, மேஜயர் சுந்தராஜன் மனோகரம்மா நடித்துள்ளார்கள். நாகேஷின் நடிப்பைச்சொல்லி வேலையில்லை. அப்படி அற்புதம் கதை இதுதான்.

## கே.பாலச்சந்தர்

# அவர் ஒரு தொடர் கதை 2

எம்.கிருஷ்ணமூர்த்தி
(அவுஸ்திரேலியா)

இயக்குநர் சத்தியஜித்ரே. பாலச்சந்தருக்கும் சத்திய ஜித் ரேயைப் பிடிக்கும். இருவரும் சந்திக்கும் போதெல்லாம் சினிமாவைப்பற்றி விவாதிப்பார்கள். அவர் தான் அனந்து இந்த உறவு அனந்துவை பாலச்சந்தர் படங்களில் இணைய உதவியது. உலக சினிமாபற்றி ஆழ்ந்த அறிவு கொண்டவர் அனந்து. அனந்துவின் பங்களிப்பு பாலச்சந்தரின் படங்களை ஏனைய தமிழ் சினிமாவிலிருந்து வேறுபடுத்த உதவியது. அனந்துக்கு புற்று நோய் வந்து மரணிக்கும் வரை பாலச்சந்தருடன் இருந்து அவரது வெற்றிக்குப் பெரிதும் உதவினார். கமலஹாசன் அனந்துவை நினைவு கூர்ந்து அனந்துதான் தனக்கு உலக சினிமாவை அறிமுகப்படுத்தியதாக கூறுவார்.

பாலச்சந்தர் நாடகங்களிலிருந்து சினிமாவுக்கு வரும் போது தான் மேடையேற்றிய சில நாடகங்களையும் திரைக்கு கொண்டு வந்தார். அவை மேஜர் சந்திரகாந், சர்வர் சுந்தரம் எதிர்நீச்சல், மெழுகுவர்த்தி, நாணல் என்பனவாகும்.

### எதிர் நீச்சல்

பாலச்சந்தருக்கு மிகவும் பிடித்த நடிகர் நாகேஸ். அப்போதைய கதாநாயகனாக முத்துராமன் இந்தப்படத்தில் நடித்தாலும் நாகேஷ்ஸ்தான் இந்தப் படத்தின் நாயகன். இவர்களுடன் சுந்தராஜன் (மேஜர்), ஸ்ரீகாந், எம். ஆர்.ஆர் வாசு, சௌகார்ஜானகி, ஜெயந்தி, மனோகரம்மா ஆகியோர் இதில் நடித்துள்ளனர். பாடல்கள் வாலி. இசை வி.குமார். என்னம்மா பொன்னம்மா பக்கம் வாம்மா என்ற பாடலுக்கு மட்டும் எம்.எஸ் விஸ்வநாதன் இசை அமைத்துள்ளர். சென்னையிலே ஒரே கட்டிடத்தில் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழும் மத்தியதர வர்கத்தில் எடுபிடி செய்து வாழும் ஒரு அனாதையைச் சுற்றிய கதை. அந்த அனாதைப் பாத்திரத்தின் பெயர் மாது. மாது பாத்திரத்தை நாகேஸ் ஏற்று சிறப்பாக செய்துள்ளார். வெற்றி வேண்டுமா போட்டுபாரடா எதிர்நீச்சல் என்ற சீர்காழி கோவிந்தராஜனின் குரலிலும் அடுத்தாற்று அம்பூயத்தை பார்த்தேலா என்ற சௌந்தராஜனதும்

சுசிலாவினது குரல்களிலும் ஒலிக்கும் பாடல் உட்பட பல பாடல்கள் என்றும் நினைவில் நீங்காதவை.

## மேஜர் சந்திரகாந்

முத்துராமன், ஜெயலலிதா, நாகே' ஏ.வி.எம் ராஜன், மேஜயர் சுந்தராஜன் உட்பட பலர் இதில் நடித்துள்ளனர்.வி. குமாரின் இனிமையான இசையில் பி.சுசிலா பாடிய ஒரு நாள் யாரோ என்ன பாடல் சொல்லித் தந்தாரோ, சௌந்தராஜன், சுசிலா ஆகியோரின் குரல்களில் நேற்று நீ சின்னப் பாப்பா என்ற பாடலும் கல்யாணச் சாப்பாடு போடவா என்ற பாடல் சந்தோசமாகவும் சோகமாகவும் இரண்டு உணர்ச்சிகளில் சொந்தராஜன் பாடியுள்ளார்.



1966இல் வெளிவந்த படத்தின் கதை இதுதான். நாகேஸ் ஒரு ஏழை ரெயிலர் அவரது தங்கை



ஜெயலலிதா. அவரை படிக்க வைத்து நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற கனவுடன் கடுமையாக உழைக்கிறார் நாகேஷஸ் பார்வை
இழந்த மேஜர் சந்திரகாந்திற்கு இரண்டு மகன்கள் முதலாவது இன்ஸ்பெற்றர் ஸ்ரீகாந் (முத்துராமன்) இளைய மகன் ரஜனிகாந் (ஏ.வி. எம்.ராஜன்). ஏ.வி.எம். ராஜன் பல பெண்களை காதலிப்பது போல நடித்து ஏமாற்றுகிறான். ஏ.வி. எம் ராஜனின் வலையில் ஜெயலலிதா சிக்கி ஏமாறுகிறாள். ஏமாற்றத்தை தாங்க முடியாமல் ஜெயலலிதா தற்கொலை செய்கிறாள். இதனால் ஆத்திரமுற்ற நாகேஸ் ஏ.வி.எம் ராஜனைக் கொலை செய்கிறார். பொலிஸ் துரத்துகிறது. மேஜர் வீட்டில் ஒழிக்கிறார் நாகேஸ். இப்படி கதை விறு விறுப்பாகப் போகிறது.

இதில் நாகே' உம், மேஜர் சுந்தராஜனும் போட்டி போட்டபடி நடிக்கின்றனர். இந்தப்படத்தின் மூலம் சுந்தராஜனின் பெயருடன் மேஜர் என்ற பட்டம் ஒட்டிக்கொண்டது. அதன் பிறகு அவர் மேஜர் சுந்தராஜன் ஆகிவிட்டார்.

## சர்வர் சுந்தரம்

இவர் மேடையேற்றிய சர்வர் சுந்தரம் என்ற நாடகம்,. 1964ஆம் ஆண்டு ஏ.வி.எம் நிறுவனத்தால் திரைப்படமாக்கப்பட்டது. ஆனால் இந்தப்படத்தை கே.பாலச்சந்தர் இயக்கவில்லை. படத்தை இயக்கியவர் கிரு'ணன்பஞ்சு. கதைதான் கே.பாலச் சந்தருடையது. ஆனால் நாடக வடிவத்தின் பெரும்பகுதி திரை வடிவமாகியதால் இந்தப்படத்தையும் பாலச்சந்தர் பட வரிசையில் இணைக்கலாம்.இசை விஸ்வநாதன் ராமமூர்த்தி என்ற இரட்டையர்கள். பாடல்கள் கண்ணதாசன்,சீதாராமன், வாலி ஆகியோர் எழுதினார்கள். நாகேஸ், முத்துராமன், கே.ஆர் விஜயா, மேஜயர் சுந்தராஜன், மனோகரம்மா நடித்துள்ளார்கள். நாகேஸின் நடிப்பைச்சொல்லி வேலையில்லை, அப்படி அற்புதம் கதை இதுதான்.

சிலை எடுத்தா இந்தச் சின்ன பெண்ணுக்கு என்ற பாடல் சுசிலாவின் குரலிலும், போகப்போகத் தெரியும் இந்தப்பூவின் வாசம் புரியும் என்ற பாடல் பி. வி சீனிவார் சுசிலா ஆகியோரின் குரலிலும், அவளுக்கென்ன அழகிய முகம் என்ற பாடலுக்கு சௌந்தராஜன் எல்.ஆர் ஈஸ்வரி இணைந்து தருகிறார்கள்.

நாகேஸ் ஒரு சர்வராக ஒரு தேனீர் கடையில் வேலை செய்கிறார். அப்போது கல்லூரியில் படிக்கும் கே.ஆர் விஜயா தனது நண்பிகளுடன் வருகிறார். நகேஸின் கலகலப்பையும் கிண்டலையும் கே.ஆர் விஜயா இரசிக்கிறார். இதை நாகேஸ் தன்னை கே.ஆர் விஜயா காதலிக்கிறதாக தவறாகப்புரிந்து கொள்கிறார். பின்னர் கே.ஆர் விஜயாவின் தந்தைதான் தான் வேலை செய்யும் கடையின் முதலாளியின் மகன் எனத் தெரிகிறது. இதே வேளை முத்துராமன் எதிர்பாராத விதமாக தனது நண்பன் நாகேஸை சந்திக்கிறார். முத்துராமனோ ஒரு கம்பெனியின் மனேச்சர். நாகேஸின் காதலையும் தெரிந்து கொண்டு நாகேஸின் வறுமையை நீக்கி அந்தஸ்தை உயர்த்தினால்தான், நாகேஸின் காதல் வெற்றி பெறும் என நம்பி நாகேஸை சினிமா நட்சத்திரமாக்கிறார். ஆனால் தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணைத்தான் நாகேஸ் காதலிக்கிறார் எனப் பின்னர் தெரிய வருகிறது. இந்தக் குழப்பத்திற்கு என்ன முடிவென்பதை படத்தில் சுவார்சியமாகச்

(கதை தொடரும்...)





**05**

# பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம்

இயல்வாணன்

பாக்கியம் பாட்டி கண் விழித்த போது எந்தச் சத்தத்தையும் கேட்கவில்லை. என்ன நேரமிருக்கும்? என்றும் தெரியவில்லை. சிறிது நேரம் கண்களை மூடியபடி படுத்திருந்தார். நித்திரை வருவதாக இல்லை. மெல்ல எழுந்து உட்கார்ந்தார். எழுந்ததும் சற்றுப் பறந்தது போல உயர்ந்து பின்னர் கட்டிலில் அமர்ந்தார். மனிசர் ஒரு இடத்திலை இருக்கக் கூட முடியாத பலூன் வாழ்க்கையாய்ப் போச்சுது என்று சலித்துக் கொண்டார்.

பூமியிலை என்றால் அதிகாலையிலேயே எழுந்து விடுவார். பாத்திர பண்டங்களை மினுக்கி வைத்து விட்டு, சூடாக ஒரு தேத்தண்ணி குடித்து விட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பார். இப்போது தேத்தண்ணி ஆசையே நின்று விட்டது. என்றைக்கு மகனிடம் விண்வெளிக்குப் போக முடிவெடுத்தாரோ அதிலிருந்து அவரது எல்லா வேலைகளும் நின்று விட்டன. எல்லா ஆசைகளும் அழிந்து விட்டன. சிறிது நேரம் பூமியில் உள்ள கடவுள்களை வேண்டிக் கொண்டார். இப்படியே பொழுது கழிந்து கொண்டிருந்தது. பாட்டி மெதுவாகப் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார்.

படுக்கை நோயாளி போல நீண்ட நேரமாக தனிமையில் படுத்திருப்பது பாட்டிக்குப் பிடிக்கவில்லை. பிடிக்காதிருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது தானே! நரக வாழ்க்கை எண்டிறது இதுதானோ என்று கூடப் பாட்டி சிந்தித்தார். எவ்வளவு நேரம் போனதோ தெரியவில்லை. சத்தியசீலன் வந்து அம்மா எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்ட போதுதான் கண்களைத் திறந்து கொண்டார்.

வா ராசா, நான் நல்லாயிருக்கிறன். இப்ப மணி என்ன மேனை? என்று கேட்டார். சத்தியசீலன் பலத்துச் சிரித்தார். அம்மா! மணி, நிமிசம் எல்லாம் பூமியிலைதான். இங்கை நேரமேயில்லை என்று சொன்னார். அதன் பின் பாட்டியிடம் ஊர்ப் புதினங்களைக் கேட்டார். பாட்டியும் அவற்றை ஒன்றும் விடாமல் சொல்லிக் கொண்டிருந்தார். இந்த நேரத்தில் கட்டுப்பாட்டு அறையில் இருந்து சமிக்ஞை வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. சத்தியசீலன் அம்மா இருங்கோ வாறன் என்று விட்டு விரைவாக மிதந்து சென்றார்.

விண்ணாய்வு மையத்திலிருந்து 7 ஒளியாண்டு தூரத்தில் வரும் விண்கல்லொன்று விண்ணாய்வு மையத்தைத் தாக்கக் கூடும் என்று நாசா தகவல் அனுப்பியிருந்தது. எல்லோரும் பரபரப்பாக இயங்கினர். விண்கல்லை இனங்காணும் வேலைகளில் இறங்கினர். விண்கல்லை இனங்கண்டு, அதன் வேகம், திசை ஆகியவற்றைச் சரியாக அவதானித்து கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அறிவித்து உரிய கட்டளைகளைப் பெற வேண்டும். அதிலிருந்து பாதுகாக்க கட்டுப்பாட்டு நிலையமே விண்ணாய்வு மையத்தின் திசையை மாற்றி அப்பால் நகர்த்தும். பாட்டிக்கு இந்தத் தகவலை வெங்கிட்டு சொன்ன போது பாட்டி அதிர்ந்து விட்டார். விணகல் மோதினால் ஒன்றுமே எஞ்சாது. அப்படியே அழிந்து விடும். இப்படி எத்தனையோ தடவைகள் விண்கற்கள் குறுக்கிட்டும் அதிலிருந்து பாதுகாப்பாக விண்கலம் நகர்த்தப்பட்டது என்பதையும் சொன்னான்.

பேரப்பிள்ளையாவது வந்தால் அவனுடன் புதினங்களைக் கதைக்கலாம். அவனை உச்சி மோந்து மகிழலாம் என்றெல்லாம் பாட்டிக்கு ஆசையாக இருந்தது. பக்கத்து அறையில்தான் அவர்கள்



# பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம்

இருந்தனர். ஆனால் பூமியைப் போல எழுந்து நடந்து செல்ல முடியாது. வெங்கிட்டுவிடம் விடயத்தைச் சொல்லி சுடர்விழியை அழைத்து வரச் சொன்னார்.

பூமியில் இருக்கிற ஆசிரியரிடம் படித்துக் கொண்டிருக்கிறாள். படித்து முடிந்த பிறகுதான் அவள் வருவாள் என்று வெங்கிட்டு சொன்னான்.

பூமியில் இருந்து எப்படிப் படிப்பாள்? என்று பாட்டி ஆச்சரியமாகக் கேட்டாள்.

அங்கை இருக்கிற ஆசிரியர் செய்மதித் தொடர்பினூடாக வீடியோ கருத்தரங்கு முறையிலை சுடர்விழியோடை கதைப்பார். அவர் படிப்பிப்பார். இவள் அதைக் கேட்பாள். சந்தேகங்களும் நிவர்த்திக்கப்படும். தேவையான கேள்விகளும் பரிமாறப்படும். அதுக்குப் பிறகு இங்கையிருந்தே சுடர்விழி பரீட்சை எழுதுவாள் என்று வெங்கிட்டு சொன்னான்.

காலைச் சாப்பாட்டையாவது சாப்பிடுவோம் எனப் பாட்டி எண்ணினார். ரியூப்பில் அடைக்கப்பட்ட பசை போன்ற உணவை எடுத்தார். அப்போது அங்கு வந்த விஞ்ஞானியொருவர் அம்மா! இங்கு உடல் எடை-யைப் பரிசோதித்து அதற்கு ஏற்ற வகையிலேயே உணவை உண்ண வேண்டும். எனவே, இனிமேல் நாங்களே நேரத்துக்கு நேரம் உணவைத் தருவோம். கண்டபடி எதையும் சாப்பிட வேண்டாம் என்றார். பாட்டிக்கு ஒருபுறம் கோபமும், மறுபுறம் கவலை-யும் ஏற்பட்டது. சாப்பிடுறதோ எலிப்புழுக்கையளவு. அதுக்கும் கட்டுப்பாடென்றால்.. பாட்டிக்கு ஆரம்பமே கஸ்டமாக இருந்தது.

காலம் கடந்து கொண்டிருந்தது. இரவு, பகல், காலநிலை மாற்றங்கள் எதுவுமே தெரியாது. எத்தனை நாட்கள் முடிந்தன என்றும் தெரியாது. இருளும் ஒளியுமான வெளிப்புறத்தை அவ்வப்போது திரையில் பார்க்க முடிவதைத் தவிர இந்த அறைக்குள்தான் வாழ்க்கை. சுதந்திரமாக எழும்பித் திரிய முடியாது. பசியெடுக்கும் நேரம் உணவு உண்ண முடியாது. மகனையும், மருமகளையும், பேரப்பிள்ளையையும் கண்டு, அவர்களோடு கொஞ்சிக் குலாவி, இறுதிக் காலத்தை அவர்களுடன் கழிக்க வேண்டும் என்ற ஆவலில் வந்த பாக்கியம் பாட்டிக்கு அந்த ஆசை நிராசையாகிப் போனது போலவே இருந்தது.

பூமியில் என்றால் சத்தியசீலன் அடிக்கடி தொடர்பு கொண்டு கதைப்பார். இங்கேயோ அம்மா எப்பிடி இருக்கிறீர்கள்? என்ற ஒற்றைக் கேள்வியுடன் தனது அலுவல்களைக் கவனிக்கச் சென்று விடுவார். எப்போதாவது ஆசை அருமையாய் வந்து கதைக்கும் நேரம் ஏதாவது பிரச்சினை என்று சொல்லி அழைத்துச் சென்று விடுவார்கள்.

சுடர்விழியோ பிஸியாக இருந்தாள். பூமியில் உள்ள ஆசிரியர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி படிப்பதிலேயே அவளும், மருமகள் வித்தியாவும் ஆர்வமாக இருந்தனர். பத்து வருசப் படிப்பை சுடர்விழி ஐந்து வருடத்தில் படித்து முடிக்க வேண்டும். அப்பிடியென்றால்தான் நாங்கள் பூமிக்குத் திரும்பும் போது விரைவாகவே பட்டப் படிப்பை மேற்கொள்ள முடியும் என்பது வித்தியாவின் எதிர்பார்ப்பாகும். கண்டறியாத படிப்பு. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் என்று பாட்டி தனக்குள் பொருமிக் கொண்டார்.

பாட்டிக்குச் சலித்து விட்டது. பூமிக்குத் திரும்பி விடுவதே நல்லது போலப் பட்டது. இறந்தாலும் பூமியிலேயே இறக்க வேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டார். திருக்கைலாசத்தைக் காண வந்தவருக்கு விண்ணாய்வு நிலையமும், இந்த வாழ்க்கையும் நரகம் போலவே தோன்றியது.

மெதுவாகப் படுக்கையில் சாய்ந்து கொண்டார். கண்களை இறுக மூடிக் கொண்டார். அந்த நேரம் பார்த்து சத்தியசீலன் அம்மா! எப்படி இருக்கிறீர்கள்? என்றபடி வந்து சேர்ந்தார்.

மகனை ஏறெடுத்துப் பார்த்தார். கண்களைக் கண்ணீர் திரையிட்டது. தம்பி! நான் பூமியிலையே என்ரை உயிர் பிரிய வேணும். அங்கை கொண்டு போய் விடு மேனை! என்றார். இதைக் கேட்டதும் சத்தியசீலனுக்குத் திக்கென்றது. **(வளரும்)**

# 'காலப் பிழை'



பாலைப்பழக் காலத்தில் -
ஊர் காட்டிலே நிற்கும்.
பெட்டியில் பழம்பிடுங்கிக் கடகத்தில் நிரப்பும் கைகள்
வாயையும் வயிற்றையும் நிரப்பும்.
வாயில் ஒட்டும் பால் நாவில் ஊறும் தேன்.
இந்தக் காலத்தில்தான் பன்றி இறைச்சி
கொழுப்புத்திரண்டு
"வார்" அந்த மாதிரியிருக்கும் என்பார் சோமர்.
சும்மா சொல்லக் கூடாது, பாலைப்பழத்தைப் போலதான்
அந்தச் சீசனில பன்றி இறைச்சியும் இருக்கும்.
அந்த நாளில் பன்றி வேட்டைக்குப் போகாதவர்
அர்தான் உண்டு?

**பனிச்சம்பழக் காலத்தில்**
தேவனையும் மனோவையும் பார்க்கலாம் பனிக்கையடியில்.
தவிட்டு நிறக் கயரைப் பற்றி அவர்களுக்குக் கவலையே
இல்லை
பழம் ருஸியென்றால் பத்தும் பறந்து போகும்.
என்னதான் போனாலும் போகாது பனிச்சங்கயர்
என்றெல்லாம் சொல்லும் கார்த்திகேசண்ணையின் நினைவும்
போகாது என்றென்றைக்கும்.



**பனங்காய்க் காலத்தில் -**
இலையானும் கொசுவும் கண்ணில் மொய்க்கும்.
கோடை வரட்சியால் புல்லும் மேய்ச்சலும் கிடையாத மாடுகள்
பனைகளின் கீழே பனங்காயை ஈய்க்கும்.
பனைகளின் மேலே குரங்குகள் கூட்டமாய்ச் சூப்பும்.

ஆடி வெயிலில் காயும் பனாட்டு
பனாட்டுப் பாய் இல்லாத வீடுகளே இருந்ததில்லை அப்போது.
பனாட்டும் பழங்கஞ்சியும் பனாட்டும் பச்சையரிசிக் கஞ்சியும்
பனாட்டும் தேங்காய்ச் சொட்டும் சொன்ன கவை ஏராளம்.

எல்லா வீட்டிலும் பனம்பழ வாசம் எப்படியோ இருக்கும்.
ஓலைப்பெட்டியில் ஆறும் சுட்ட பனங்காய்ப்பணியாரம்
பத்துப் பன்னிரண்டு நாளைக்கும் பழுதாகாதிருக்கும்.
எத்தனை நாள் தின்றாலும் அலுக்காத அமிர்தம் அது.

யுத்தம் நடந்த சவுக்காரம் இல்லாக்காலத்தில்
பனங்களி ஊற்றித்தான் உடுப்புத் துவைத்தாள் ராணியக்கா.
ராணியக்கா மட்டுமில்லை, நாங்களும்தான்.




## நிலாக் காலத்தில்

வெள்ளி முரலும் பால் முரலும் துள்ளி விளையாடும்
சினைமீன்கள் கெம்பி விளையாடும்.
பரவைக்கடலில் நிலவு மீன்களோடு விளையாடும்.

ஐயாவுக்கு வெள்ளி முரல் பிடிக்கும்.
மாமாவுக்குச் சினைமீன் பிடிக்கும்
பெரியத்தைக்கு பால் முரல் பிடிக்கும்
எனக்கு நிலா மீன் பிடிக்கும்.

நிலவெறிக்கும் பொழுதில்
துள்ளித் தெறிக்கும் முரலும் கயலும்
வெள்ளிப் பறவையைப் போல, விண்ணெழுந்து
ஓடும் படகில் மெல்ல விழும்.
படகில் விழுந்த கயலைத் தூக்கிக் கொஞ்சிக்
கடலில் விட்டாள் கயற்கண்ணி.அவள்தான் தன்னுடைய காதலி
என்றார் ஒரு நாள் சின்னமாமா.
சின்னமாமா செத்துப், பத்து வருசமாச்சு என்றாலும்
நிலாக்காலப் பரவைக்கடலில் அவர் நினைவுதான் எழுந்தாடுது.
“நண்டுக்குச் சினை நிலாக்காலத்தில் இல்லை” என்று
சொன்னதும் சின்னமாமாதான்.



## அரிவி வெட்டுக் காலத்தில்

அமர்க்களமாக இருக்கும் எங்கள் ஊர்
அந்த நாட்களில்.

வெள்ளாப்போடு, கஞ்சிப்பானையும் கையில் அரிவாளுமாக
போருக்குப்போவதைப் போல அணிவகுத்துப் போனவர்கள்
வயலில் இறங்கினால் பாட்டும் பம்பலுமாக
பொழுது போகும்.
பொழுதோடு தொழிலும் ஓடும்.
இந்தப் பாட்டையும் பம்பலையும் கேட்டுக்கொண்டே
கிழக்கிலிருந்து மேற்கிற்குப் போவான் சூரியனும்.

காலையில் குனிந்தவர்கள் மாலையில் நிமிர்ந்தால்
பத்துப் பன்னிரண்டு ஏக்கர் வெட்டி வெளிப்பார்கள்.
ஆளுக்கு அரை ஏக்கருக்குக்
குறையாத வெட்டுக்காரன் அருமைத்துரை.
அருமைத்துரையை மிஞ்சி விடுவார் சின்னக்கண்டர்.
சின்னக்கண்டருக்கே சவால் விடுவார் கதிர்காமத்தம்பி

இப்படியே ஆளாளுக்குப் போட்டிபோட்டாலும்
ஆரிடமும் இல்லை எள்ளளவு பொறாமையும்.

களைத்துப்போய்க் கஞ்சிப் பானைக்கருகில் குந்தினால்,
பஞ்சி அலுப்புப் போகப் பகிடி நூறு பறைவார் சாமியண்ணை.
சாமியண்ணைக்கு இந்தப் பகிடியெல்லாம்
எப்பிடி வருகுதெண்டு ஆருக்கும் தெரியாது.
வெள்ளாமை விளைவிறதைப்போல
சாமியண்ணைக்குப் பகிடி விளையுது
எண்டார் சண்முகம் மாமா.

விளைஞ்ச வயல் வீடு வந்து சேர ஊர்கூடி உழைத்தது.
ஆமாம் ஊர் கூடிச் சூடடித்தது ஊர்கூடி வீடு வேய்ந்தது.
ஊர்கூடித் துரவு வெட்டியது. ஊர்கூடி குளம் தூர்வாரியது.
ஊர்கூடித்தான் ஊர்வாழ்ந்தது அன்று.

## நறுவிலிப்பழக் காலத்தில்

நாங்கள் இருப்போம் நறுவிலியில்.

"நறுவிலிப்பழத்தில் பசையிருக்கும் - வாயில் அது ஒட்டும்.
பழத்தின் ருஸியோ பசையை மறக்கடிக்கும்
தின்னத் தின்னத் தெவிட்டாத பழம்
தின்ற பின் கொட்டையைத் துப்ப முடியாத பழம்
கண்ணாடிப் பழம், கையிலே ஒட்டும் பழம்..."
என்றெல்லாம் ரத்தினசிங்கம் அண்ணை எடுப்பாய்ப் பாடுவார்.

நறுவிலிப்பழத்தில் அவருக்கு அப்பிடியொரு நாட்டம்.
மணியக்கா வீட்டுக்கருகில் ஒரு நறுவிலி
வன்னியன்பாலை வயற்கரையில் நாலு நறுவிலி
தேவுச் சித்தப்பாவின் தோட்டக்காணியில் இரண்டு நறுவிலி
இப்பிடி எல்லா இடத்திலும் ஏராளம் நறுவிலிகள் நின்றன.

நறுவிலி என்றால் என்ன? என்று கேட்கிறான் என்மகன்
இப்பொழுது
நறுவிலி பழுக்காத காலம் வந்ததா?




## சோளகக் காலத்தில்

காவோலை சரசரக்கும், காயும் வெயிலும் குளிரும்.
வீறாப்போடு வீசும் காற்று, மணலை வாரிக் கொட்டும்.
வாழைகளின் இலையெல்லாம் கிழித்தெறியும் காற்றுவயல்வெளியில் துள்ளித் திரியும்.
காடு, மேடு, ஒழுங்கை, தெரு, வீடு, முற்றம், வெளி என்ற பேதமில்லாமல்
ஆடு ஆடு என்று ஆடித் தலை தெறிக்கக் கூத்தாடும் காற்று
தறிகெட்டோடும்.

சோளகம் வீசத்தான்
உடப்பிலிருந்தும் நீர்கொழும்பிலிருந்தும்
சுண்டிக்குளத்துக்கும் முல்லைத்தீவுக்கும் கொக்கிளாய்க்கும்
வாடி போட்டு மீன்பிடிக்க வருவினம்.

மோகன் அண்ணா பட்டம் விடுகிறதும்
காசியர் கூத்துப் பழகிறதும்
காத்தான் கூத்துப் பாட்டு காற்றிலேறி வாறதும் சோளகத்தில்தான்.



வைகாசி விசாகத்தில்
வற்றாப்பளை அம்மன் பொங்கல் வளந்து வைக்கும்போதும்
வீசும் சோளகம்.

சோளகக் காற்றுத்தான் வெள்ளை வெளி மண்ணிலும்
கெளதாரிமுனை மணல் மேடுகளிலும் கோலம் போடுவது.
சோளகம் வீசத் தொடங்கத்தான் குளங்கள் வற்றும்
தென்னைகள் பழுத்துச் சொரியும்
மாவும் பலாவும் பிஞ்சுதிர்க்கும்.
சோளகத்தைச் சின்னப்புயல் என்பார் கனகர்.
கனகர் போனதோடு கன கதைகளும் போய்விட்டன.


### ஈச்சம்பழக் காலத்தில்

குஞ்சுவெளிக்குளக்கரை நீளத்துக்குப் பள்ளிப் பெடியள்
வெள்ளைப் புறாக்களாய் ஈச்சம் பத்தையில் மொய்த்திருப்பார்கள்.
நாங்களும்தான் அப்படி இருந்தோம் ஒரு காலம்.

ஈச்சம் முள்ளுக் குத்தும், முள்ளாய் வலிக்கும் என்றாலும்
எந்தச் சிறுவனும் முள்ளுக்கஞ்சிப் பழந்தின்னாமல் விட்டதில்லை
என்றும்.

ஈச்சம் பழம் பறிக்க பச்சையோலைப் பிளாவோடு வருவார் தம்பர்.
தம்பர்தான் எங்களுக்கும் பிளாக்கோலித்தருவார்.
பச்சையோலைப் பிழாவில் கறுப்புப்பழங்கள் கண்சிமிட்டிய காலம் அது.

"காட்டுக்குள்ள கறுப்பியும் சிவப்பியும் கண்ணடிக்கினமாம்..." எண்டு
சறோ மாமி விடுகதை சொன்னதை
யாரால்தான் மறக்க முடியும்?
"சறோ மாமிக்கு இப்ப நினைவு தப்பிப் போட்டுதாம்..."
அந்த முள்ளுத்தான் குத்துது இப்ப.






### விளாம்பழக் காலத்தில்

ஆனைக் கூட்டத்தைக் காணலாம் விளாத்திக் காடெங்கும்.
விளாத்திக்கும் ஆனைக்கும் அப்படியொரு தொடுப்பு.
அத்தனை பழங்களையும் கோதுடைக்காமல் தின்று
கோதுடைக்காமலே உலத்தி போடும் யானைகள்
இந்தக் கலையை எங்கேதான் படித்தனவோ....!
வன்னிவிளாங்குளத்துக்கும் வெள்ளாங்குளத்துக்குமிடையில்
ஆனை இலத்தியில ஆயிரம் விளாம்பழக்கோதுகளைப் பொறுக்கலாம்
என்கிறார் சிவலை நாராயணர்.
ஆனைதின்ற விளாம்பழக்கோது மருந்துக்கு நல்லதாம்

விளாத்திக் காடெங்கும் திரிவோம் விளாம்பழம் தேடி

### பொங்கல் காலத்தில் ...

ஊருக்கு வரும் தனி மவுசு.
புதுச் சட்டை வரும், காப்புக்கடை வரும், லவுட்ஸ்பீக்கர்
வரும்,
காவடி வரும், ஊர் நிறையச் சனமெல்லாம் வரும்.
சின்னமாமி கொழும்பிலிருந்து வருவா
பெரியப்பா குடும்பம் யாழ்ப்பாணத்திலிருந்து வரும்
சைக்கிளோடி, அக்கம் பக்கத்து ஊர்ப்பெடியள்
வருவார்கள்.சுமதியும் மனோகரியும் உமாவும் வந்து
கிழமைக்கணக்கில் நிற்பார்கள்.
வீடும் வளவும் ஊரும் உறவுமாய் நிறைந்திருக்கும்.
பெருநாள் என்றால் சும்மாவா, பெற்றோல்மாக்ஸ்
வெளிச்சத்தில் வீடே புதுக்கோலம் போடும்
திருநாள் அல்லவா!!





# நினைவின் காயம்!

நோர்வேயிலிருந்து
சஞ்சயன் செல்வமாணிக்கம்

நேற்று முகப்புத்தக உட்பெட்டியில் ஒரு நோர்வேஜிய மொழிச் செய்தி வந்தது.

"பழசு, எப்படி இருக்கிறாய்" என்று இருந்தது அது.

எனது உற்ற நோர்வேஜிய நண்பர். சில ஆண்டுகளாக தொடர்பு குறைந்திருக்கிறது. தொழில் நிமித்தமாக வடமேற்கு நோர்வேயில் இருந்து ஒஸ்லோவிற்கு தற்காலிகமாக குடிவந்திருக்கிறார். 3 மாதங்கள் தங்கியிருப்பாராம்.

என் குழந்தைகளுக்கு அவர் வீடு எங்கள் வீடு போன்றது. அவருடன் நான் அறிமுகமானது 1987ம் ஆண்டு நடுப்பகுதியில். அன்றில் இருந்து இன்றுவரை தொடர்கிறது எமது நட்பு. அவரது பெற்றோருடனும் அவரது சகோதர சகோதரிகளுடனும் அவரது பாரியாரின் குடும்பத்தினருடனும்கூட எனக்கு நட்பிருக்கிறது.

2004 ஆம் ஆண்டு நத்தார் தினம் அவரது வீட்டில் மிக மகிழ்ச்சியாக நடந்துபோனது. அவரது குடும்பத் தவர்களுடன் எனது இளவரசிகள் இருவரும் மிக மகிழ்ச்சியாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். இளை யவளுக்கு 4 வயது. மூத்தவளுக்கு மறுநாள் 8 வயது ஆக இருந்தது.

நத்தார் என்றால் பரிசுப்பொருட்களுக்கு கேட்கவேண்டுமா என்ன? சிறியவள் தனது பரிசுப்பொருட்களுடன் நண்பரின் மகளின் மடியில் விளையாடிக்கொண்டிருந்தாள். மூத்தவள் நண்பரின் தாயாருடன் உரையாடிக்கொண்டிருந்தாள். அம் மூதாட்டிக்கு 92 வயதிருக்கும். மூத்தவள் பிறந்திருந்த ஆரம்ப நாட்களில் எங்கள் வீட்டுக்கு இந் நாட்டு பழக்கவழக்கத்தின்படி தாய்க் கஞ்சி என்னும் கஞ்சியுடன் வந்திருந்தவர் அந்த மூதாட்டி. அது மட்டுமல்ல தனது தாயின் தாயார் தனக்கு தந்திருந்த கம்பளி ஒன்றினையும் அவர் எனது மகளுக்கு கொடுத்திருந்தார். ஏறத்தாழ 100 வருடங்கள் பழமையான கம்பளி அது. என்னை மிகவும் நெகிழ்ச்சிக்கு உள்ளாக்கிய நிகழ்வு அது. அண்மையில் நண்பரின் மூத்தமகனுக்கு திருமணம் நடைபெற்றபோது நான் அதை அவனிடம் கொடுத்து அதன் பழமையைக் கூறினேன். இறுக அணைத்து கண்கலங்கி நன்றி கூறின-ான் அவன். நண்பரும் நெகிழ்ந்து என் முதுகில் அன்பாய் தட்டினார்.

மறுநாள் தனக்கு 8 வயது என்பதையும் அவர்கள் மாலை வீட்டுக்கு வரவேண்டும் என்றும் மகள் அவர்களுக்கு கூறியபடியே தனது பரிசுப்பொருட்களுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். நண்பரின் மனைவி தான் வரும்போது ஒரு கேக் கொண்டுவருவதாகக் கூறினார்.

நத்தார் மரத்தைச் சுற்றி சுற்றி கைகோர்த்தபடியே பாட்டுக்களை பாடியபடியே நடந்து ஓய்ந்து உண்டு களைத்து மகிழ்ந்தோம். இளையவள் நண்பரின் மடி யில் தூங்கிப்போயிருந்தாள். அவர் தனது குழந்தைபோல் அவளை அணைத்திருந்தார். அவளின் கேசத்தை கோதிவிட்டார். முத்தமிட்டார்.

மூத்தவள் சோபாவில் சுருண்டிருந்தாள். நாம் புறப்பட்டோம். அவர்களது வீடும் எங்கள் வீடும் தூ ரமில்லை. 50 மீற்றர்கள்தான் இருக்கும். வீடு வந்து சேர்ந்தோம். குழந்தைகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

தொலைக்காட்சியினை பார்த்தபடியே மகளின் பிறந்தநாளுக்கான வேலைகளை செய்துகொண்டிருந்தேன்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. தொலைக்காட்சி எங்கோ ஒரு நாட்டில் பலத்த பூமியதிர்ச்சி என்று அறிவித்தது. மகளின் பிறந்தநாள் சிந்தனையில் வேறு எதுவும்மனதைக் கவரவில்லை. தூக்கம் வந்தது. மூத்தவளை அணைத்தபடியே தூங்கிப்போனேன்.

அப்பா எழும்பு இன்று எனது பிறந்தநாள் என்று எழுப்பப்படும்வரை நான் கடும் நித்திரையில் இருந்தேன். எழும்பி வீட்டுக்குப் பின்னால் அவளுக்காக ஒளித்து வைத்திருந்த சைக்கிலை எடுத்துவந்து கொடுத்தேன். மகள் பெரு மகிழ்ச்சியில் துள்ளிக்கொண்டிருந்தாள். இளையவள் என்றும்போல் கைசூப்பியபடியே தொலைக்காட்சியில் தன்னை மறந்திருந்தாள்.

நான் பிறந்தநாள் விழாவுக்கான உணவு மற்றும் வேலைகளில் என்னை மறந்திருந்தேன். திடீரென்று தொலைக்காட்சி நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. அவசரச் செய்தி ஒளிபரப்பப்பட்டது.

தென்கிழக்காசியாவில் பூமியதிர்ச்சியினால் சுனாமி என்னும் ஆழிப்பேரலை பல நாடுகளை தாக்கியிருக்கிறது. இலட்சக்கணக்கானவர்கள் இறந்திருக்கிறார்கள். அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் இந்தோனேசியா இலங்கை ஆகும் என்றது செய்தி. ஒளிப்படங்கள் வரத்தொடங்கின. அந்நாட்களில் இருந்த தமிழ் தொலைக்காட்சிகளும் பயங்கரமான படங்களை வெளியிட்டன. நான் விறைத்துப்போயிருந்தேன்.

அப்போது எங்கள் வீட்டு மணி ஒலித்தது. இளையவள் எட்டிப்பார்த்து நண்பரின் பெயரைக் கூறி வந்திருக்காறார் என்று ஓடிச்சென்று கதவைத்திறந்து அவரது கைகளுக்குள் அடைக்கலமானாள். நண்பர் உள்ளே வந்தார். அவர் கண்கள் கலங்கி இருந்தன. மகளை இறக்கிவைத்துவிட்டு என்னை அணைத்து எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.. உங்கள் இனம் கடக்கும் அவலங்களுக்கு அளவில்லை என்றார். எனக்கும் பேச்சு வரவில்லை.

அன்று பல மணிநேரங்கள் எங்களுடன் தங்கியிருந்தார். மனதுக்கு ஆறுதலாய் இருந்தது. அம்மாவுடன் தொலைபேசியில் பேசினேன். அவர் பாதுகாப்பாய் இருந்தார்.

தொலைக்காட்சிகள் மிகவும் வேதனைமிக்க காட்சிகளை ஒலிபரப்பின. இதை எழுதும் இந்த நிமிடத்திலும் ஒரு தந்தை இறந்துபோன தனது இரு குழந்தைகளை கட்டிக்கொண்டு அழுத காட்சி என்னுள் படிந்துபோயிருக்கிறது. அந்தக் கணத்தின் வேதனை இன்றும் நினைவுகூர முடிகிறது.

மகளுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால் வீடு மகிழ்ச்சியாய் இல்லை என்று புரிந்திருக்கவேண்டும். என்னைச் சுற்றி சுற்றியே நின்றாள். அப்போது அவள் அன்றைய நாளுக்கான அழகிய உடையை உடுத்தியிருந்தாள். நான் மெதுவாய் அழைத்து விடயத்தை விளக்கிக் கூறினேன். குழந்தைகள் இறந்திருந்த காட்சிகள் அவளுக்கு ஒரு புரிதலை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

அம்மா! இன்று உனது பிறந்த நாள். ஆனால் இன்று மிகவும் வேதனையானதொரு நிகழ்வும் பல மனிதர்கள் வேதனையிலும் இருக்கிறார்கள் என்றுகூறி மாலைநேரத்து விழாவினை நாம் கொண்டாடுவதை தவிர்ப்பதே நல்லது என்றேன். அவளின் முகத்தில் இருந்த மகிழ்ச்சி மறைந்துபோனது. மெதுவாய் அழைத்து அணைத்து மடியில் உட்கார்த்திக்கொண்டார் நண்பர்.

அவளுடன் நோர்வேஜிய மொழியில் உரையாடினார். அவளை உரையாடலுக்குள் புகுத்திக்கொண்டார். உலக வரைபடம் எடுத்துவரப்பட்டு நாடுகள், பூமியதிர்ச்சி, சுனாமி என்று நாம் உரையாடிக்கொண்டிருந்தார்கள். இளையவளுக்கு அவளது பெருவிரல் வாய்க்குள் இருந்தமையினால் அவளது உலகம் அவளுக்கு அழகாக இருந்தது.

அன்றுமாலை மகள் சாதாரண உடைக்கு மாறியிருந்தாள். வீட்டில் எவ்வித சோடனைகளோ, விழாவுக்கான அறிகுறிகளோ இருக்கவில்லை. வீடு மயான அமைதியில் இருந்தது. மகளும் பிறந்தநாள் சோபையை இழந்திருந்தாள். மரணமும், மனிதர்களின் ஓலங்களும் அவளையும் பாதித்திருந்திருக்கவேண்டும் என்றே எண்ணுகிறேன்.

அன்றைய நாளும் அடுத்துவந்த நாட்களும் மிகவும் கனமானவை. மழையில் நனைந்த கோழிகள் போன்று தமிழர்கள் நடமாடிக்கொண்டிருந்தார்கள். நானும்தான். அடுத்துவந்த நாட்களில் தமிழர்களுக்கு உதவுவதற்காக தமிழர்கள் ஏறத்தாழ நோர்வே குறோணர்கள் ஒரு லட்சத்தினை நாம் சேர்த்திருந்தோம். நண்பரும் இதற்கு பலமாய் உதவினார்.

சுனாமியினால் இறந்த மற்றும் காயப்பட்ட மக்களுக்காக உள்ளூர் தேவாலயத்தில் திருப்பலி நடைபெற்றது. அப்போது தமிழர்களின் சார்பில் அங்கு உரையாற்ற அழைத்திருந்தார்கள். நான் ஆற்றிய மிக மிக சொற்பமான உரைகளில் என் மனதுக்கு நெருங்கிய உரை அது.

நண்பரைப் பற்றியும், அவரது செயல்களும், மனித நேயமும் எனக்கும் எனது குழந்தைகளுக்கும் எவ்வளவு ஆறுதலைத்தந்தது என்றும், உள்ளூர் மக்கள் எமது சமுதாயத்திற்கு உதவிய விதத்தையும் அங்கு குறிப்பிட்டேன். உரையின் இறுதியில் குரல் கம்மியது. அங்கிருந்தவர்களின் கண்கள் கலங்கியிருந்ததையும் பலர் கைக்குட்டையினால் கண்களை துடைத்துக்கொண்டிருந்ததும் கலங்கிய கண்களினூடே தெரிந்தது.

உரை முடிந்தபோது ஸடைநஉெந ழக யீடயரளந என்பது என்ன என்பதை உணர்ந்தேன். தேவாலயத்தில் நான் உட்கார்ந்திருந்த வாங்கினை நோக்கி நடந்தேன். வாங்கின் அருகே நண்பர் நின்றபடியே கையைப்பற்றி அழுத்திப் பிடித்தார். அருகருகே உட்கார்ந்துகொண்டோம். மனதை ஊடுருவிப்பாயும் ஓர்கன் இசை தேவாலயத்தினுள் புகைபோன்று பரவிக்கொண்டிருந்தது.

இதன் பின் அந்த ஊரில் 4 வருடங்கள் வாழ்ந்திருந்தேன். என்வாழ்வில் புயலடித்தபோது ஒரு வாரத்தில் குறைந்தது 2 - 3 தடவைகள் பேசிக்கொள்வோம். நான் அழும்போது அமைதியாக கண்களை ஒற்றிக்கொள்ள மெதுகாகிதம் தருவார். என் சீழ்வடிந்தோடும்வரை

– முத்தையா சசிக்குமார்

> காணாமற்போகடிக்கப்பட்டோரின் நிலைக்குப் பின்னே பல சக்திகள் இருந்துள்ளன. அரசு தொடக்கம் படையினர், இயக்கங்கள், ஆயுதக்குழுக்கள் எனப் பல. ஆனால், இவற்றில் எதுவும் இந்தப் பிரச்சினையைப் பொறுப்பெடுக்கத் தயாரில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொன்றைக் குற்றம்சாட்டுகின்றன. மறுபக்கத்தில் இந்த விவகாரத்துக்கும் தமக்கும் சம்மந்தமே இல்லை என்று எல்லாத்தரப்பும் ஒரே பதிலைச் சொல்கின்றன. இதுதான் கொடுமையானது.

# காணாமற்போகடிக்கப்பட்டோரைக் கண்டறிவது எப்படி?



செல்வாநகரில் இருக்கும் பாரதி தன்னுடைய துணைவரைத் தேடிக் கொண்டிருக்கிறார். ஐந்து ஆண்டுகளாக அவரைப்பற்றிய எந்தத் தகவலும் இல்லை. 2009 மேயில் போர் முடிந்தபோது படையினரிடம் சரணடைந்த பல்லாயிரக்கணக்கான போராளிகளில் பாரதியின் கணவரும் ஒருவர். மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்தக் கணவர், தன்னுடைய குடும்பத்தின் முன்னிலையில், அங்கே கூடியிருந்த லட்சக்கணக்கான மக்களின் முன், படையினரின் அறிவிப்பை ஏற்றுச் சரணடைந்தார். அன்று அந்தக் காலையில் தன்னுடைய கணவரைக் கண்டதற்குப் பிற்பாடு பாரதி மீண்டும் அவரைக் காணவில்லை. அவரைப் பற்றிய எந்தத் தகவலையும் அறியவில்லை. இப்போது அவரைத் தேடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான உறவுகளில் ஒருவராகி விட்டார். "அப்பா எங்கே? அவர் எப்போது வருவார்?" என்று கேட்கின்ற பிள்ளைகளுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாத தாயாகி விட்டார். கணவரின் துணையின்றி, அவருடைய ஆதரவின்றித் தனியாகக் குடும்பத்தை வழிநடத்த வேண்டிய தாயாகிவிட்டார்.

இது ஒரு பாரதியின் கதை. ஆனால், இதுபோலப் பலருடைய பல கதைகள் உண்டு. அத்தனையும் துயரமும் அவலமும் நிறைந்தவை.

ஒவ்வொரு ஊர்களிலும் காணாமற்போகடிக்கப்பட்டவர்கள் பற்றிய எந்தவிதமான தகவல்களும் இல்லாமல் அவர்களுடைய உறவினர்கள் தவித்துக்கொண்டிருக் கிறார்கள். இந்தத் தவிப்பு ஆண்டுக் கணக்காக நீண்டுகொண்டிருக்கிறது. தங்களுடைய உறவுகளைப் பற்றி எத்தனையோ இடங்களில் எல்லாம் முறையிட்டும் எங்கெல்லாமோ

**காணாமல் போகடிக்கப்பட்டோரைக் கண்டு பிடிப்பது என்ற பேரில் இந்தத் தவிக்கும் உறவுகள், பல போராட்டங்களை இதுவரை நடத்தியிருக்கின்றன. இந்தப் போராட்டங்களில் பல பல்வேறு தரப்பினர்களால் நடத்தப்பட்டவை. இதில் மனோகணேசன், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி போன்றவை முக்கியமானவை. இந்தச் சக்திகள் போராட்டத்துக்கு அழைக்கும்போதெல்லாம் நம்பிக்கையோடு உறவினர்கள் கலந்து கொண்டிருக் கின்றனர். இன்னும் அப்படிக் கலந்து கொண்டு வருகின்றனர். ஆனால், இந்தப் போராட்டங்களுக்கு இதுவரையிலும் ஒரு பயனும் கிட்டவில்லை. காணாமற்போகடிக்கப்பட்ட ஒருவர் கூடத்திரும்பியதாகவோ கண்டு பிடிக்கப்பட்டதாகவோ இல்லை.**

தேடியும் எந்தப் பயனும் இல்லாத நிலையே தொடருகிறது. ஆனால் பதில் கிடைக்கவில்லை என்பதற்காக சொந்தங்களைத் தேடாமல் இருந்து விட முடியுமா? பெற்ற பிள்ளையைப் பற்றிய தகவல் இல்லாமல் எந்தத் தாயினால் அமைதியாக இருந்து விட முடியும்? துணையைப் பற்றிய சேதியே இல்லாமல் எத்தனை காலம்தான் தனித்திருக்க ஒரு பெண்ணினால் இயலும்? இந்தத் தவிப்பு சாதாரணமானதல்ல.

இதனால், இவர்கள் தங்களுடைய உறவுகளைத் தேடித் திரியாத இடங்கள் இல்லை. பிள்ளையைப் பற்றியும் புருசனைப் பற்றியும் சகோதரர்களைப் பற்றியும் அறிவதற்காகப் பார்க்காத ஆட்கள் இல்லை. வேண்டாத கோயில்களும் தெய்வங்களும் இல்லை. முறையிடாத தரப்புகளில்லை. விடாத கோரிக்கைகள் இல்லை. ஆனாலும், இவர்களுக்கு எந்தப் பதிலும் யாரிடமிருந்தும் கிடைக்கவில்லை. இராணுவ முகாம்கள், மனித உரிமை இல்லங்கள்,அரசியற் கட்சிகளின் அலுவலகங்கள், வெளிநாட்டுத்தூதுவரகங்கள், மாவட்ட செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள் என எல்லா இடங்களிலும் தங்கள் உறவுகளைத் தேடித் தவிப்போரின் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், யாருடைய மனதிலும் ஈரம் கசியவில்லை. யாரும் ஒரு நற்செய்தியை அளிக்கவில்லை. அப்படியொரு நற்செய்தியை வழங்கும் நிலையிலும் யாரும் இல்லை. இதுதான் உண்மையானது.

காணாமற்போகடிக்கப்பட்டோரின் நிலைக்குப் பின்னே பல சக்திகள் இருந்துள்ளன. அரசு தொடக்கம் படையினர், இயக்கங்கள், ஆயுதக்குழுக்கள் எனப் பல. ஆனால், இவற்றில் எதுவும் இந்தப் பிரச்சினையைப் பொறுப்பெடுக்கத் தயாரில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொன்றைக் குற்றம்சாட்டுகின்றன. மறுபக்கத்தில் இந்த விவகாரத்துக்கும் தமக்கும் சம்மந்தமே இல்லை என்று எல்லாத்தரப்பும் ஒரே பதிலைச் சொல்கின்றன. இதுதான் கொடுமையானது.

இந்த நிலையில் சலிப்பின்றிக் களைப்பின்றி ஒவ்வொரு இடமாகத் தங்கள் உறவுகளைத் தேடித் தவிக்கும் சனங்களுக்கு என்ன தீர்வு?






என்ன பதில்? இதை யார் வழங்குவது? இந்த விவகாரத்துக்கான முடிவு என்ன? அது எப்போது கிட்டும்?

காணாமல் போகடிக்கப்பட்டோரைக் கண்டு பிடிப்பது என்ற பேரில் இந்தத் தவிக்கும் உறவுகள், பல போராட்டங்களை இதுவரை நடத்தியிருக்கின்றன. இந்தப் போராட்டங்களில் பல பல்வேறு தரப்பினர்களால் நடத்தப்பட்டவை. இதில் மனோகணேசன், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி போன்றவை முக்கியமானவை. இந்தச் சக்திகள் போராட்டத்துக்கு அழைக்கும் போதெல்லாம் நம்பிக்கையோடு உறவினர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் அப்படிக் கலந்து கொண்டு வருகின்றனர். ஆனால், இந்தப் போராட்டங்களுக்கு இதுவரையிலும் ஒரு பயனும் கிட்டவில்லை. காணாமற்போகடிக்கப்பட்ட ஒருவர் கூடத்திரும்பியதாகவோ கண்டு பிடிக்கப்பட்டதாகவோ இல்லை.

இதற்கிடையில் இந்த உறவு-கள் பிரித்தானியப் பிரதமர் டேவிற் கமரூன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை உட்பட உலகத் தலைவர்கள் முன்னிலையிலும் தங்கள் வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர். கண்ணீரை

விட்டுக் கதறிக் கெஞ்சியிருக்கின்றனர். மட்டுமல்ல, யாரெல்லாம் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வருகிறார்களோ அவர்களுடைய காலடியில் எல்லாம் விழுந்து கெஞ்சியழுதிருக்கிறார்கள். என்றாலும் எவரும் எந்த நல்ல சேதியையும் சொல்லவில்லை.

கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் மட்டுமல்ல, இப்பொழுது புதிதாக ஆட்சியிலிருக்கும் ரணில், மைத்திரி தரப்புக்கூட இந்த விவகாரத்துக்கு எந்தப் பதிலையும் சொல்லவில்லை.

காணாமற்போகடிக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும் என்று கடந்த அரசாங்கம் அறிவித்திருந்தது. அதன்படி காணா-மற் போகடிக்கப்பட்டோரைக் கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டது. இதில் சம்மந்தப்பட்டவர்களின் உறவினர்கள் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர். பலர் தாங்களே நேரடியான சாட்சியங்கள் என்று ரத்த சாட்சியமளித்திருந்தனர். இதில் அவர்கள் நேரில் அரசாங்கத்தையும் படையினரையும் குற்றம்சாட்டியிருந்தனர். சிலர் இயக்கங்களைக் குற்றம் சாட்டினர். இந்த முறைப்பாட்டுக்களும் சாட்சியமளிக்கும் நிகழ்வுகளும் மிகச்சோகமயமானவை. அதுபோலதான் காணாமற்போகடிக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் போராட்டங்களும் மிக உணர்ச்சிகரமானவை. என்றாலும் இதிலும் எந்த நம்பிக்கையும் ஏற்படவில்லை.

இடையில் ஒரு அறிவித்தலை அரசாங்கம் விடுத்திருந்தது. "காணாமற் போகடிக்கப்பட்டோரைக் கண்டறிய முடியவில்லை. ஆகவே, அவர்களுக்கான மரணச்சான்றிதழ் வழங்கப்படும்" என்று. இந்த அறிவிப்பு மிகப் பயங்கரமானது. என்பதால் இந்த அறிவிப்பையிட்டு பல முனைகளிலும் எதிர்ப்புகள் கிளம்பின. கிளம்பிய எதிர்ப்புகளை அடுத்து அரசாங்கம் இந்தப் பிரச்சினையை அப்படியே தணிந்து போக விட்டு விட்டது. ஆனாலும் காணாமற்போகடிக்கப்பட்டோரைப் பற்றிய இடைக்கால அறிக்கை வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் பிற்போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அப்படியென்றால் இதற்கு என்னதான் முடிவு? காணாமற்போகடிக்கப்பட்ட உறவுகளை எப்படித் தேடிக்கண்டு பிடிப்பது?


நடந்த போராட்டங்களுக்கும் எழுதிய கடிதங்களுக்கும் சிந்தப்பட்ட கண்ணீருக்கும் இதுவரையிலும் எந்தப் பெறுமதியும் இல்லாமல் போனதைப்போல, இனி வரும் காலத்திலும் நிகழுமா?

அப்படியாயின் இறுதி முடிவு என்ன? இந்தப் பெரிய அவலத்துக்கும் துயரத்துக்கும் அநீதிக்கும் நியாம் என்ன? நிவாரணம் என்ன?

இதைப்பற்றி எவரும் சிந்திக்கத் தயாராக இல்லை. எவர்தான் ஆட்சியில் இருந்தாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும் என்று உண்மையாக, விசுவாசமாக, நேர்மையாக உழைக்கவில்லை. இந்தப் போராட்டங்களை முன்னெடுத்தோர் எல்லாம் தங்கள் தங்கள் லாபங்களுக்காக அவலப்படும் உறவுகளைப் பயன்படுத்தியிருக்கிறார்களே தவிர, இந்த உறவுகளுக்காகவோ, இந்தப் பிரச்சினையின் தீர்வுக்காகவோ பாடுபடவில்லை. இப்படிச் சொல்லும்போது இதையிட்டுச் சிலருக்கு கோபமோ வருத்தமோ ஏற்படலாம். இதில் யாரையும் குறை கூறுவதோ குற்றம்சாட்டுவதோ நமது நோக்கமில்லை. அல்லது, ஒவ்வொருவருடைய செயற்பாடுகளையும் நிராகரிப்பதோ அவமதிப்பதோ அல்ல. பதிலாக இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு நீதியான சரியான தீர்வைப் பெற வேண்டும். இந்தத் தவிக்கும் உறவுகளை மேலும் மேலும் அலைக்கக் கூடாது. தொடர்ந்தும் அவர்களை அவலத்திற்குள்ளும் துயரத்திற்குள்ளும் வைத்திருப்பது தவறானது. போலி நம்பிக்கைகளைத் தொடர்ந்தும் உண்டாக்கிக் கொண்டிருக்கக் கூடாது என்ற நோக்கத்தின்பாற்பட்டே இதைச் சொல்கிறோம்.

ஏனென்றால், காணாமற் போகடிக்கப்பட்டோரின் உறவுகள் உளவியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். பொருளாதார ரீதியிலும் இவர்கள் பல சிரமங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.







இப்படியான நிலையில் இருப்போரை மேலும் மேலும் அலைக்கழிப்பதென்பது, மிகத் தவறானது. இவர்களுக்கானஉதவிகளை வழங்குகிறோம்.

போராட்டங்களுக்கு அழைக்கும்போது உணவும் வழிச்செலவும் கொடுக்கிறோம். போராட்டங்களை இடைவிடாமல் நடத்தினால்தானே உறவுகளைத் தேடிக்கண்டு பிடிக்க முடியும்? அத்துடன் இந்தப் பிரச்சினையை உலக அரங்கிற்குக் கொண்டு போகவும் முடியும் என்றெல்லாம் சொல்லக் கூடும்.

இலங்கையில் காணாமற்போகடிக் கப்பட்டோரின் பிரச்சினை இன்று உலகறிந்த விடயம். இதை இன்னும் உலகம் அறிய வேண்டும் என்று கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தித் தெரிவிக்க வேண்டியதில்லை. அப்படி உலகம் அறிய வேண்டுமானால், அல்லது இந்தப் பிரச்சினைக்கு உண்மையாகவே ஒரு தீர்வும் முடிவும் கிட்ட வேண்டுமானால், இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளும் தலைவர்களும் மதகுருக்களும் பொது அமைப்புகளும் உண்மையாகவே போராட வேண்டும். அந்தப் போராட்டங்கள் சம்பிரதாயமானவையாக இல்லாமல், ஆத்மார்த்தமாக, வெற்றியைத் தரக்கூடியவையாக அமைய வேண்டும். இந்தப் போராட்டங்கள் இடைவிடாத தொடர் போராட்டங்களாக நடத்தப்பட வேண்டும். இதற்காக ஒவ்வொரு தரப்பும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்படி அர்ப்பணித்துப் போராடும்போது அது மக்கள் மயப்பட்டு பெரிய வெற்றியை அளிக்கும் போராட்டங்களாக மாறும்.

ஆனால், அந்தப் போராட்டத்தின் போது யாரும் கைது செய்யப்படலாம். பலர் சிறை செல்ல நேரிடலாம். ஏன் சிலர் உயிரைக் கூடத் துறக்க நேரிடலாம். அதையெல்லாம் எதிர்கொண்டுதான் இந்தப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதுதான் உண்மையாகவே காணாமற்போகடிக்கப்பட்டோர் தொடர்பாக உண்மையான தீர்வையும் பதிலையும் கொண்டு வரும். அப்படியான போராட்டங்களுக்கே உலகில் மதிப்பு ஏற்படும். அதைக்கண்டே அரசாங் கமும் தலைவணங்கும்.

**இறுதியாக சில வார்த்தைகள்**

காணாமற்போகடிக்கப்பட்டோரைக் கண்டு பிடிக்க வேண்டுமே தவிர, அவர்களைச் சொல்லிச் சொல்லியே யாரும் காலத்தை ஓட்டிவிடக் கூடாது.

காணாமற்போகடிக்கப்பட்டவர்களின் உறவுகளின் உளநிலையையும் அவர்களுடைய குடும்ப நிலையையும் கவனத்திற்கொண்டு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம். இதை நீடித்து அவர்களையும் அந்தக் குடும்பங்களையும் நிர்க்கதிக்குள்ளாக்கக் கூடாது.

காணாமற்போகடிக்கப்பட்டோர் இரகசிய முகாம்களில் உள்ளனர். மருத்துவமனைகளில் இருந்தனர். சிறைச்சாலைகளில் உள்ளனர் என்ற பொய்யான தகவல்களை அரசியல்வாதிகள், படைப்புலனாய்வாளர்கள், ஊர்களில் இருப்போர், சோதிடர்கள், கோயில்களை வைத்திருப்போர்

இன்னும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். இதைத் தயவு செய்து நிறுத்துவது நல்லது.

ஏனென்றால், இது துயருறும் மனிதர்களின் வாழ்வும் விதியுமாகும். அதனுடன் விளையாடக் கூடாது. ■

**எவர்தான் ஆட்சியில் இருந்தாலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும் என்று உண்மையாக, விசுவாசமாக, நேர்மையாக உழைக்கவில்லை. இந்தப் போராட்டங்களை முன்னெடுத்தோர் எல்லாம் தங்கள் தங்கள் லாபங்களுக்காக அவலப்படும் உறவுகளைப் பயன்படுத்தியிருக்கிறார்களே தவிர, இந்த உறவுகளுக்காகவோ, இந்தப் பிரச்சினையின் தீர்வுக்காகவோ பாடுபடவில்லை. இப்படிச் சொல்லும்போது இதையிட்டுச் சிலருக்கு கோபமோ வருத்தமோ ஏற்படலாம். இதில்யாரையும் குறைகூறுவதோ குற்றம்சாட்டுவதோ நமது நோக்கமில்லை.**

**அல்லது, ஒவ்வொருவருடைய செயற்பாடுகளையும் நிராகரிப்பதோ அவமதிப்பதோ அல்ல. பதிலாக இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு நீதியான சரியான தீர்வைப் பெற வேண்டும். இந்தத் தவிக்கும் உறவுகளை மேலும் மேலும் அலைக்கக் கூடாது.**




- சிவபெருமான்

# வடக்கின் ஆசிரியர் வளம் எப்போது சீர் செய்யப்படும்?



தமிழ்த் தேசிய அரசியல் என் பது, மக்கள் நலப்பணிகள், சாமானியர்களின் உரிமைகள், தனித்துவங்கள், தன்மானங்கள் பாதுகாக்கப்படுவது என்பது ஒரு பிரதேசத்தை மட்டும் மையமாகக் கொண்டு சுழல்வது தான் என்பதை அவர்கள் திரும்பத்திரும்ப நிரூபித்துக் கொண்டு வருகின்றார்கள்.

கடைசியாக வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை நிராகரித்து ஆளுநரின் துணையை நாடி தாம் முன்பிருந்த கதிரைகளுக்கே சொந்தம் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு விட்டார்கள். இது மட்டுமல்ல,மாகாண சபையின் சகல அதிகாரிகளுமே யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியை விட்டு வெளியே சென்று கடமையாற்றத் தயாராகவில்லை. தாம் மட்டுமன்றி தமது மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், நெருங்கிய நண்பர்கள் என்று பலரையும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே அல்ல, அவரவரது ஊரைவிட்டு அடுத்த ஊருக்குக்கூட கடமையின் நிமித்தம் அனுப்ப விரும்பவில்லை.

இந்த விசித்திரத்தில் குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட ஆசிரியர்களை வெளி மாவட்ட சேவை செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்து அனுப்புவது எந்தளவுக்கு நியாயமானது? நடைமுறைச்சாத்தியமானது? இயல்பாகவே இத்தகைய இட மாற்றங்களை விரும்பாதிருக்கும் பெரும்பான்மை மனநிலையில்அதிகாரிகளோ தமது இடமாற்ற விடயத்தில் இவ்வாறு நடந்து கொண்டால் நமது மாணவர்களின் கல்வி நிலை என்னவாகும்?

ஆசிரியர் வளம் நிறைந்திருக்கும் சமூகத்தின் பொதுப்புத்தி, யார் மாண்டாலும் பரவாயில்லை தாம் தமது ஊர்களிலேயே இருந்தால் போதும் என்று இருக்கின்றது. இதன் முதலாவது விளைவாக வன்னியில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். அவர்களது அளவுக்கதிகமான சுமை, இரண்டாவது விளைவாக மாணவர்களின் கல்வியில் கத்தியை வீசுகின்றது.


நீண்ட காலமாக புவியியல், சமூக, கலாசார, அரசியல் காரணிகள் சரியான முறையில் பொருத்தமுற அமைந்த பிராந்தியமாக இருந்த படியால் கல்வியில் மிக உயர்ந்த இடத்தை அடைந்த பிரதேசவாசிகள், ஏனைய பிரதேசங்களை எவ்வாறு நோக்குகின்றனர்? அந்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைமைகள் எவ்வாறு நோக்குகின்றனர்?

தமிழ்த் தேசியம் என்கின்ற உணர்ச்சிபூர்வமான சாப்பாட்டை தாழிதம் செய்யும் விடயத்துக்கு மாத்திரமான பங்காளிகளாக, அதற்காக மட்டும் தமது உடல், பொருள், ஆவி என்பவற்றை ஈந்தளிக்க வேண்டிய கடப்பாடுள்ளவர்களாக மட்டுமா கையாள முற்படுகின்றார்கள்? அவர்களுக்கு வேண்டிய வளங்களைப் பகிர்ந்தளித்து, அவர்களையும் தமக்குச் சமமானவர்களாக உயர்த்த வேண்டும் என்ற சிந்தனை உண்மையாகவே அவர்களிடம் இருக்கின்றதா?

தமிழ்த் தேசியத்தின் பெயரால் உயிரைக் கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட சமூகத்தில் சென்று பணியாற்ற வேண்டும் என்ற மனநிலை, ஓரிருவரைத் தவிர ஏனையோரிடம் இல்லை. நிர்வாக ரீதியாகவும் அப்படி கடமையைச் செய்யுமாறு வலியுறுத்த வல்லவர்கள் அதிகாரிகளாகவே அமைச்சர்களாகவோ இல்லை. எல்லோரும் தம் சுயலாபங்களை, அரசியல் இலாபங்களை கருதியவர்களாக ஆண்டு தோறும் திட்டங்களை முன்வைத்து பின் மூடி வைக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தத்தில் முதல் நியமனம் பெற்று வந்த ஆசிரியர்கள்தான் பாவம். மூத்தவர்கள் தப்பிப் பிழைத்துவிட அவர்களின் பாவங்களையும் சேர்த்து இவர்கள் சுமக்கின்றார்கள். இவர்களின் முதல் களமாக அமையும் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் வந்து மாட்டியிருக்கும் மாணவர்களின் நிலை முன்னணிக் களமுனையில் நிற்க நேருபவர்களுக்கு சமமானது. தப்பிப் பிழைத்தால் மீட்சி இல்லையேல் தெருவளப்புத்தான்.

# புதிய வன்னி வாசகர் கடிதம்



**அன்புள்ள ஆசிரியருக்கு,**

வன்னிப் பிரதேசத்தின் பிரச்சினைகளைச் சொல்வதற்கும் வன்னியின் சிறப்பை எடுத்துக் காட்டுவதற்குமாக புதிய வன்னி ஒரு அருமையான களத்தைத் திறந்துள்ளது என எண்ணுகிறேன். இது வன்னிக்கான சிறப்பாகும். இதுவரையிலும் இப்படியான ஒரு இதழ் வன்னியை மையமாகக் கொண்டு வெளிவரவில்லை. வன்னியில் பல படைப்பாளிகளும், பத்திரிகையாளர்களும் இருந்தபோதும் ஏனோ ஒரு இதழ் வன்னிக்கு என்று வரவில்லை. இப்பொழுதுதான் அது சாத்தியமாகியிருக்கிறது. இதனால் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக உள்ளது.

இப்படியான இதழ்கள் வன்னியின் மீதான வெளிச்சத்தைப் பாய்ச்சும் என்பதோடு வன்னிப் பிரதேசத்தின் குரலாகவும் இருக்கும். வன்னி வளங்களும் சிறப்பும் உள்ள பிரதேசம் என்றாலும் அது பொதுக்கவனத்தைப் பெறுவதில் பின்தங்கியே இருந்தது. இத்தகைய பிரதேச இதழ்கள் பிரதேசத்தன்மையுடன் தேசியத்தன்மையையும் பெற்றிருப்பது சிறப்பாகும். ஒட்டிசுட்டான், முத்தையன் கட்டுப் பற்றிய பல விடயங்களைப் படித்தபோது எனக்கே என்னுடைய ஊரைப் பற்றிய பல விடயங்கள் தெரியவந்தன. இதைப்போல ஒவ்வொரு ஊர்களைப் பற்றியும் பல கதைகளும் வரலாறுகளும் புதிய வன்னியின் ஊடாகத் தெரியவரும்போது அதனால் வன்னிக்கே சிறப்பு ஏற்படுகிறது. ஆகவே, புதிய வன்னிக்கு எனது முழுமையான ஆதரவு எப்பொழுதும் உண்டு. அதைப்போல பிறரும் ஆதரிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**ம. கிருஷ்ணகுமார், ஒட்டிசுட்டான்**

**ஆசிரியர், புதிய வன்னி**

வன்னிப்பகுதியிலுள்ள ஆசிரியர் பிரச்சினையைப் பற்றி புதிய வன்னியில் எழுதியிருந்தது. இப்படியான கவனத்தை நிச்சயமாக எடுக்க வேண்டும். இது நல்லதே. ஆனால், வன்னியில் எப்போதும் ஒரு தீராத நோயைப் போல மாறாத பிரச்சினையாக இருக்கும் ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு புதிய வன்னியின் ஆலோசனைகள் என்ன?

**ந. சியாமளா, நெடுங்கேணி**


**ஆசிரியர் கவனத்திற்கு,**

பேருந்துப் பயணம் பற்றியும் இ.போ. சபைக்கும் தனியாருக்கும் இடையில் நடக்கின்ற போட்டிகளால் பாதிக்கப்படும் மக்களைப் பற்றியும் புதிய வன்னியில் படித்தேன். இதையும் விட இன்னும் பல கதைகள் இந்த இரண்டு பேருந்துகளிலும் உண்டு. அதையும் எழுதி அறிய வைக்க வேண்டும்.

**கதிர் மகேந்திரன், அக்கராயன்**

புதிய வன்னியைப் பற்றிய உங்களுடைய விமர்சனங்களையும் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எழுதுங்கள். இது உங்களுடைய இதழ். புதிய வன்னிக்காக நீங்களும் எழுதலாம்.

வன்னியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கான நிரந்தரத் தீர்வு குறித்த உரையாடல் இந்த இதழில் இடம்பெறும் என்று கடந்த இதழில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த உரையாடல் இந்த இதழில் இடம்பெறவில்லை. காரணம், வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றங்களைத் தற்போது (ஏப்ரல் மாதத்தில்) செய்ய வேண்டியிருப்பதாலும் புதிய ஆசிரிய நியமனங்களைச் செய்து அவர்களை வன்னிக்கும் பகிர்ந்தளித்துக் கொண்டிருப்பதாலும் இந்த உரையாடலை அடுத்த இதழில் செய்யலாம் என்று கல்வித்துறை சார்ந்தோரும் வடக்கு மாகாண சபையினரும் தெரிவித்தனர். ஆகவே ஆசிரியர் பற்றாக்குறை பற்றிய உரையாடல் அடுத்த இதழில் இடம்பெறும்.



சி. கதிர்ப்பிள்ளை

# சம்பத்த நுவர

## இதைப்பற்றி யாருக்காவது தெரியுமா?

"சம்பத்த நுவர" வவுனியாவுக்கு வடக்கே உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு புதிய சிங்களக் குடியேற்றப் பிரதேசம் இது.

இந்தப் பிரதேசத்துக்கு இலகுவாக யாரும் போய் வர முடியாது.

படையினரின் பாதுகாப்பிலும் கண்காணிப்பிலும் இருக்கிறது.

சம்பத்த நுவரவுக்குப் போகும் போதும்படையினரிடம் பதிவுகளைச் செய்ய வேணும். அங்கிருந்து திரும்பி வரும்போதும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். அங்குள்ளவர்களும் பதிவுகளைச் செய்துதான் அங்கே இருக்க வேண்டும்.

ஒதியமலைக்கு அப்பால் தமிழர்கள் போவதில்லை.

டொலர் பாம், கென்பாம், சிலோன்தியேட்டர், அரிய குண்டான், நாவலர் பண்ணை போன்ற இடங்களுக்கும் தமிழர்கள் போவது குறைவு. எல்லாமே சிங்கள மக்களால் கிராமங்களாகியுள்ளன.

இந்தப் புதிய குடியேற்றத்திட்டத்துக்கு வவுனியா வடக்கு, வவுனியா போன்ற பிரதேச செயலகங்களுடன் எந்தத் தொடர்பும் கிடையாது.

ஆனால் அங்கே மின்சாரம், வீட்டுத்திட்டம், மருத்துவனை, சந்தை, கூட்டுறவுக்கடை, விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற அனைத்தும் நடக்கின்றன.

ஏறக்குறைய 3000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் இங்கே குடியமர்ந்துள்ளன.

இதெல்லாம் எங்கே நடக்கின்றன?

வவுனியாவுக்கு வடக்கே, நெடுங்கேணிக்குத் தெற்கே, முல்லைத்தீவிற்கு மேற்கே..... வடக்கில் வடமாகாணத்தில்தான்.

யாரும் எங்கேயும் வரலாம் போகலாம். எவரும் எங்கும் குடியிருக்கலாம் என்பது அவரவர் உரிமை. சட்டத்தில் கூட இதற்கு இடமுண்டு என்று சொல்லலாம்.

ஆனால், இப்படி ரகசியமாகச் செய்யும் காரியங்கள்தான் எப்பொழுதும் அகத்திலும் புறத்திலும் பெரும் கலவரங்களை மூட்டுகின்றன.



- சோகிதா தேவராஜா

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முறிகண்டியில் நடப்பது என்ன?

ஒரு காலம் மிகச் சிறப்பாக இருந்த முறிகண்டிப் பிள்ளையார் கோயில் இப்பொழுது சோபையிழந்திருக்கிறது. முன்னர் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் பயணிப்போர் அனைவரும் முறிகண்டிப்பிள்ளையார் கோயிலில் தரித்து, வழிபட்டுச் செல்வார்கள். இப்பொழுது இந்த நிலைமை மாறி, பயணிப்போர் இங்கே தரிப்பதும் வழிபடுவதும் குறைவடைந்துள்ளது. போருக்குப் பிந்திய சூழலில் கோயிலின் நிர்வாகத்தை இந்து கலாசாரத் திணைக்களம் பொறுப்பெடுத்து நடக்கிறது. ஆனால், கோயில் வளாகம் அபிவிருத்தி செய்யப்படுவதாக இல்லை. இதனால் முன்னரைப்போல பயணிகள் இங்கே வண்டிகளை நிறுத்தித் தங்கி, வழிபட்டு, இளைப்பாறிச் செல்லும் நிலைமை குறைந்து போயிருக்கிறது. ஆனாலும் கோயிலுக்கு வரும் வருமானத்தில் குறைவில்லை. இந்த வருமானம் எங்கே போகிறது?இதனுடைய கணக்குகள் என்ன? இந்த வருமானத்தில் கோயிலின் அபிவிருத்தியோ, வளாகச் சீரமைப்போ, கோயிலை மையமாக வைத்த சமூக சேவைகளோ நடப்பதாகவும் தெரியவில்லை.

முறிகண்டியை அண்மித்த பகுதிக் கிராமங்கள் வறிய மக்களை அதிகமாகக் கொண்டவை. இங்குள்ள மக்களின் முன்னேற்றத்துக்காகவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகவும்கோயிலின் வருமானத்தில் ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும் என்கின்றன பிரதேசத்தின் பொது அமைப்புகள். இதற்கான ஏற்பாடுகளை இந்து கலாசாரத் திணைக்களம் செய்ய வேண்டும். மக்களின் செல்வாக்கைப் பெற்ற இந்த ஆலயத்தின் மூலமாகப் பல நற்பணிகளைச் செய்தால் அதன் மூலமாக முறிகண்டிப் பிரதேசத்திலும் இங்குள்ள மக்களிடமும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். முன்னேற்றத்தை உருவாக்கலாம்.

ஆகவே இதைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறுப்பு பிரதேசத்தின் பொது அமைப்புகளுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் உண்டு.




## முறிகண்டியில் சிவன் கோவில்

முறிகண்டிப் பிள்ளையாரைப் பற்றி அறிந்திருப்பீர்கள். ஆனால், அங்கே உள்ள சிவன் கோயிலைப்பற்றி யாரும் அறிந்திருக்க மாட்டீர்கள். இது தொன்மையான கோயில். இந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட லிங்கத்தை மரங்களின் கீழே வைத்து வழிபட்டு வந்தவர்கள், இப்பொழுது புதிய ஆலயத்தை நிர்மாணித்து வருகிறார்கள்.

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்கே, அக்கராயன் குளத்துக்குச் செல்லும் வீதியில் 100 மீற்றர் தொலைவில், முறிகண்டி மகா வித்தியாலயத்துக்கு எதிர்ப்பக்கத்தில் அமைந்துள்ளது இந்தச் சிவன்கோயில். இப்பொழுது முதற்கட்டப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் கோயிலின் நிர்மாணத்துக்காக இந்தியாவிலிருந்து சிற்பக்கலைஞர்கள் வந்திருக்கிறார்கள். வன்னியின் மிக உயர்ந்த மணிக்கூட்டுக் கோபுரம் இந்த ஆலயத்தில்தான் உண்டு என்று சொல்கிறார் இந்தக் கோயிலின் நிர்மாணப் பணிகளில் முக்கியமானவராக இருக்கும் திரு. காமராஜ்.

இந்த மணியோசை எட்டுத்திக்கும் பரவட்டும்.





## வழிமாற்றப்பட்ட ஆறு ஊர்களுக்குள் நுழைந்தது

முறிகண்டியினூடாகப் பாயும் ஆற்றை மறித்துப் படையினர் ஒரு அணைக்கட்டை அமைத்து தண்ணீரைத் தேக்கியிருக்கின்றனர். இது முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்கே புகையிரத வீதிக்கும் அப்பால் நடந்திருக்கிறது. இப்படித் தேக்கிய நீரைப் பயன்படுத்தி அங்கே காட்டுப்பகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சுற்றிவர படைத்தளம். இந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் சென்று வருவதற்கான அனு-மதியும் வாய்ப்புகளும் இல்லை. காட்டில் பழுக்கின்ற பாலைப்பழங்களைப் பறிப்பதற்கும் படையினரைத் தவிர, வேறு யாரும் இல்லை.

படையினர் இப்படி ஆற்றை மறித்திருப்பதால், மழைக் காலங்களில் பாயும் தண்ணீர் வழிமாறி ஊர்களுக்குள் வருகின்றன என பொன்னகர், முறிகண்டி வாழ் மக்கள் சொல்கிறார்கள்.

## முறிகண்டியில் விவசாயச் செய்கை இல்லை

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த விவசாயச் செய்கை இப்பொழுது நடக்கவில்லை.

ஏன் தெரியுமா?

இங்கே இருந்த குளத்தைப் படையினர் உடைத்து விட்டனர். இதனால் தண்ணீர் தேங்குவதில்லை. தண்ணீர் இல்லாமல் பயிர் செய்ய முடியாது. பயிர் செய்யாத நிலங்கள் தரிசாகி விட்டன. தரிசு நிலத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள் சனங்கள். வயல்களும் புற்காடாக மாறிப்போயுள்ளன.

உடைக்கப்பட்ட குளத்தின் நடுவே பாதை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதை காட்டின் உள்ளே இருக்கும் படைத்தளத்துக்குப் போகிறது. இந்தப் பாதையில் வேறு யாரும் போக முடியாது.



## முறிகண்டி வர்த்தகர்களின் கவலை

முறிகண்டியில் கோயிலைச் சுற்றியிருக்கும் வளாகத்தில் உள்ள வர்த்தகர்களுக்கு வியாபாரம் மகிழ்ச்சி தருவதாக இல்லை. முன்னரைப்போல பேருந்துகள் நிற்பதும் இல்லை. பயணிகள் தரித்துத் தங்கிச் செல்வதும் இல்லை. இதனால் அவர்கள் உற்சாகமிழந்து போயிருக்கிறார்கள். வளாகமும் முன்னரைப்போலக் கலகலப்பாக இல்லை.

ஆனால், கோயில் வளாகத்துக்கு அப்பால், பாடசாலைக்கு அண்மையாக Testa Hotel என்ற ஒரு விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த விடுதியில்தான் இப்பொழுது அநேகமான வண்டிகள் நிறுத்தப்படுகின்றன. உயர்தர உணவுக்கும் உயர்தர உபசரிப்புக்குமாக பலரும் இந்த விடுதியையே நாடுகின்றனர். ஆண்டாண்டா நடத்தி வந்த தங்கள் கடைகளையும் வியாபாரத்தையும் யாரும் கணக்கில் எடுக்கவில்லை. தங்கள் கடைகளை நவீனப்படுத்துவதற்கான அனுமதியையும் நிர்வாகத்தினரும் பிரதேச சபையினரும் தரமறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் வர்த்தகர்கள்.



# கடலும் கரையும்

– தமயந்தி

இரையும் கடலின் அலையும் கரையும்
கரையில் ஈரக் கரும்பாறைகளும்
பாறை காக்கும் ஒற்றைக் கொக்கும்
கொக்கின் பிடியில் தப்பும் மீனும்
மீன்கள் நிரப்பி அசையும் படகும்
படகில் கேட்கும் அம்பாக் குரலும்
குரலும் வானை உரசும் கூத்தும்
கூத்து முடிந்த கொட்டகைத் தரையும்

கொட்டகைத் தரையில் உதிர்ந்த மணியும்
மணிகள் தேடும் சிறுவர் படையும்
படையாய்த் திரளும் முள்ளிக் கொடியும்
கொடியில் உலரும் சிறகு வலையும்

வலையிற் சரியும் சூங்கன் கிளையும்
கிளைமுள் சிலிர்த்த கிழாச்சி மரமும்
கிழாச்சி மரமும் கண்ணாத்தீவும்
தீவுகள் ஏழு சூழ்ந்த என் கரையும்

கரையில் ஓலைக் குடிசை நிரையும்
நிரையாய் சடைத்த ஈச்சை மரமும்
ஈச்சை மரத்தில் பழுத்த குலையும்
குலைகள் தொங்கும் தென்னங்காடும்

காட்டில் மணக்கும் நொச்சிப் பூவும்
பூக்கள் சிரிக்கும் முசுட்டைக் கொடியும்
கொடிகள் படர்ந்த கள்ளி மரமும்
மரங்கள் நட்ட பாட்டன் நினைவும்

பாட்டன் நினைவாய்ப் பருத்த புளியும்
பருத்த புளியின் பரம்பரைக் கதையும்
கதைகள் சொன்ன ஆச்சி முகமும்
முகத்தில் உப்பு படிந்த சனமும்

சனங்கள் வளர்த்த நெய்தல் கலையும்
கலைகள் திரிந்த நரையான் தீவும்
நரையான் தீவின் வீழி ஒதுக்கும்
வீழி ஒதுக்கின் வெள்ளை மணலும்

மணலை அரிக்கும் கிழக்குக் கடலும்
கிழக்குக் கடலில் உதிக்கும் பொழுதும்
பொழுது புதையும் மேற்குப் பனையும்
பனையின் தலையில் நுங்குக் குலையும்

குலைகள் இறக்கும் இருட்டுக் கதையும்
இன்னும்......இன்னும் என்னைப் பிரிந்த

எனது தேச வனப்பும் வனப்பின்
எழிலும் சிறப்பும் காதல் கொண்ட
கடலும் கரையும் எல்லாம் எனக்கு
மீள வேண்டும் மீள வேண்டும்.

பார்க்க, ரசிக்க, பேச, எழுத
சுதந்திர மனுவாய் இவற்றைச் செய்ய
மீண்டும் எனக்கு வேண்டும் இவைகள்

யாரிடம் சென்று விண்ணப்பம் செய்வேன்?
பனிமலைச் சுவரில் பட்டியல் எழுதி
பனிமுகிலிடமா முறையிட்டழுவேன்.

# வன்னியின் வளச் சுரண்டல்கள்

○ சின்னராசு



வன்னியில் வளச்சுரண்டல்கள் பல விதங்களில் நடக்கின்றன. காட்டில் மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள். இதில் முதிரை, பாலை, யாவறணை, நடுகை செய்யப்பட்டிருந்த தேக்கு போன்ற பெறுமதியான மரங்களின் அழிவு மதிப்பிட முடியாதது. முன்னெப்போதையும் விட போருக்குப் பிந்திய சூழலில்தான் இந்த மரங்கள் அதிகளவில் வெட்டப்பட்டுள்ளன. வெளியிடங்களில் இருந்து வந்தவர்கள் காடுகளில் தங்கியிருந்து மரங்களை வெட்டி, கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். வன்னியின் எல்லாப் பிரதேசங்களின் காடுகளிலும் இது நடந்திருக்கிறது. இதைப்பற்றி வன்னியிலுள்ள எல்லோருக்கும் தெரியும்.

வன்னியின் காடுகள் இப்பொழுது படையினரின் கட்டுப்பாட்டிலும் வனவிலங்கு திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுமே உள்ளன. இப்படி இருக்கும்போது எப்படி மரங்கள் வெட்டப்படுகின்றன என்று நீங்கள் கேட்கலாம்.

உங்கள் கேள்வி நியாயமானதே. ஆனால், நியாய மான கேள்விகளுக்கு நியாயமாகப் பதில் உடனடியா கக் கிடைத்து விடுதில்லை.

இதைப்போலதான், மணல் மற்றும் கிரவல் அகழ்வும் கல் அகழ்வும் வன்னியில் தாராளமாக நடந்திருக்கின்றன. சட்டபூர்வமாகவும் இந்த கனிம அகழ்வு நடந்துள்ளது. சட்டவிரோதமாகவும் நடந் துள்ளது. இதிலும் தென்பகுதிப் பிரபலங்களின் கைகளே அதிகமாக மேலோங்கிக் காரியம் பார்த்திருக்கின்றன.

இந்த அதிகரித்த மணல் அகழ்வினால் ஆறுகளின் போக்கே மாறி விட்டது. போருக்குப் பிந்திய சூழலில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களுக்காக என்று பல இடங்களிலும் மிகக் கூடுதலான மணல் அகழ்வு நடந்திருக்கிறது. இந்த அகழ்வைப் பயன்படுத்தி சிலர் லாபங்களைச் சம்பாதித்துள்ளனர். ஆனால், காட்டாறுகளின் வழி பாழடிக்கப்பட்டுள்ளது. அளவையும் விட அதிகமாக மணல் அகழப்பட்டால், அதனால் குளத்துக்கு நீர் வருவது குறையும் என்ற எச்சரிக்கையை நீர்ப்பாசனத் திணைக்களத்தினரும், விவசாயிகளும் விடுத்திருந்தனர். ஆனால், இந்த எச்சரிக்கையை மணல் அகழ்வோர் பொருட்படுத்தவில்லை. இதனால் ஆறுகள் மிக ஆழமான அளவில் தோண்டப்பட்டுள்ளன. இது பாரிய பிரச்சினையை எதிர்காலத்தில் உண்டாக்கும். இதைப்போல கண்ட இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கிரவல் அகழ்வும் வெள்ள நீரைத் தேங்க வைத்துள்ளது. அத்துடன் காடுகளின் அழிவுக்கும் பெரிய விருட்சங்களின் இழப்பிற்கும் வழியேற்படுத்தியிருக்கிறது.

இதைப்போலதான் கற்களும் அகழப்பட்டுள்ளன. வன்னிப்பகுதியில் இருந்த கல் மேடுகள் அத்தனையும் வெளியாட்களிடம் கொடுக்கப்பட்டு, அவர்கள் அவற்றை வெடிவைத்துத் தகர்த்து, அங்கிருந்த கற்களை எல்லாம் அகழ்ந்து எடுத்து விட்டார்கள்.

குமுழமுனை, அக்கராயன் நாலாம் கட்டை, கொக்காவில், ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, கல்மடு, நெடுங்கேணி, கோணாவில், கௌதாரிமுனை என்று பல இடங்களில் இந்த மண், கல், கிரவல் அகழ்வின் தடங்கள் இன்னும் உள்ளன.

இதைப்போல கடல் வளச்சுரண்டலும் இந்திய மீனவர்களாலும் தென்பகுதி மீனவர்களாலும் நடக்கின்றன. இதைப்பற்றி பாராளுமன்றம் தொடக்கம் ஜனாதிபதி மாளிகை வரை எடுத்துச் சொல்லியாயிற்று. ஆனால், சொந்த இடத்தில் உள்ள மீனவர்கள் நிம்மதியாகத் தொழில் செய்ய முடியாத நிலைதான் காணப்படுகிறது. இதைப்பற்றி உரிய இடங்களில் சொல்லும்போது உடனடியாக சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பிறகு எல்லாமே பழைய சங்கதி புதிய கணக்கு என்ற மாதிரித்தான் ஆகிவிடுகின்றன.

இந்த மாதிரித் தொடருகின்ற வளச் சுரண்டல்களால் வன்னியின் பௌதீக வளம் சுரண்டப்படுவதுடன், வன்னி மக்களின் வாழ்வும் சிதையும் அபாய நிலை உள்ளது. இதைக் குறித்த விழிப்புணர்வும் சட்ட நடவடிக்கைகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் அவசியம். அது மிக மிக முக்கியமானது.

# பனை வெல்லம்

**கிடைக்கும் இடங்கள்**

பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்
தலைமைக் காரியாலயம் கரடிப்போக்கு, கிளிநொச்சி.

செந்தமிழ் பல்பொருள் வாணிபம்
கனகபுரம், கிளிநொச்சி.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
கரைச்சி தெற்கு COOP சிற்றி கனகபுரம்
கரைச்சி வடக்கு COOP சிற்றி பரந்தன்

பாரதி உணவகம்,
கனகபுரம், கிளிநொச்சி

கிருபா பல்பொருள் வாணிபம்
155ஆம் கட்டை, கிளிநொச்சி.

வெல்ல உற்பத்தி நிலையம்
வெலிக்கண்டல் சந்தி, கண்டாவளை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
உதயநகர், கிளிநொச்சி.



100%
சுத்தமான
இயற்கை பதநீரில்
தயாரிக்கப்பட்டது



- நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த
- மலச்சிக்கலைத் தடுப்பதற்கு
- கர்ப்பவதிகளின் ஆரோக்கியத்திற்கு

சிறந்த தயாரிப்பு

**பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்
கிளிநொச்சி.**

# கிளிநொச்சி நகரில் .....

- உயர்தர கலர் போட்டோக்கொப்பி High Quality Colour Photo Copy
- உயர்தர கலர் பிறிண்ட் High Quality Colour Print
- லெமினேற்றிங் Laminating
- பக்ஸ் அனுப்புதல் Fax
- ஈமெயில் அனுப்புதல் E.mail
- இணையப் பாவனை Net Browsing
- முகம்பார்த்து கதைத்தல் Skype
- ஸ்கானிங் Scanning
- சீடி றைற்றிங் CD Writing
- கணினி தட்டச்சு, பக்க வடிவமைப்பு Computer Typing, Page Setup
- வாழ்த்து மடல்கள் வடிவமைப்பு Greeting Cards Designing





- விசிற்றிங்காட், சான்றிதழ்கள், அழைப்பிதழ்கள் வடிவமைப்பு Visiting Cards, certificates, Invitation Creating
- புத்தகம் கட்டுதல் Book Binding
- பாடசாலை மாணவர்களுக்கான செயற்திட்டங்கள், அட்டைப்படம் வடிவமைத்தல்





## Maxico
## மக்சிகோ

All Kind OF Computer Printing Work & Net Browsing

சகல விதமான கணினி பிறிண்டிங் வேலைகள், இணையத்தள பாவனை.

Opp - To Kachcheri, A9 Road, Kilinochchi. கச்சேரி முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.

Phone & Fax : 0212285608. E.mail: maxico5608@hotmail.com